
# அல்லல் அறுப்போம்

## கட்டுரைகள்




ஊடகவியலாளர்

**வடமலை ராஜ்குமார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்லல் அறுப்போம்

(கட்டுரைகள்)

வடமலை ராஜ்குமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | அல்லல் அறுப்போம் |
| ஆசிரியர் | : | திரு. வடமலை ராஜ்குமார் |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | : | 2017 |
| பதிப்பு விபரம் | : | முதற்பதிப்பு |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| நூலின் அளவு | : | கிரௌன் சைஸ் (12 X18 செ.மீ) |
| மொத்த பக்கங்கள் | : | X + 95 = 105 |
| நூலின் விலை | : | 300/= |
| அச்சிட்டோர் | : | எஸ் எஸ் டிஜிட்டல்'ஸ் திருகோணமலை, |
| வெளியிட்டோர் | : | சுஹாதி பிரசுரம் |
| ISBN | : | 978-955-43938-0-6 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

இந்த மண்ணில் நான்
மகிழ்வுடன் வாழ
என்னை ஈன்று ஆளாக்கிய
எனது பெற்றோர்

**திரு. திருமதி. வடமலை வள்ளிநாயகி**

அவர்களுக்கும்
இந்த சமூகத்தில் நான் தலை நிமிர்ந்து வாழவும்
ஊடகத்துறையில் நான் பிரவேசிக்கவும் எனக்கு
வழிகாட்டியாகவும் உறுதுணையாகவும் இருந்து
இறையடி சேர்ந்த விழுது நிறுவன ஸ்தாபகர்

**அமரர். சாந்தி சச்சிதானந்தம்**

அவர்களுக்கும்
இந்நூல் சமர்ப்பணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுரைத்தொகுப்பு


1. சம்பூர் மக்களுடைய அடிப்படை பிரச்சினைக்கு தீர்வு வருமா? 01

2. 60 வருடம் வாழ்ந்த உள்ளூராட்சி மன்ற தொழிலாளர்களின் நிலஉரிமை கை கூடுமா? 04

3. சின்னக்குளம் கிராமத்தின் குடிநீர்ப் பிரச்சினை தீருமா? 11

4. விலங்குகள் இல்லாத இடத்தில் வனவிலங்கு சரணாலயம் 14

5. கன்னியாவில் கிரியைகள் செய்வதற்கு ஒத்துழைப்பில்லை 16

6. புனர்வாழ்வுக்கு சென்று வந்த முன்னால் போராளிகளின் வாழ்வாதாரம் கேள்விக்குறி 19

7. மீள்குடியேற்றப்பட்டும் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் தென்னை மரவாடி கிராமம் 24

8. மத்திய கிழக்கு செல்வது இதற்காகவா? தொடரும் கொடுமைகளுக்கு முடிவு என்ன? 28

9. பணம் கொடுத்து குடிநீர் வாங்கும் ஆயிலையடி கிராம மக்கள் 34

10. வாழ்வுக்கும் சாவுக்கும் இடையே போராடும் கோமரங்கடவெல மக்கள் 39




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. அரை நூற்றாண்டுக்கு மேல் வாழும் விளாங்குளம் கிராம மக்களின் காணி உறுதி சாத்தியமாகுமா? 45

12. போர் உருவாக்கிய விதவைகள் 49

13. பல தலைமுறைகளாக சீரற்ற வாழ்வில் சிக்குண்ட மூதூர்-பாட்டாளிபுரம் கிராமம் 55

14. மூதூர் கிழக்கு கூனித்தீவு நவரெட்ணபுரத்தின் மீள்குடியேற்றமும் அடிப்படைப் பிரச்சினைகளும் 62

15. வெருகல் இலங்கைத்துறை முகத்துவார மீனவர்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு கிட்டுமா? 66

16. திருமலையை ஆக்கிரமிக்கும் வெளி மாவட்ட மீனவர்கள் 70

17. கடன் வழங்கும் நிறுவனங்களின் வருகையும், திருகோணமலை பெண்களின் வறுமையும் 75

18. சட்ட விரோத மணல் அகழ்வால் மூதூர் இறால்குழி கிராமம் பாதிப்பு 83

19. விடியல் காணும் சம்பூர் 87

20. சட்ட விரோத மீன்பிடி முறையால் பாதிக்கப்படும் திருகோணமலை வாழ் மீனவர்கள் 90



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

இளம் ஊடகவியலாளர் திரு. வடமலை ராஜ்குமார் அவர்கள் பத்திரிகைகளுக்கு எழுதிய கட்டுரைகளின் தொகுப்பான **"அல்லல் அறுப்போம்"** என்ற இந்நூலைக் கண்ணுற்றோம்.

திரு. வடமலை ராஜ்குமார் ஒரு சுறுசுறுப்பான இளம் பத்திரிகையாளர் காலத்தின் தேவையறிந்து செய்திகளை அறிக்கையிடக் கூடிய ஆளுமையும் பக்குவமும் கொண்டவர். எளிய வடிவில் செய்திகளையும் புகைப்படங்களையும் வாசகர்களுக்கு கொண்டு சேர்க்கும் ஆற்றல் கொண்டவர். இவருடைய பத்திரிகைப்பணி எமது மாவட்டத்திற்கு தேவையானது என்றால் அது மிகையாகாது.

தினக்குரல், தினகரன், தமிழ்மிரர் ஆகிய இலங்கையின் பிரபலமான பத்திரிகைகளுக்கு பிராந்திய செய்தியாளராக பணியாற்றுவதுடன் காலத்தின் தேவை அறிந்து எமது மக்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து தெளிவான கட்டுரைகளாகவும் அவ்வப்போது தேசிய பத்திரிகைகளில் எழுதி வருகின்றார்.

சமூகம், கலாச்சாரம், அரசியல், சமயம், விளையாட்டு போன்ற பல விடயங்களை செய்தியாக பொது மக்களுக்கு உடனடியாக கொண்டு சேர்ப்பதில் தனது பணியை சரிவரச் செய்யக்கூடிய பொறுப்பு மிக்கவர்.

ஒவ்வொரு காலப்பகுதியிலும் எமது மாவட்டத்தில் இடம்பெற்ற சில மறக்க முடியாத சம்பவங்களையும் எம் மக்கள் அல்லலுறும் பல்வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினைகளையும் அதிகமாக தனது கட்டுரைகளில் பதிவு செய்துள்ளார்.

திருகோணமலையில் இடம் பெற்ற காணி அபகரிப்புக்கள், மத ஸ்தானங்களின் ஆக்கிரமிப்பு மீள் குடியேறிய மக்களின் அடிப்படைப் பிரச்சினை, மீனவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினை, பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் பிரச்சினை மற்றும் அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்யப்படாத எம் மக்களின் அவலங்களை தமது கட்டுரையில் பதிவு செய்துள்ளார்.

இக் கட்டுரைகள் அநேகமானவை அண்மையில் வெளிவந்தவை என்பதனால் இந்நூலைவாசிக்கும் போது இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ள பல பிரச்சினைகளையும் தீர்வு காண நாம் ஒன்றிணைந்து சிந்திக்க வேண்டியவர்களாகவும் உள்ளோம் என்பதை உணரமுடிகிறது.

காலத்தின் பிரச்சினையையும் சிக்கல்களையும் சூழ்நிலைகளையும் எடுத்துரைக்கும் ஒரு பத்திரிகையாளனின் எழுத்துக்கள் காலத்தையும் தாண்டி நிற்கும். இன்று ஊடகவியலாளர் வடமலை ராஜ்குமார் அவர்கள் எழுதிய கட்டுரைகளும் எதிர்கால சந்ததிகளுக்கு எம் இனத்தின் இக்கால கட்டத்தின் நிலையினை உணர்த்தும். இவ்வாறான பணியை இவர் தொடர்ந்து முன்னெடுக்க எனது வாழ்த்துக்களும் ஒத்துழைப்பும் என்றும் இருக்கும்.

**திரு. சி. தண்டாயுதபாணி**
கல்வி, தகவல், தொழில்நுட்பக்கல்வி, முன்பள்ளிக்கல்வி,
விளையாட்டு, பண்பாட்டு, அலுவல்கள்,
இளைஞர் விவகாரம், புனர்வாழ்வு மற்றும்
மீள்குடியேற்ற அமைச்சர்
கிழக்கு மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

வணக்கம்! தான் பிறந்த மண்ணில் ஒவ்வொரு காலத்திலும் நடக்கும் சம்பவங்களை தமது சந்ததிகளுக்கு எடுத்துரைக்கும் பணி இம்மண்ணில் பிறந்த ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டிய பொறுப்பு. அதனை ஒவ்வொரு கலைஞனும் தனக்கு தெரிந்த முறைகளில் பதிவுகளாக்குவது வழக்கம்.

அதனடிப்படையில் என்னுடைய காலத்தின் பதிவின் முதலாவது அடியாக **"அல்லல் அறுப்போம்"** எனும் இப்புத்தகத்தை வெளியிடுகிறேன். கடந்த ஆண்டுகளில் திருகோணமலை எதிர்கொண்ட மற்றும் இன்றுவரை முற்றுப்பெறாத பிரச்சினைகள் சிலவற்றை இப்புத்தகத்தில் கட்டுரைகளாக பதிவு செய்துள்ளேன். ஒவ்வொரு காலப் பகுதியிலும் ஏற்படும் பிரச்சினைகளை நான் ஒரு ஊடகவியலாளன் என்ற அடிப்படையில் பத்திரிகைகளுக்கு அறிக்கையிட்டுள்ளேன். அவ்வாறு வெளியான கட்டுரைகளின் தொகுப்பே எனது அல்லல் அறுப்போம் எனும் நூலாகும்.

15 வருடங்களுக்கு மேலாக மக்கள் பணியில் அரசசார்பற்ற தொண்டு நிறுவனப் பணியாளனாக இருந்து வந்த எனக்கு நான் காணும் பிரச்சினைகளை ஊடகங்கள் மூலமாக வெளிப்படுத்த வேண்டும் என்ற ஏக்கம் என்னுள் நீண்ட நாளாக இருந்து வந்தது.

அதற்கான சிறந்த களமாக அமைந்தது நான் தற்போது பணியாற்றி வரும் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம். இது கொழும்பில் உள்ள பிரபல ஆவணப்படுத்தல் படத்தயாரிப்பு நிறுவனமாக யங் ஏசியா ரீவி மூலம் தொலைக் காட்சி செய்தியாளருக்கான 03 மாத முழு நேர டிப்ளோமா பயிற்சி நெறியில் கற்கும் வாய்ப்பை எனக்கு வழங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்திருந்த எனக்கு களம் கிடைத்தமைக்கு காரணமாக இருந்த விழுது நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று பணிப்பாளராக இருந்த அமரர். சாந்தி சச்சிதானந்தம் அவர்களுக்கும் இன்று அந்நிறுவனத்தை வழிநடத்தி வரும் நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் திருமதி.ஹ.இந்துமதி அவர்களுக்கும் என்றும் எனது நன்றிகள் உரித்தானவை.

அவ்வாறு நான் பயிற்சி பெற்று வெளியான சில மாதங்களிலேயே "இருக்கிறம்" வார இதழுக்கு எனது செய்திகளையும் ஆக்கங்களையும் எழுதி வந்தேன். மேலும் 03 ஆவணப்படங்களை இயக்கி தேசிய சுயாதீன தொலைக்காட்சியில் ஒளிபரப்பினேன்.

இந்நிலையில் தினகரன் பிரதம ஆசிரியர் எஸ்.தில்லைநாதன் அவர்களுடைய முயற்சியால் தினகரன் பத்திரிகையில் பிராந்திய செய்தியாளராக இணைந்தேன். தொடர்ந்து திருமலையின் மூத்த ஊடகவியலாளர் திருமலை நவம் அவர்களின் உதவியுடன் தினக்குரல் பத்திரிகை செய்தியாளராகவும் என்னை இணைத்துக் கொண்டேன். இவர்கள் இருவருக்கும் எனது நன்றிகளை இந்த உரையின் மூலம் தெரியப்படுத்துவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

இவ்வாறு தொடரும் எனது ஊடகப் பயணத்தில் எனது மண்ணில் உள்ள மக்களின் அவலங்களை சம்பந்தப்பட்ட தரப்புக்கு எடுத்துரைத்து ஞாபகமூட்டி அழுத்தம் கொடுக்கும் பணியாக வாராந்த பத்திரிகைகளில் எனது கட்டுரைகளை எழுதி வருகின்றேன். இவற்றில் சில பிரச்சினைகளை சேர்க்க வேண்டியவர்கள் செவிக்கு சேர்த்துள்ளேன். சில தீர்வுகள் நோக்கி நகர்கிறது என்பது என்னை பெருமை கொள்ள வைக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான இந்நூலினை நான் வெளியிட இந்நூலுக்கு அணிந்துரை எழுதிய கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் சி. தண்டாயுதபாணி அவர்களுக்கு எனது நன்றிகளை தெரிவிக்கின்றேன். அதுபோல நீண்ட காலமாக தொண்டர் நிறுவனப் பணியில் இருந்த போது எனக்கு வழிகாட்டியாக இருந்த சிரேஸ்ட ஊடகவியலாளர் பொ. சற்சிவானந்தம் அவர்கள் நூலாசிரியர் பற்றி எழுதியமைக்கும் எனது நன்றிகள். பல வேலைப் பளுக்களுக்கு மத்தியில் எனது நூலை வடிவமைத்து அச்சிட்டு தந்த அச்சக உரிமையாளர் மற்றும் உத்தியோகத்தர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் கவி ஆளுமையும் ஆர்வமும் உடைய எனது மனைவி சுபத்ரா அவர்கள் இவ்வாறான கட்டுரைப் புத்தகம் ஒன்றை வெளியிட வேண்டும் என எனக்கு ஊக்கமளித்து உறுதுணையாக இருந்தார். அவர்களுக்கும் இந்த உரை மூலம் நன்றி தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி கொள்கின்றேன்.

இந்நூலினை நடுவர்களான வாசகர்கள் உங்களிடமே சமர்ப்பிக்கிறேன். இந்நூலின் நிறை குறைகளையும் உங்களிடம் இருந்து எதிர்பார்த்தவனாக இன்னுமொரு படைப்பில் மீண்டும் உங்களுடன் உரையாடுவேன் என்ற நம்பிக்கையோடு.......

வடமலை ராஜ்குமார்
ஊடகவியலாளர்
இல. 93, காந்திநகர்,
அன்புவழிபுரம்,
திருகோணமலை.
தொ. பே : 0771858039



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பூர் மக்களுடைய அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு வருமா?

யுத்தத்தின் போது தமிழர்கள் தமது சொந்த நிலத்தில் இருந்து விரட்டப்பட்டு அவ்விடத்தை அரசாங்கம் சுவீகரித்த சம்பவத்தில் மிகவும் பிரபலமான சம்பூர் நிலத்தில் பல தடைகளுக்கு மத்தியில் நிலங்களுக்கு உரிய பூர்வீக மக்களை குடியேற்றும் விடயமானது தற்போது துளிர்விட ஆரம்பமாகியுள்ளது.

இதில் எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலின் பின் என்ன நேரும் என்ற சிறு அச்சம் அம் மக்கள் மனங்களில் இல்லாமல் இல்லை. கெட்வே நிறுவனத்தின் வழக்கு தொடர்பாக சம்பூர் மக்களுக்கான சாதகமான தீர்ப்பு ஒன்று கிட்டிய நாளாக ஜீலை 10ம் திகதி இருந்த போதும் திருகோணமலை அரசாங்க அதிபரால் உத்தியோகபூர்வமாக இம் மக்களை குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டதோ ஜீலை 21ம் திகதி ஆகும். அதன் போது அரசாங்க அதிபர் என். ஏ. ஏ. புஸ்பகுமார அவர்களால் மக்களுக்கு தமது இடங்களை துப்பரவு செய்து வேலிகளை அமைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அன்று முதல் மக்கள் தமது காணிகளை துப்புரவு செய்து குடியேறும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறு 818 ஏக்கர் நிலத்தில் 315 குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளனர். ஆயினும் கெட்வே நிறுவனத்திற்கு சொந்தமான தற்காலிக அலுவலகமாக இருந்து வந்த இரண்டு கெண்டைனர்கள் இன்னும் அவ்விடத்தை விட்டு அகற்றப்படவில்லை அவ்விடயம் தொடர்பாக கிழக்கு மாகாணஆளுனர் அவர்கள் நேரடியாக வந்து பார்வையிட்டு புகைப்படங்கள் எடுத்து சென்றுள்ளார். சில தினங்களுக்குள் கெட்வே நிறுவனத்தால் அந்த கெண்டைனர்களைஅகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என ஆளுனர் தெரிவித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில் சம்பூரில் கடற்படை பயிற்சி முகாம் அமைந்திருந்த 237 ஏக்கர் நிலத்தில் 20 ஏக்கர் விடுவிக்கப்பட்டுள்ளது. இம் மாதமான ஆகஸ்ட் மாதம் 30ம் திகதிக்குள் மேலும் 30 ஏக்கர் நிலத்தை விடுவிப்பதுடன் இன்னுமொரு தடவை கணிசமான ஏக்கர் காணிகளையும் மூன்றாவது தடவை முழுமையான நிலத்தையும் விடுவிப்பதாக அக்கடற்படை முகாமின் உயரதிகாரி தெரிவித்துள்ளார். இவை அனைத்தும் எதிர் வரும் மூன்று மாதகாலத்திற்குள் இடம்பெறும் எனவும் தெரிவித்துள்ளார்கள் என தெரியவருகிறது.

இவ்வாறு தமது சொந்த முயற்சியில் காடுகளை வெட்டி துப்பரவு செய்துவரும் மக்களுக்கு தற்காலிகமான ஒரு கொட்டகை அமைப்பதற்கு கூட அரசாங்கமோ அல்லது அரசசார்பற்ற அமைப்புக்களோ நடவடிக்கை எடுக்கவில்லை ஆயினும் கிழக்கு மாகாண மீள்குடியேற்ற அமைச்சின் மூலமாக மாகாணத்தில் பணியாற்றும் திணைக்களங்கள் மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்கள் ஆகியவற்றை ஒருங்கமைத்து பல பணிகளை முன்னெடுக்க திட்டமிட்டு வருகின்றனர்.

தற்போது மக்கள் தமது செலவில் சிறு கொட்டகைகளிலும் படங்குகளில் குடிசைகளும் அமைத்து அங்கு நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் குடியிருந்தாலும் அங்கு அவர்களுக்கான அடிப்படை வசதிகள் பல குறையாகவே உள்ளன.

குடிநீரைப் பொறுத்தவரையில் மூதூர் பிரதேச சபையால் தாங்கிகள் வைக்கப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது. அவ்வாறு வைக்கப்பட்டுள்ள தாங்கிகள் குறைவு என்பதால் குடிநீர் தட்டுப்பாடு நிலவுகின்றது. மலசல கூடங்கள் இல்லாத காரணத்தால் மக்கள் பல்வேறு சிரமத்திற்கு உள்ளாகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்து கிணறுகள் மாத்திரமே துப்புரவு செய்யப்பட்டுள்ளன. அன்றாட தேவைகளை தற்போது அக்கிணறுகள் மூலமாக நிறைவு செய்து வருகின்றனர். எனினும் அப்பகுதி மக்களின் பிரதான ஜீவனோபாய தொழில் விவசாயம் என்பதால் அவர்களுடைய காணிகளில் இருந்து மூடப்பட்ட கிணறுகள் தோண்டப்பட வேண்டும் அல்லது புதிய கிணறுகளை அமைத்து வழங்கவேண்டும். காணிகளை அடையாளம் கண்டுள்ள சம்பூர் மக்கள் தற்காலிக வேலிகளை அமைக்க முட்கம்பிகள் தேவையாகவுள்ளது என தெரிவிக்கின்றனர்.

200க்கும் அதிகமான மாணவர்கள் தற்போது சேனையூர் கிராமத்தில் இயங்கிவரும் சம்பூர் மகாவித்தியாலயத்தில் கல்விகற்று வருகின்றனர். இப்பாடசலைக்கு சென்று வர 04 கிலோமீட்டர் தூரம் பயணிக்க வேண்டியுள்ளது. எனவே போக்குவரத்து தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி பாடசாலை சமூகங்கள் கருத்து தெரிவிக்கின்றன.

சர்வதேச ரீதியாக பிரபலமான சம்பூர் மக்களுடைய காணி தொடர்பான பிரச்சினைக்கு 50 வீதமான தீர்வு கிட்டப்பட்ட போதும் 08 வருடகாலம் முகாம்களில் அகதியாக வாழ்ந்த இம் மக்கள் தாமாக மீண்டும் தமது வாழ்வாதாரத்தையும் உட்கட்டமைப்பு வசதிகளையும் கட்டியெழுப்புவது என்பது மிகவும் கடினமான ஒரு காரியமாகும். எனவே அவர்களுடைய அடிப்படை பிரச்சினையில் அரசாங்கமும் அரசசார்பற்ற நிறுவனங்களும் கூடிய சிரத்தை எடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

ஞாயிறு தினக்குரல் 16 ஆகஸ்ட் 2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 60 வருடம் வாழ்ந்த உள்ளூராட்சிமன்ற தொழிலாளர்களின் நில உரிமை கைகூடுமா?

அன்னிய நாட்டவர் நமது தேசத்தை ஆட்சி செய்த போது எமது தாய் தமிழகத்தில் இருந்து தொழிலாளர்களாக இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட தமிழ் மக்கள் இலங்கையின் ஒவ்வொரு மாகாணத்திலும் தொழில் நிமித்தம் தங்க வைக்கப்பட்டனர். அவ்வாறு 1948 காலப்பகுதியில் கிழக்கு மாகாணம் திருகோணமலையில் இந்திய வம்சாவழி மக்கள் தங்க வைக்கப்பட்ட கிராமங்களில் சில திருகோணமலை நகரின் வைத்திய சாலை பகுதியும் நகர்ப்புறப் பகுதியான அனுராதபுர சந்தி எனப்படும் பகுதியுமாகும்.

இக்காலப்பகுதியில் உள்ளூராட்சி மன்றங்களின் தொழிலாளிகளாக பணியாற்றிய அம்மக்கள் காலப்போக்கில் தமது திறமைக்கு ஏற்ப வேலைப்பகுதி மற்றும் நகர சுத்திகரிப்பு தொழிலாளர்களாகவும் நடாத்தப்பட்டனர். அக்காலப்பகுதியில் அவர்களுக்கு இலங்கை நாட்டின் பிரஜா உரிமை வழங்கப்பட வில்லை.

இவ்வாறு நீண்ட காலமாக இப்பகுதிகளில் இருந்து வந்த இம் மக்கள் தத்தம் பகுதிகளில் நிரந்தர குடியிருப்பாளர்களாக மாறினார்கள். அதன் பின் தாம் வாழும் பகுதிகளின் தனித்துவம் பாது காக்க வேண்டும் என எண்ணி தமது கிராமங்களுக்கு காந்திநகர் அண்ணாநகர் என்ற இந்தியாவின் பெருந் தலைவர்களின் பெயரை சூட்டினார்கள்.

அன்று பிரஜாவுரிமை இல்லாததால் இவர்களுக்கு நிலங்களை தமது பெயர்களில் கொள்வனவு செய்யவோ அல்லது கல்வித் தகைமையின் அடிப்படையில் நாகரீக மான அரசாங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைகளில் இணைந்து கொள்ளவோ முடியாமல் இருந்ததால் அம் மக்கள் தமக்கு விதிக்கப்பட்ட தொழில் இதுவே என உள்ளூராட்சி மன்ற தொழிலாளர்களாக இரண்டு தலைமுறைகளுக்கு மேல் தமது காலத்தைக் கழித்தனர்.

மேலும் 1993ம் ஆண்டளவில் திருகோணமலை பொது வைத்திய சாலையை தரம் உயர்த்தவும் விடுதி வசதிகளை அதிகரிப்பதற்காக கட்டடங்களை நிறுவுவதற்காக அண்ணாநகர் கிராம மக்கள் திருகோணமலை பட்டணமும் சூழலும் (உப்புவெளி) பிரதேச சபைக்கு உட்பட்ட பாலையூற்று பகுதியில் உள்ள பூம்புகார் கிழக்கு எனும் பகுதியில் எவ்வித அடிப்படை வசதிகளும் அற்ற நிலையில் குடியேற்றப்பட்டனர்.

அன்று முதல் இன்று வரை அம்மக்கள் அக்கிராமத்தில் போதிய அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் வாழ்ந்து வருகின்றனர். இக்கிராமத்தில் குடியிருப்பவர்கள் 245 குடும்பங்களாக இருந்த போதும் 215 பேருக்கு மட்டுமே இக்கிராமத்தில் காணிகள் உள்ளது. இவற்றில் 35 குடும்பங்கள் குடியிருக்கும் காணிகளுக்கு மட்டுமே திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலகத்தால் காணி உறுதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. ஏனைய குடியிருப்பாளர்கள் இருக்கும் காணிகள் துறைமுக அதிகார சபைக்கு சொந்தமான காணிகள் என கூறப்பட்டு இவற்றுக்கான உறுதிப் பத்திரங்கள் வழங்கப்படாமல் உள்ளது.

மேலும் பிரதானமாக 05 வீதிகளும் 10 குறுக்கு வீதிகளும் உள்ள இக்கிராமத்தில் இவ்வளவு காலமும் கடந்த ஆட்சியில் செய்யப்பட்ட பாரிய வீதி அபிவிருத்தி திட்டத்தில் 02 வீதிகள் மட்டுமே அமைக்கப்பட்டுள்ளது. இப்பகுதியானது உயரமான மலைப் பிரதேசம் என்பதனால் வீதிகளும் வடிகான் வசதிகளும் ஒழுங்காக இல்லாமையால் இம் மக்கள் மழை காலங்களில் சிரமத்தை அனுபவிக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு அனுராதபுர சந்தி எனும் இடத்தில் இருந்த இம்மக்கள் அன்று வாழ்ந்த பகுதி திருகோணமலை நகரசபைக்கான வாகனம் நிறுத்தும் இடமாக இருந்தது.

தற்போது காந்திநகர் கிராமமாகவுள்ள இப் பகுதியில் நகரசபை விடுதிகள் அமைத்து நகரசபை தொழிலாளர்கள் குடியிருப்பாகவும் ஆங்காங்கே சிலர் நகரசபை காணிகளில் குடியிருப்புக்களை அமைத்தும் வாழ்ந்து வந்தனர். இவ்வாறு இருந்து வருகின்ற மக்களுடைய காணிகளை அம்மக்களுக்கே வழங்க வேண்டும் என திருகோணமலை நகரசபையின் தலைவராக இருந்த அமரர் சூரிய மூர்த்தி (1994-1999 ) அவர்கள் சபை தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி அம்மக்களுடைய காணிகள் அனைத்தும் தலா 06 பேர்ச் வீதம் வழங்கப்பட்டது. இவ்வாறு வழங்கபட்ட காணிகளில் உள்ளூராட்சி மன்ற தொழிலாளர் அல்லாத ஏனைய மக்களுக்குமாக 288 காணிகள் பகிரப்பட்டது. இவ்விடயத்தில் இக்கிராமங்களின் முன்னோடியாக இருந்த சிலருக்கும் காணிகளை பகிர்ந்து வழங்கியவர்கள் சிலரின் முறையற்ற நடவடிக்கையால் முறுகல் நிலையும் அன்று ஏற்பட்டது. அவ்வாறு வழங்கப்பட்ட காணிகளின் மூலம் நிரந்தர கட்டங்களை கட்டுவதற்கும் குடிநீர் இணைப்பை பெறுவதற்கும் மின் சார வசதியை பெற்றுக் கொள்வதற்குமான அனுமதி மட்டுமே வழங்கப்பட்டிருந்தது.

அதன் பின்னர் தமிழ் தேசிய கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு நகரசபையை கையகப்படுத்தி தலைவராக பொறுப்பேற்ற சண்முகராசா கௌரிமுகுந்தன் (2006-2010) அவர்கள் தனது முயற்சியினால் இவ்வாறு வழங்கப்பட்ட நகரசபைக்கு சொந்தமான காணிகளுக்கு முறையான ஒரு ஆவணத்தை வழங்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் அரசாங்க அச்சகத்தில் அச்சிடப்பட்ட உறுதி ஆவணம் பதிவாளர் அலுவலகத்தின் மூலம் பதிவு செய்யப்பட்டு காணி உறுதிப் பத்திரம் ஒன்று வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விதமாக வழங்கப்பட்ட ஆவணத்தை வழங்குவதற்கு அன்றைய சபையில் நகரசபையின் உறுப்பினர்களாக இருந்த சிலர் எதிர்ப்பு தெரிவித்ததாகவும் அதனை எல்லாம் பொருட்படுத்தாது நியாயமான முறையில் இம் மக்களுக்கு கிடைக்க வேண்டிய இந்த ஆவணம் நில அளவையாளரின் செலவு மற்றும் காணிப்பதிவுக்கான சில செலவுகளுடன் அம் மக்களுக்கு வழங்கப்பட்டது.

இவ்வாறு காந்திநகர் மட்டுமல்லாது. முன்னைய அண்ணாநகரில் வாழ்ந்த சிலரும் தமது விடா முயற்சியின் நிமித்தமும், அவற்றில் சில இளைஞர்கள் கடற் தொழிலையும் நம்பி வாழ்பவர்கள் என்ற கருத்தை முன் வைத்தும் நீதி மன்ற வீதியில் உள்ள மாட்டு மால் எனப்படும் திருகோணமலை நகரசபையால் கேள்வி அடிப்படையில் வழங்கப்படும் இறைச்சி கடைகளுக்கான ஆடு மாடுகளை கொன்று இறைச்சியாக்கும் இடம் உள்ள கொல்களம் பகுதியில் இருந்த மேலதிக காணியையும் இவ்வாறு உள்ளூராட்சி மன்ற தொழிலாளர்களின் குடும்பங்களுக்கும் ஏனைய சில மக்களுக்கும் பகிர்ந்து வழங்கப்பட்டது. அவர்களுக்கும் காந்திநகர் காணிகளின் ஒழுங்கிலேயே ஆவணங்களும் காணி வரைபடங்களும் வழங்கப்பட்டுள்ளன.

மீண்டும் 2010- 2015 வரையான காலத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் அதிகாரத்தின் கீழ் நகரசபை இருந்த போது அப்போதைய தலைவராக இருந்த க.செல்வராஜா அவர்களுடைய காலத்தில் மீண்டும் ஒரு பிரச்சினை எழுந்தது. இந்த காணிகளுக்கு ஏனைய குடியிருப்பாளர்கள் நகரசபைக்கு வழங்கும் வரி நடைமுறையை பின் பற்றுவதன் மூலம் இக்காணிகளின் உரித்தை மேலும் வலுவடைய செய்வதுடன் நகரசபையால் அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கும் போது தமது கிராமங்களையும் உள்வாங்கிக் கொள்ளுமாறு நகரசபையை கோரிய இம் மக்களுக்கு ஏமாற்றமே எஞ்சியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு 1948 முதல் வாழ்ந்து வந்த மக்களுக்கு இந்நடைமுறையின் மூலம் இக்காணி உறுதியை மேலும் வலுவாக்கி வரிகளை அறவிடும் நடவடிக்கைக்கு நகரசபை அரசியல் வாதிகளும் அதிகாரிகளும் முட்டுக்கட்டையாக நின்றதுடன் இம்மக்களுக்கு கிடைக்க வேண்டிய நியாயமான உரிமையையும் புறக்கணித்தனர்.

நகரசபைக்கு வரி செலுத்தும் ஆவணம் இல்லாமையால் நகரசபை நூலகம் மற்றும் ஏனைய சில அமைப்புக்களில் அங்கத்தவராக இணைய முடியாமல் அக்கிரமங்களில் குடியிருக்கும் மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கு அந்த ஆவணம் தடையாக இருந்தது. மேலும் நகரத்தையும் நகரை அண்டிய பகுதிகளிலும் வாழும் இக்கிராம மாணவர்களை நகரில் உள்ள பிரபல பாடசாலைகளில் முதலாம் தரத்தில் மாணவர்களை சேர்ப்பதானால் அதற்கும் நகரசபையின் இந்த வரிப்பத்திரத்திற்கு குறிப்பிட்ட புள்ளிகள் இடப்படுகின்றது. அந்த வாய்ப்பையும் இம் மக்கள் இழக்கின்றனர். மேலும் இவ்வாறு வழங்கப்பட்ட தமது காணிக்குள் தாம் விரும்பியவாறு ஒரு வீட்டை கட்டுவதானால் அதற்கு அனுமதி பெறுவதற்கும் இந்த வரி செலுத்தும் ஆவணம் தேவையாக உள்ளது.

இந்த நிலையில் கடந்த மூன்று மாத காலத்திற்கு முன்னர் கிழக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சர் சி.தண்டாயுதபாணி அவர்களின் கவனத்திற்கு இப்பிரச்சினையை கொண்டு போனதற்கு அமைய அப்பிரச்சினைகளுடன் நேரடியாக சம்மந்தபட்ட கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்ற அமைச்சரும் முதலமைச்சருமான ஹாபீஸ் நசீர் அகமட் மற்றும் முதலமைச்சரின் செயலாளர் உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் நகரசபை செயலாளர் ஆகியோருடன் கல்வி அமைச்சர் மற்றும் அக்கிராத்தின் கிராம அபிவிருத்தி சங்க பிரதிநிதிகள் மற்றும் சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் சிலரும் சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலந்துரையாடிய போது அதில் எடுக்கப்பட்ட தீர்மானம் வரி அறவிடும் பணியினை உடனடியாக நகரசபை மேற்கொள்ளும் அவ்வாறு அறவிடப்படும் வரிகளுக்கான பணம் அறவிடும் பற்றுச் சீட்டை நகர சபை அக்கிராமத்தின் குடியிருப்பாளர்களின் பெயரிலேயே வழங்கும். ஏனைய நடவடிக்கைகளான கோவையில் பெயர் மாற்றுவதை நகரசபை படிப்படியாக மேற் கொள்ளும் என்று தீர்மானம் பெறப்பட்டது இந்த உத்தியோக பூர்வ கூட்டத்தின் தீர்மானத்தையே உரிய அதிகாரிகள் மேற் கொள்ளவில்லை என்ற ஆதங்கத்தில் இந்த கலந்துரையாடல்களில் கலந்து கொண்ட கிராம மட்ட தலைவர்கள் விரக்தியடைந்துள்ளனர்.

எனினும் இதனை மீண்டும் கிழக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சர் சி.தண்டாயுதபாணி அவர்களின் ஊடாக தற்போதய எதிர் கட்சித்தலைவரும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. இப்பிரச்சினைக்கு இரண்டு வார காலத்தில் முடிவு கிட்டும் என அவர்கள் உறுதியளித்துள்ளனர்.

இவ்வாறு கடந்த 60 வருடங்களுக்கு மேல் நில உரிமைக்காக போராடிவரும் இம் மக்கள் ஆட்சியாளர்களால் விசேடமாக கவனிக்கப்பட வேண்டியவர்கள் என்பதற்கு சில நியாயங்கள் உள்ளது. நீண்ட காலமாக பிரஜாவுரிமை இல்லாமல் வாழ்ந்து வந்த இம் மக்கள் தமக்கான எந்த ஒரு காணியையும் உரிமையாக்கிக் கொள்ளவில்லை இதனால் காணி என்ற ஒரு சொத்தை இம் மக்கள் இழந்துள்ளனர்.

தற்போது 2010 ம் ஆண்டுக்கு பிறகு நகரசபை வழங்கிய இந்த காணியே இவர்களின் முதலாவது காணிச் சொத்து. எனவே இவ்வாறு உள்ள மக்கள் பொருளாதாரம் சமூக முன்னேற்றம், உட்கட்டமைப்பு போன்ற எல்லாவற்றிலும் ஏனைய சமூக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களுடன் ஒப்பிடும் போது பல ஆண்டுகள் பின் நிற்கின்றனர். எனவே ஏனைய சமூக மக்களுடன் போட்டி போட்டு தொழில் வாய்ப்பு பரீட்சையில் சித்தியடைய வளங்கள் இல்லை. பொருளாதாரம் இல்லை. இவ்வாறே பல்கலைக்கழக அனுமதியிலும் தொழிற்கல்வி அனுமதியிலும் விசேட ஏற்பாடு ஒன்று இம் மக்களுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டும்.

இவ்வளவு பிரச்சினைகளும் தேவைகளும் உள்ள இம்மக்களுக்கு நியாயமாக கிடைக்க வேண்டிய உரிமைகளில் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் பலர் இவ்விடயத்தை வைத்து அரசியல் நடத்தியதும் நடத்துவதும் ஆரோக்கியமான செயற்பாடு இல்லை என இக்கட்டுரையாளன் என்ற அடிப்படையில் எனது கருத்தை முன்வைக்கின்றேன்.

❖❖❖❖

ஞாயிறு தினக்குரல் 27 செப்டெம்பர் 2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னக்குளம் கிராமத்தின் குடிநீர்ப் பிரச்சினை தீருமா?

குளம் கிணறுகள் வற்றியுள்ள இன்றைய நிலையில் கால் நடைகளுக்கும் குடி நீரில்லை. மக்களுக்கும் குடிநீர் இல்லை. ஆனால் இதை உரியவர்களுக்கும் ஊடகங்களுக்கும் அறிவித்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கும் அதிகாரிகள் வாழும் பகுதிகளில் இந்த குடிநீர் பஞ்சம் ஏற்படாதது தான் காரணமோ? என்று என்னைப் பார்த்து கேட்டார் மூதூர் பிரதேச செயலகத்தின் பள்ளிக்குடியிருப்பு கிராம சேவகர் பிரிவில் உள்ள சின்னக்குளம் கிராமத்தின் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க செயலாளர் சுகுமார் கலையரசி.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன் எனது நண்பர் ஒருவர் பிரபல தொலைக்காட்சியின் பிராந்திய செய்தியாளருடன் சின்னக்குளம் கிராமத்திற்கு சென்று அக்கிராமத்தின் பிரதான பிரச்சினையாக இருந்த குடிநீர் பிரச்சினையை அந்த ஊடகம் மூலம் தெரியப்படுத்தினார். ஆயினும் இன்று வரை அந்த கிராமத்தின் குடிநீர் பிரச்சினைக்கு சிறு நடவடிக்கை கூட சம்மந்தப்பட்டவர்களால் மேற்கொள்ளப்படவில்லை.

2006ம் ஆண்டு ஏற்பட்ட யுத்தத்தின் போது முழுமையாக இடம் பெயர்ந்த இக்கிராமத்தில் பத்து பேருக்கு மேல் உயிரிழந்துள்ளனர். 02 பேர் கடத்தப்பட்டுள்ளனர். 2008ம் ஆண்டளவில் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ள 130 குடும்பங்கள் குடியிருந்து வருகின்றனர். இக்கிராமத்தை சூழ காடுகள் மற்றும் காட்டுவிலங்குகளின் அச்சுறுத்தலும் அதிகமாக காணப்படுகிறது. இக்கிராமத்தில் பிரதான பிரச்சினை குடிநீர் பிரச்சினையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2010ம் ஆண்டளவில் அரசசார்பற்ற நிறுவனமான ஒப்பர் நிறுவனத்தின் மூலம் காற்றாடி மூலமான குழாய் கிணறு ஒன்றினை நிறுவி குடிநீரை வழங்கி வந்தனர் இத்திட்டத்தின் மூலம் 65 குடும்பங்களுக்கான குழாய் மூலமாக விநியோகிக்கபட்டு நீரைப் பெற்று தமது குடிநீர் பிரச்சினை தீர்ந்து விட்டது என எண்ணி இருந்த போது ஒரு வருட காலம் கூட அந்த சந்தோசம் நீடிக்கவில்லை. 2011 டிசம்பர் மாதம் ஏற்பட்ட சிறிய சூறாவளி ஒன்றில் அந்த காற்றாடிக்கு சேதம் ஏற்பட்டது.

இந்த காற்றாடி காற்றின் வேகத்தில் சுற்றுவதால் அதன் அடியில் பொருத்தப்பட்டுள்ள பெற்டரிக்கு மின்சாரம் சேமிக்கப்பட்டு அந்த நீர் இறைக்கும் மோட்டார் இயங்குவதன் மூலமே நீர் விநியோகம் இடம் பெற்று வந்தது. எனவே இந்த காற்றாடி சேதப்பட்டதை தொடர்ந்து இந்த நீர் விநியோகம் தடைப்பட்டது.இவ்விடயத்தை பிரதேச செயலகம் மூலம் சம்மந்தப்பட்ட ஒப்பர் நிறுவனத்திற்கு தெரியப்படுத்தியதன் காரணமாக அவர்கள் மாற்று வழியொன்றை அறிமுகம் செய்தார்கள். அது சோலர் மூலம் மின்சாரம் பெற்று அந்த மோட்டரை இயங்க வைப்பதன் மூலம் நீர் விநியோகத்தை மீண்டும் மேற்கொள்வது. அதனை கிராம அபிவிருத்தி சங்கத்தின் மூலம் இயங்கச் செய்ய பொறுப்பு கொடுத்துவிட்டு அந்நிறுவனத்தினர் சென்றார்கள். இதுவும் இரண்டு நாட்களுக்கு மேல் நிலைக்கவில்லை.

அதன் பின்னர் சம்பந்த பட்ட நிறுவனத்திற்கு தெரியப்படுத்தியும் அவர்கள் இது தொடர்பாக நிதி வழங்கிய ஐரோப்பிய ஒன்றியம் தற்போது தம்முடன் தொடர்பில் இல்லை என தெரிவித்துள்ளதாக பொதுமக்கள் தெரிவித்தார்கள். குடிநீரும் கிணற்றில் உள்ளது தமது கிராமத்திற்கும் தற்போது மின்சாரம் வந்து விட்டது. எனினும் அந்த நீர் விநியோக தொகுதியை செயற்படுத்த எந்த நடவடிக்கையையும் உரிய அதிகாரிகள் மேற்கொள்ள வில்லை. எனவே அந்த நீர்விநியோகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுதியானது 04 வருடத்திற்கு மேல் செயற்படாது துருப்பிடித்து வீணாகிப் போகிறது. என மக்கள் கவலையாக தெரிவித்தனர்.

தற்போது மூதூரில் முன்னெடுத்துவரும் பாரிய குடிநீர் திட்டமும் எமது கிராமத்தின் பிரதான வாயிலின் ஊடாக நல்லூர் கிராமத்திற்கு செல்கிறது எமது கிராமத்திற்குள் எந்த குடிநீர்குழாய்களும் பதிக்கப்படவில்லை எனவும் மக்கள் கவலையடைகின்றனர்.

இந்த நிலையில் தற்போது ஏற்பட்டுள்ள கோடை காலத்தில் குடிப்பதற்கு உகந்த கிணறுகள் அனைத்தும் வற்றியுள்ளது. இந்த கிராமத்தில் உள்ள 160 குடியிருப்பாளர்களும் ஒரு தனியாரின் வீட்டில் உள்ள கிணற்றிலேயே தமது குடிநீர் தேவையை பூர்த்தி செய்து வருகின்றனர். இன்னும் சில வாரங்களில் அந்த கிணறும் வற்றக் கூடிய நிலையில் உள்ளது.

இக்கிராமம் மீளக் குடியேற்றப்பட்ட காலத்தில் அவர்களில் 72 குடும்பங்களுக்கு அரசாங்கத்தின் திட்டம் ஒன்றின் மூலம் வீடுகள் கட்டப்பட்டு கிடைத்தது. அதே நிலையில் உள்ள மிகுதி 58 குடும்பங்கள் தற்காலிக கொட்டில்களிலும் மண் வீடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறான பல அடிப்படை பிரச்சினைகள் நிறைந்த கிராமமாக காணப்படும் சின்னக் குளம் கிராமத்திற்கு தேர்தல் காலத்தில் மட்டும் ஆளும் கட்சி எதிர்கட்சி என போட்டி போட்டு போஸ்டர் ஒட்டுவதும் பொய்யான வாக்குறுதி வழங்குவதும் கிரமமாக ஒவ்வொரு தேர்தலுக்கும் அரங்கேறி வருகிறது. எனவே குடிநீரில்லாத இக்கிராமத்தின் நிலையை எண்ணி மனம் இரங்கியேனும் அக்கிராம மக்களின் தேவையை பூர்த்தி செய்யவேண்டும் என உரிய அதிகாரிகளை கிராம மக்கள் வேண்டி நிற்கின்றனர்.

ஞாயிறு தினக்குரல் 20 செப்டெம்பர் 2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலங்குகள் இல்லாத இடத்தில் வனவிலங்கு சரணாலயம்

இலங்கையில் உள்ள அனைவருக்கும் தெரிந்த நிலாவெளி கடற்கரை மிகவும் அழகானது. அதற்கு மேலும் அழகு சேர்ப்பதுதான் புறாமலைத்தீவு. திருகோணமலை மக்கள் தமது உறவினர்கள் அல்லது நண்பர்களின் இயந்திரப் படகிற்கு எரிபொருள் செலவினை மட்டும் ஏற்றுக்கொண்டு தமது குடும்பம் மற்றும் சுற்றத்தாருடன் இந்த புறாமலைக்குச் சென்று அங்கேயே சமைத்து உணவுண்டு கடற்குளித்து அங்குள்ள அழகான முருகைக் கற்களைப் பார்த்து இரசித்து தெளிந்த நீரிலேயே கடல் வாழ் உயிரினங்களைக் கண்டு தமது விடுமுறைக் காலங்களை மிகவும் சந்தோசமாக கழிப்பதுடன் இவர்களின் மன உளைச்சல் குறைவதற்கும் ஒரு சிறந்த வழியாக இருந்திருக்கிறது.

இம்மலையைச் சுற்றி ஆழம் குறைவாகவுள்ளதால் சூரிய ஒளி நேரடியாக நிலத்துக்கடியில் கிடைப்பதனால் மீன்களுக்குத் தேவையான அதிக உணவு இங்கு கிடைக்கின்றது. திருகோணமலை கிழக்கு கடற்கரையில் இருந்து மீன்பிடி தொழிலுக்கு மீனவர்கள் செல்லும் பிரதேசம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் வடக்கு நோக்கிச் செல்லும் மீனவர்கள் தமது படகின் இயந்திரக்கோளாறின் போது அல்லது மீன்பிடி உபகரணங்களை செப்பனிட்டுக் கொள்வதற்கும் வலையை மீனுக்காக போட்டுவிட்டு இளைப்பாறும் இடமாகவும் இப்பகுதியையே பயன்படுத்தி வந்தார்கள். இவ்வாறான செயற்பாடுகள் மூன்று தலைமுறைக்கும் முன்பாக உள்ள வழக்கம் என்று இப்பகுதி மீனவரான சித்திரவேல் தெரிவித்தார்.

ஆனால், இன்று இப்பகுதி தேசிய வனவிலங்கு சரணாலயம் என்று அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் நகைச்சுவை என்னவென்றால் இங்கு எந்த விலங்குகளும் கிடையாது. குடிப்பதற்கு தண்ணீரே இல்லாத இத்தீவுக்கு செல்லும் உள்ளூர் வாசிகளிடமே சேவைக் கட்டணம் அறவிடும் நிகழ்வு இந்தப் பகுதியிலேதான் நிகழ்கின்றது. இதுவும் அவர்கள் ஏற்பாடு செய்துதரும் இயந்திரப்படகில் தான் செல்லவேண்டும்.

இந்த படகுக்கு ஒரு கட்டணம், அங்கு தரித்து நிற்பதற்கு ஒரு கட்டணம், செல்லும் ஒவ்வொரு தனிநபருக்கும் ஒரு கட்டணம் என நீண்டு கொண்டே போகும் பட்டியலில், சாதாரண உள்ளூர்வாசி ஒருவர் தமது குடும்பத்தாருடன் செல்ல வேண்டுமானால் உணவு மற்றும் குளிர்பானங்களைத் தவிர்த்து ரூபா. 3,500.00 போக்குவரத்திற்கு மட்டும் செலவாகும் நிலை உருவாகியுள்ளது. எனவே தெற்கில் இருந்துவரும் பணம் படைத்த செல்வந்தர்களுக்கும் வெளிநாட்டில் இருந்துவரும் சுற்றுலா பயணிகளுக்கும் மட்டுமே நமது பாரம்பரிய சுற்றுலாத் தலங்களுக்குச் செல்லமுடியும். இதுதான் சுற்றுலாத்துறையின் வளர்ச்சியா?

இது ஒருபுறம் இருக்க பூர்வீகமாக இங்கு மீன்பிடிக்கும் மீனவர்களின் நிலையோ படுமோசமாகவுள்ளது. இவர்கள் இந்தத்தீவில் 2 கிலோ மீற்றருக்கு அப்பால்தான் படகை செலுத்தவேண்டும்.

**தடை தாண்டினால் தண்டப்பணம்**

தவறுதலாக சென்றால்கூட ரூபா. 2,500.00 தண்டப்பணம் செலுத்த வேண்டும். பார்த்தீர்களா? இந்த சுற்றுலாத்துறையின் வளர்ச்சி வெறும் பொருளாதார வரவை மட்டும் பார்க்கின்றதே தவிர, மக்களுடைய ஜீவனோபாயத்துக்கு அங்கு இடமில்லை. ஏற்கனவே பொருளாதாரத்தில் குற்றுயிராக உள்ள இப்பகுதி மக்களின் இரத்தத்தை உறிஞ்சும் செயலாகவே இந்த கட்டண அறவீடுகள் நடைபெறுவதாக இப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

இருக்கிறம் வாரஇதழ் 24 ஒக்டோபர் 2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கன்னியாவில் கிரியைகள் செய்வதற்கு ஒத்துழைப்பில்லை

கன்னியா பிரதேசத்தவர்களும் தம் சொந்த ஊரில் தமக்கான தேவைகளை நிறைவேற்றுவதில் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர். "தண்ணீரைத் தொட்டு தலையில் பூசிவிட்டுப் போனால் போதும் கிரியைகள் செய்வதற்கு அங்கு ஒத்துழைப்பில்லை, கன்னியா பிரதேசத்தை முழுமையாக பிக்குகளும், தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்களத்தாரும் தான் ஆதிக்கம் செலுத்துகின்றனர். கன்னியாவில் கட்டணம் அறவிடுவதுதான் கொடுமை.

முதல் இது பிரதேச சபையால் தான் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. தற்போது தொல்பொருள் ஆராய்ச்சி நிறுவனத்தால் டூரிஸ்டா வாறவங்களுக்கு 10 ரூபா போல ரிக்கெட் கொடுக்கிறாங்க. கோயில் வந்து வர்த்தக மயமாக போகின்றது. "அங்கிருக்கும் புனிதத் தன்மை இல்லாமல் போகின்றது". என்று கன்னியா பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் தெரிவித்தனர்.

கன்னியா பிரதேசத்தைச் சேர்ந்த நடராசா என்ற முதியவர் "நான் பிறந்த காலம் முதல் விளையாடிய இந்த பிரதேசத்தில் செல்வதற்கு ஏன் எனக்கு கட்டணம்? நானும் உல்லாசப் பிரயாணியும் ஒன்றா? எனது தாய், தந்தையின் ஈமக்கிரியைகள் செய்ய முடியவில்லை. பாரம்பரிய பிரதான அடையாளங்கள் அழிக்கப்பட்டுள்ளன" என்று ஆதங்கப்பட்டார்.

உப்புவெளி பிரதேசசபை பணியாளர்கள் வெறுமனே துப்பரவு பணியினை மட்டுமே செய்கின்றனர். இதன் பராமரிப்பும் கட்டுப்பாடும் பௌத்த பிக்குகளின் வசமே காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல் பொருள் பாதுகாப்பு திணைக்களத்தினர் தான் இந்த கட்டணத்தை வசூலிக்கின்றார்கள். இவர்கள் என்ன புதிதாக செய்யப்போகின்றார்கள், கன்னியாவிற்கென உள்ள வரலாற்று விளம்பரப்பலகைகளையும் அகற்றிவிட்டு தற்போது பௌத்த மத வரலாற்று பிரதேசமாக மாற்றியுள்ளனர்.

## எல்லாமே அவர்கள் தான்

அதிகமாக நிலாவெளி, கிண்ணியா, சேருவில, கோணேஸ்வர ஆலயம் போன்ற பிரதேசங்களில் உல்லாசப் பயணிகள் அலையலையாக வருகின்றனர். இதனால் இப்பிரதேசங்கள் வர்த்தக நோக்குடன் மாத்திரமே பார்க்கப்படும் துரதிஷ்டவசமான நிலை அதிகரித்துச் செல்கின்றது. இப்பிரதேசத்தில் பூர்வீகமாக குடியிருந்த மக்கள் இங்குள்ள விற்பனை நிலையங்களின் வேலையாட்களாகவே தொழில் புரிகின்றனர். இவ்விற்பனை நிலையங்களில் உரிமையாளர்கள் பெரும்பாலும் தென்னிலங்கையைச் சேர்ந்த பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்களாகவே உள்ளனர். இவர்களின் நடவடிக்கையிலும் அதிகார தோரணை அதிகமாக காணப்படுவதுடன் நாட்டின் எப்பகுதியும் தமக்குச் சொந்தம் என்ற உணர்வுடன் உலாவுவது வெளிப்படையாகவே தெரிகின்றது.

இலங்கையின் சுற்றுலாத் துறையை மீளக் கட்டியெழுப்ப முயற்சிக்கும் அரசு உள்ளூர் மக்களுக்கு சலுகைகளை வழங்கி நம்நாட்டிலுள்ள பிரதேசங்களுக்கு குடும்பத்தினருடன் சென்று மகிழ்ச்சியாக கழிக்க வசதி செய்து கொடுக்க முன்வரவேண்டும். யுத்தம் நடைபெற்று வந்த காலங்களில் மன அழுத்தங்களுக்கு ஆளாகியிருந்த மக்கள் இப்பொழுதுதான் நாட்டிலுள்ள எந்த பிரதேசங்களுக்கும் தங்குதடையின்றி போய்வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனங்களுக்கிடையிலான நல்லுறவும் இப்பொழுதுதான் கட்டியெழுப்பப்பட்டு வருகின்றது.

எனவே, இந்நிலையில் சுற்றுலாத்தலங்களில் கட்டண வசூலிப்பை நடைமுறைப்படுத்துவதோ, புராதன தொல்லியல் சின்னங்களை தமது கைவசப்படுத்தி கட்டணங்களை அறவிடுவதோ எதிர்காலத்தில் மதரீதியாகவும் இனரீதியாகவும் மேலும் பல சிக்கல்களைத் தோற்றுவிக்கலாம். எனவே கட்டண வசூலிப்பு விடயத்தைக் கைவிடவேண்டும்.

இருக்கிறம் வாரஇதழ் 31 ஒக்டோபர் 2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனர்வாழ்வுக்கு சென்றுவந்த முன்னால் போராளிகளின் வாழ்வாதாரம் கேள்விக்குறி

புனர்வாழ்வு பெற்று மூன்று வருடங்களாகியும் எவ்வித வாழ்வாதார உதவியுமின்றி அன்றாட உணவுத் தேவையை பூர்த்தி செய்வதற்குக் கூட புளிய மரங்களில் இருந்து பழப்புளியை பறித்து அதனை பதப்படுத்தி ஊர் மக்களுக்கு விற்பனை செய்து வரும் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து சரணடைந்து புனர்வாழ்வு முகாமிற்குச் சென்று வந்த முன்னாள் பெண் போராளி ஒருவரை சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

திருகோணமலையில் மூவினங்களையும் சேர்ந்த ஊடகவியலாளர்களுடன் தமது பணியை முன்னெடுத்துவரும் சர்வதேச தொண்டு நிறுவனம் ஒன்றின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்ட களப்பயணம் ஒன்றின் போதே சமூக மயப்படுத்தப்பட்ட இப் பெண்ணை சந்திக்கக் கிடைத்தது.

இந்த பெண் தன்னைப் பற்றி அறிமுகப்படுத்தும் போது இவ்வாறு ஆரம்பிக்கின்றார். எனது கிராமமான மூதூர் குமார புரத்தையும் இக்கிராமத்தில் இடம் பெற்ற படுகொலைகளைப் பற்றியும் இந்த உலகமே அறிந்திருக்கும்.

அவ்வாறு கொலை செய்யப்பட்ட பலரில் ஒருவரே எனது அம்மா 1996.02.16ம் திகதி இவர் ஆயுதப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். இதன் பின்னர் நடைபெறும் ஒவ்வொரு சுற்றி வளைப்பின் போதும் நான் விசாரணை என்ற பெயரில் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுவதும் இதனால் கிராம மக்களின் வித்தியாசமான பார்வையிலும் விரக்தியடைந்த நான் எனது 14 வயதில் சம்பூரில் இருந்த விடுதலைப் புலிகள் இயக்க அலுவலகத்திற்கு சென்று என்னை இணைத்துக் கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பினும் எனக்கு வயது குறைவு என்ற காரணத்தினால் என்னை ஏற்றுக் கொள்ளத் தயங்கியவர்கள் பின்னர் என்னுடைய பிடிவாதத்தால் இணைத்துக் கொண்டனர் என்றார். அப்போது உங்கள் அப்பா ஒரு பிரபலமானவர் எனவே உங்களை படிப்பித்து நல்ல நிலைக்கு கொண்டுவர வேண்டும் என தெரிவித்து என்னை இணைத்துக் கொண்டனர். 2000.09.04ம் திகதி சம்பூரில் இருந்த இயக்க அலுவலகத்தில் நான் இணைந்து கொண்டேன் என தெரிவித்தார்.

அதன் பின்னர் எனக்கான ஆயுதப் பயிற்சிகளை வழங்கி என்னை அரசியல் துறையில் பணியாற்றுமாறு அனுப்பினர். 2004ம் ஆண்டு சுனாமி காலத்தில் திருகோணமலையில் தான் நான் பணியாற்றினேன் என்றார்.

வன்னிக்கு செல்ல வேண்டியிருந்ததால் நானும் என்னுடன் சிலரும் காட்டு வழியால் வன்னிக்குச் சென்றோம். மேங்காமம், புல்மோட்டை அங்கிருந்து கடல் வழியாக வன்னிக்குச் சென்றேன். அங்கு கிளிநொச்சி, முல்லைத்தீவு, பளை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் எனது அரசியல் துறை செயற்பாடுகளை செய்து வந்தேன்.

இதன் போது ஒருநாள் எங்களது பேசுக்கு கிபீர் தாக்குதல் இடம்பெற்ற போது நான் காயப்பட்டு படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றேன். அதன் பின்னர் தொடர்ந்து 07 வருடங்கள் வைத்தியசாலையில் நோயாளர் விடுதியில் அனுமதிக்கப்பட்டவர்களை பராமரிக்கும் பணியில் ஈடுபட்டு வந்தேன். இறுதிக்கட்ட யுத்தத்தின் போது புதுமாத்தளன், முள்ளிவாய்க்கால் சண்டைகளின் போது காயமடைந்த வர்களையும் பராமரித்தேன் என தெரிவித்தார்.

இந்த நிலையில் மிக இக்கட்டான சூழ்நிலையில் தாக்குதல் அதிகரிக்கும் போது பயத்தில் அழுது கத்திக்கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில பெண்களுடன் எமக்கு பொறுப்பான பொறுப்பாளரிடம் போய் கேட்ட போது நீங்கள் யாரும் சரணடைய வேண்டாம். ஒவ்வொருவரும் இரண்டு குண்டுகளையும், சைனட் குப்பிகளையும் வைத்துக் கொண்டிருங்கள். உங்களுக்கு ஆபத்து வருவதாக தெரிந்தால் எதிரியைக் கொன்றுவிட்டு நீங்களும் வீரச்சாவு அடையுங்கள் என்றார்.

இவ்வாறு சொல்லிவிட்டு எங்களை வீரச்சாவடைய சொல்லிய அவர்கள் அனைவரும் சரணடைந்துவிட்டனர். நானும் சிவில் உடையுடன் மக்களோடு சென்று கொண்டிருந்த போது எம்முடன் இயக்கத்தில் இருந்தவர் என்னை அடையாளம் காட்டினார். நானும் உடனே சரணடைந்தேன்.

அதனைத் தொடர்ந்து பூந்தோட்டத்தில் மூன்று நாள் வைத்திருந்து விட்டு பம்பை மடுவிற்கு கொண்டு சென்றனர். அங்கு **IOM** நிறுவனம் வந்து எங்களுக்கான உடுப்புகளும் சவர்காரமும் தந்தனர். இங்கு நாம் தங்கி புனர்வாழ்வு பெற்ற போது அரசாங்கத்தால் எமக்கான பயிற்சிகள் இடம்பெற்றது. இதில் கணணி பயிற்சி, முடி திருத்தும் பயிற்சி ஆகிய இரண்டையும் நான் கற்றுக் கொண்டேன்.

எனக்கு அம்மா, அப்பா என்று யாரும் இல்லாததால் என்னைப் பொறுப்பெடுக்க யாரும் முன் வரவில்லை எனவே எனது சித்தி ஒருவரிடம் நான் மன்றாடி இந்த உதவியை மட்டும் செய்யும்படி கேட்ட போது என்னை அவர் விடுதலை செய்ய வைத்தார். நான் தற்போது எமது சொந்த ஊரில் வாழ்ந்து வருகின்றேன் என்றார்.

ஆயினும் உங்கள் ஜீவனோபாயத்திற்கு என்ன செய்வீர்கள்? என்று கேட்டதற்கு பதிலளித்தவர் புனர்வாழ்வு பெற்று சமூகமயப்படுத்துவோருக்கு பல்வேறு உதவிகள் வழங்கப்படுவதாக பல அமைப்புக்களும் அரசும் தெரிவித்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதில் உண்மை இல்லை கடந்த 2010.10.15 திகதி விடுதலையடைந்த நான் இதுவரை எந்தவொரு உதவியையும் பெறவில்லை. திருமணமாகாத 28 வயதுடைய நான் தலையில் ஏற்பட்ட காயத்தால் நோய்வாய்ப்பட்டுள்ளேன்.

தற்போது எமது சாப்பாட்டுச் செலவிற்காக இப்பகுதியில் உள்ள பழப்புளிகளை சேகரித்து அதனை உடைத்து கடைகளுக்கும், வீடுகளுக்கும் விற்று எனது உணவுத் தேவையைப் பூர்த்தி செய்து வருகின்றேன் என்று பழப்புளியின் கோதுகளை உடைத்து ஒரு பாத்திரத்தில் போட்டு சேகரித்தவண்ணமே அழுது கொண்டு தெரிவித்தார்.

இவர் மட்டுமன்றி இவ்வாறு பலர் தமது உடல் அவயங்களை இழந்தவர்களும் கூட இந்நிலையில் எவ்வித வாழ்வாதார உதவிகளும் இன்றி தமது ஒரு நாள் உணவுத் தேவையை பூர்த்தி செய்யவே அல்லல்படும் நிலையை காணமுடிகிறது.

அத்துடன் புனர்வாழ்வு பெற்று வந்தவர்களை அடிக்கடி விசாரணை என்ற பெயரில் பல பாதுகாப்பு அதிகாரிகள் சந்தித்து மீண்டும் மீண்டும் பழைய ஞாபகங்களைத் தூண்டுவதும், ஆயுதம், பணம் முதலியனவற்றை மறைத்து வைத்திருப்பதாக கேட்டு நச்சரிப்பதும் இவர்களுக்கு மென்மேலும் வேதனையளிக்கும் சம்பவமாகவுள்ளது.

எனவே புனர்வாழ்வில் கூறும் விடயமான பழைய வாழ்க்கையை மறந்து புதியவர்களாக சமூகத்தில் இணைந்து வாழுங்கள் என்று. எனினும் அவர்களே அடிக்கடி விசாரணை என்ற பெயரில் பழைய ஞாபகங்களைத் தூண்டுவதாக கவலையடைகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் சமூகத்தில் சுயமரியாதையுடனும் சுதந்திரமாகவும் வாழ முடியாதுள்ளதுடன் இந்த பெயரும் பழியும் எமது வாழ்நாள் முழுவதும் தொடரும் எனவும் அஞ்சுகின்றனர்.

இவ்வாறான புனர்வாழ்வு பெற்றுவந்தவர்களின் வாழ்வாதாரத்திற்கான திட்டங்களை சிறப்பாக அரசாங்கமும், அமைச்சுக்களும் நடைமுறைப்படுத்துமானால் இவர்கள் தாமாகவே சமூக மயமாகிக் கொள்வார்கள். எனவே இதனை நடைமுறைப்படுத்த வழிவகுப்பது மிக அவசியமாகிறது.

**சுடர்ஒளி வார வெளியீடு - 2013**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்குடியேற்றப்பட்டும் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் தென்னை மரவாடி கிராமம்

திருகோணமலை நகரில் இருந்து 74 கிலோ மீற்றர் வடக்கு நோக்கி சென்றால் தமிழர்களின் பூர்வீக எல்லைக் கிராமமான தென்னவன் மரவு அடி எனும் பழைய பெயரையும் இன்று இது மருவி தென்னைமரவாடி எனும் பெயருடன் வடமாகாண முல்லைத்தீவு மாவட்டத்தை அருகில் கொண்டுள்ள கிராமம். இக்கிராமத்தின் கமக்காரர் அமைப்பின் தலைவர் தம்மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறையைப் பற்றி எம்முடன் மனம் திறக்கிறார். 62 வயதுடைய தனபாலசிங்கம் கூறுகிறார்.

இந்தக் கிராமத்திற்கு இப்பெயர் வரக்காரணம் என்னவென்றால் தென்னவன், சேரன், சோழன் வரிசையில் வந்த தென்னவன் எனும் தென்னிந்திய மன்னன் இவ்வழியாகவே இலங்கைக்கு முதன் முதலாக வந்து இப்பகுதியை ஆண்டதனாலும் அந்த வழி மரபின் அடி இக்கிராமத்தின் பெயர் வந்தது. அதன்பின் தென்னை மரங்கள் சோலையாக இருந்ததால் இது மருவி தென்னை மர வாடியாயிற்று என தெரிவித்தார்.

1800 வருடங்களுக்கு மேற்பட்ட வரலாற்றைக் கொண்ட இக்கிராமம் மிகவும் செல்வச் செழிப்புடன் இருந்த கிராமமாகும். ஒரு குடும்பத்திற்கு 10 ஏக்கர் சராசரி வயல் நிலம், 50 மாடுகள், கல் வீடு, வீட்டுத் தளபாடங்கள், உழவு இயந்திரங்கள், தோட்டம், தென்னை மரம் என 222 குடும்பங்கள், செல்வந்தர்களாக வாழ்ந்து வந்தனர். இவ்வாறு இருக்கும்போது 1984இல் அம்மக்கள் மீது இராணுவ நடவடிக்கை மற்றும் இனக்கலவரம் எனும் புயல் வீச ஆரம்பித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவமும், காடையர்களும் தமது சொத்துக்களை சூறையாடியதையும் உடைத்து நாசப்படுத்தியதையும் மறைந்திருந்து பார்த்த பலர் இன்னும் எம்மத்தியில் உயிருடன் இருக்கின்றனர். என கூறிய தனபாலசிங்கத்தின் முகத்தில் அவருடைய ஆதங்கம் அப்பட்டமாக தெரிந்தது. அச்சம்பவத்தை தொடர்ந்து கரையோரமாக சிறிய பை, ஆவணங்களை மட்டுமே எடுத்துக் கொண்டு கொக்குத் தொடுவாய் பாடசாலையில் 22 தினங்கள் அகதிகளாக தங்கியிருந்தோம். அவர்கள் எங்களை நன்றாக கவனித்தார்கள்.

இதற்கிடையில் எமது கிராமத்தில் மாட்டை அவிழ்த்து விட்டு செல்வோம் என எத்தனித்த ஒரு இளைஞன் சுட்டுக்கொல்லப்பட்டார். பின்னர் சதா என்பவரும் நான்கு இளைஞர்களும் கைது செய்யப்பட்டு சிங்கபுர இராணுவ முகாமில் வைக்கப்பட்டனர். இவர்கள் அங்கிருப்பதை அறிந்து சென்ற ஒருவரின் தாயும் தந்தையும் சிங்கபுர இராணுவ முகாமில் வைத்து வெட்டிக் கொல்லப்பட்டனர். இன்னும் கைதானவர்களின் இரண்டு தாய்மார் இவர்களைத் தேடிச் சென்றபோது நகைகளை அறுத்து எடுத்ததாகவும் இதிலிருந்து தப்பி வந்தவர்கள் வந்து சொன்னதால் தான் மீதமுள்ள மக்கள் ஓடித்தப்பினார்கள்.

இக்கிராமத்தில் இருந்த விநாயகர் ஆலயம் மற்றும் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை என்பனவும் அடித்து உடைக்கப்பட்டன. இவர்களுடைய வயல் நிலங்களில் 1750 ஏக்கர் வடமாகாண எல்லைக்குள் அக்கறை வெளி எனும் இடத்தில் உள்ளது. மேலும், இங்குள்ள நான்கு முக்கிய குளங்களை மையமாக வைத்தே தமது பயிர்ச்செய்கைகளை நடத்தி வந்தனர்.

அவை,

பறையன் வெளிக்குளம் - 22 ஏக்கர், கொல்லன் வெளிக்குளம் - 140 ஏக்கர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிக்கன் வயல்குளம் - 80 ஏக்கர், போட்டான் குளம் -24 ஏக்கர் ஆகும். இதனை விட நல்ல தண்ணி ஊத்துப் பிலவு எனும் இடத்தில் 400 ஏக்கர் வயல் நிலம் உள்ளது. இதனை இப்பகுதியைச் சேர்ந்த பெரும்பான்மை இன விவசாயிகள் அத்துமீறி பிடித்து விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதில் நல்லெண்ணம் படைத்தவர்கள் மீளக்கொடுப்ப தாகவும் சிலர் அதனை விட மறுப்பதாகவும் தெரிவித்தார். மேலும் இவற்றில் 300 ஏக்கருக்கும் அதிகமான காணிகள் அத்துமீறல்களினால் பிரச்சினையில் உள்ளதாகவும் தெரிவித்தார்.

2011ஆம் ஆண்டின் இறுதியில் 150 பேர் மீளக்குடியேற்றப்பட்டோம். இதில் 88 பேருக்கு மட்டுமே 6 மாத உலர் உணவு நிவாரணம் கிடைத்தது. இன்றுவரை மிகுதி 66 பேருக்கு இந்த உலர் உணவு நிவாரணம் வழங்கப்படவில்லை.

10X10 சதுர அடி கொண்ட தற்காலிக குடியிருப்பு ஒன்று ⊠⊠⊠⊠⊠ நிறுவனத்தால் வழங்கப்பட்டது. வட மாகாண குடியேற்றங்களின் போது வழங்கப்படும் 25,000 ரூபா இங்கு எவருக்கும் வழங்கப்படவில்லை. தொண்டு நிறுவனங்களின் உதவியுடனே வாழ்வாதார உதவியாக கோழி வளர்ப்பு. மாடு வளர்ப்பு போன்றன ஒரு சிலருக்கு வழங்கப்பட்டுள்ளன. அரசாங்கத்தினால் இதுவரை எந்தவித உதவிகளும் வழங்கப்படவில்லை என கவலையடைகின்றனர்.

இங்கு பாம்புகள் அதிகம், யானைகளின் தொல்லைகளும் காணப்படுகிறது. நோயாளிக்கோ அல்லது கர்ப்பிணிப் பெண்களுக்கோ ஒரு அவசரமாயின் 18 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள புல்மோட்டை பிரதேச வைத்தியசாலையையே நாடவேண்டியுள்ளது. அங்கு கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வதற்கு வீதி சீராக இல்லாமையால் தகுந்த சேவை பெறமுடிவதில்லை.

இங்கு குடியேறிய நாள் முதல் 5 முறை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டோம். இதுவரை எந்தவித நிவாரணமும் பெறவில்லை எனத் தெரிவிக்கின்றனர். இவ்வாறு 30 வருடங்களின் பின்னர் மீளக்குடியேறிய இந்த தென்னை மரவாடி கிராமத்து மக்களுக்கு தகுந்த அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அம்மக்களின் பிரச்சினைகளை தீர்க்க அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என இக்கிராம மக்கள் வேண்டி நிற்கின்றனர்.

**ஞாயிறு தினக்குரல் 03 மார்ச் 2013**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மத்திய கிழக்கு செல்வது இதற்காகவா? தொடரும் கொடுமைகளுக்கு முடிவு என்ன?

தனது குடும்பத்தின் கஷ்ட நிலையைக் கண்டு மனதை கல்லாக்கிக் கொண்டு மத்திய கிழக்கு நாடுகளுக்குப் பணிப்பெண்ணாக செல்லும் பெண்களை நமது வாழ்நாளில் நாம் அன்றாடம் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் காண்கிறோம். இவர்களில் பல்வேறு துன்பங்களுக்கு உள்ளாகின்ற பெண்கள் பலர் உள்ள போதும் உப முகவர்களால் ஏமாற்றப்படுதல், தவறான ஆவணங்களைத் தயாரித்து அனுப்புதல் மற்றும் பாலியல் ரீதியாக வன்புணர்ச்சிக்கு உள்ளாகும் பெண்களின் தொகை அண்மைக் காலமாக அதிகரித்து வருவதை அவதானிக்க முடிகிறது.

இந்த வரிசையில் திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகமம் பிரதேச செயலாளர் பிரிவில் இருந்து பதினெட்டு வயதைப் பூர்த்தி செய்யாத நிலையில் வெளிநாடு சென்ற பெண் ஒருவர் தமது அம்மாவுக்கு எழுதிய கடிதத்தில் தனது வெளிநாட்டு மோகத்தால் தான் பட்ட கஷ்டங்களை நான்கு பக்கங்கள் கொண்ட மடலாக வரைந்து அனுப்பினார்.

திருகோணமலை நகரில் இருந்து 16 கி. மீ தொலைவில் உள்ள இக்கிராமத்தின் பிரதான தொழிலாக விளங்குவது விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு. இக்கிராமத்தின் ஏழை விவசாயியான சண்முகம் அவருடைய இரண்டாவது மகள் அம்பிகா (பெயர் மாற்றப்பட்டுள்ளது).

அவருடைய பள்ளிப் பருவத்தில் யாருடனும் அதிகமாகப் பேசாத மிகவும் அமைதியான சுபாவம் கொண்டவர் அம்பிகா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன வேலையைச் செய்தாலும் மிகவும் ஆறுதலாக செய்யும் பக்குவம் கொண்டவர். தமது க. பொ. த. சாதாரண தரப்பரீட்சையில் சித்தியடையாத காரணத்தால் பாடசாலைப் படிப்பை இடை நடுவே விட்டு விட்டு வீட்டில் இருந்த போது தனது மூத்த சகோதரியைப் போல தானும் சவுதிக்கு சென்று உழைத்து பணம் சம்பாதிக்க எண்ணினாள். கட்டாயம் அல்லாத போதும் அக்காவைப் போல் வெளிநாடு சென்று உழைக்க வேண்டும் என்று வெளிநாட்டு மோகம் அவளைத் தொற்றிக் கொண்டது.

"அச்சமயம் எனது அக்காவை வெளிநாடு அனுப்பிய உப முகவரை கந்தளாயில் இருந்து வருமாறு கூறி அவரிடம் அம்மாவின் மூலம் பேசினேன். அம்மாவுக்கு என்னை வெளிநாட்டுக்கு அனுப்ப ஒரு துளியும் விருப்பமில்லாத போதும், எனது தொந்தரவிலேயே அனுப்ப ஒப்புக் கொண்டார்". எனத் தெரிவித்த அம்பிகா கண்கலங்கினார்.

பின்னர் சிறிது நேரத்தில் எம்முடன் பேச ஆரம்பித்தார். "17.05.2012 அன்று சவுதிக்கு சென்ற நான் அன்று ஆறு மாதங்களுக்கு ஓர் வீட்டில் பணிப்பெண்ணாக அமர்த்தப்பட்டு வேலை செய்தேன். அந்த வீட்டுக்கார முதலாளி பெண் நல்லவர் அல்ல. சாப்பாடு தரமாட்டார். பசிக்கு சாப்பிட்டால் அடிப்பார். அயன் பொக்சால் சுடுவார். சுட்ட காயத்துக்கு வசலின் எடுத்துப் பூசினால் கூட அடிப்பார். வீட்டில் இருந்து சவுதிக்கு போகும் போது எனக்கு மிக நீளமான அழகான தலைமுடியையும் அந்த முதலாளிப் பெண் வெட்டிவிட்டார். இப்போது ஆண்களின் தலைபோல் உள்ளது எனது தலைமுடி" என்றார்.

என்னுடன் பிலிப்பைன்ஸ் நாட்டுப் பெண்கள், நேபாள நாட்டுப் பெண்கள் வேலை செய்தார்கள். அவர்கள் பழையவர்கள் என்பதால் என்னிடமே மோசமாக அவர் நடந்து கொள்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு நாட்டுப் பணிப்பெண்களும் என்னிடம் கடுமையாக நடந்து கொண்டனர். நான் இலங்கைக்கு திரும்பி போகப் போவதாக அவரிடம் பல முறை அழுது குளறி சொல்லி இருக்கிறேன். இதற்கு அவர் சொன்னார், ஏற்கனவே இப்படி சொன்ன ஒருவரை ஒரே அடியாக மேலே அனுப்பிவிட்டேன். நீயும் அப்படி சாகப் போகிறாயா? என்று கேட்டுக்கேட்டு அடித்தார்.

உன்னை வீட்டுக்கு அனுப்ப மாட்டேன். இங்கேயே சாகடிப்பேன் என்று பேசி பயம் காட்டினார். இந்த விடயத்தை நான் அம்மாவிடம் சொல்ல அம்மா அக்காவிடம் விபரத்தை சொல்லி நான் வேலை செய்யும் வீட்டின் விலாசம் தொலைபேசி இலக்கம் என்பனவற்றைக் கொடுத்தார். அக்கா அந்த வீட்டுக்கு போன் எடுத்து வீட்டு முதலாளியுடன் பேசி பொலிஸில் சொல்லப் போவதாகக் கூறி என்னை நமது நாட்டுக்கு திரும்பி வருவதற்கான ஏற்பாடுகளை செய்தார். நான் வீடு வந்து சேர்ந்தேன். நான் வேலை செய்த ஆறு மாத காலத்துக்குரிய சம்பளம் கூட எனக்கு தந்து அனுப்பவில்லை எல்லாமே "வேஸ்ட்" எனத் தெரிவித்தார்.

நான் வீட்டுக்கு வந்த போது சித்தப் பிரமை பிடித்தவர் போலவே காணப்பட்டேன். தலைமுடி வெட்டப்பட்டு கைகளில் காயங்களுடன் வெளிநாட்டில் இருந்து வரும் பெண்ணைப் பற்றி நமது கிராமத்து மக்கள் இல்லாததை எல்லாம் கதைக்கும் அதன் பின்னர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு எனக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. அத்துடன் உள ஆற்றுப்படுத்தலும் சில அமைப்புகளால் வழங்கப்பட்டது என்றார்.

அப்போது நான் அவரிடம் ஒரு கேள்வியைக் கேட்டேன். உங்களை அனுப்பிய உப முகவரின் மூலமாக இலங்கைக்கு வருவதற்கு முயற்சிக்கவில்லையா? அப்போது தான் அவர் அதிர்ச்சி தரக்கூடிய ஒரு விடயத்தை சொன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வெளிநாட்டில் அனுபவித்த உடல் சித்திரவதையை விட இலங்கையில் நான் நம்பிச் சென்ற சப் ஏஜெண்டு மூலம் அடைந்த சித்திரவதையே அதிகம். 2012.02.01 எமது குடும்பத்தாரைப் பிரிந்து கொழும்பிற்கு வந்த நான் 17.05.2012 வரை கொழும்பில் ஒரு சப் ஏஜென்டால் தடுத்து வைக்கப்பட்டு பல்வேறு சித்திரவதைக்கும் மன உளைச்சலுக்கும் உள்ளாக்கப்பட்டேன். இந்த மூன்றரை மாத காலம் நான் பட்ட இன்னலை எனது அம்மாவுக்கு கடிதமாக எழுதினேன். ஆனால் அதை அனுப்பவில்லை. அம்மாவிடமும் காட்டவில்லை. அதை உங்களிடம் தருகிறேன். நீங்கள் வாசித்துப் பாருங்கள் என வீட்டுக்குள் சென்று சிறிது நேரத்தில் அக்கடிதத்தை என்னிடம் தந்தார். அப்போது அவர் கூறியது எனக்கு நேர்ந்த கஷ்டத்தைப் போல் வேறு ஒருவருக்கு நடக்காமல் இருக்க இக்கடிதம் பயன்படுமென்றால் அதனை உங்களிடமே தருகிறேன்" என்றார்.

இக்கடிதத்தை வாசிக்கும் போது சப்ஏஜென்டால் கொழும்பில் தடுத்து வைக்கப்பட்ட மூன்றரை மாத காலத்தில் அவர் பட்ட துன்பம் அக்கடிதத்தில் பிரதிபலித்தது. இதில் முதலாவது பந்தி இவ்வாறு அமைகிறது. நான் கொழும்பிற்கு இரவு வந்து சேர்ந்த அன்றே முகவர் தனியாக லொட்ஜ் ஒன்றிற்கு அழைத்துச் சென்றார். என்னை அழைத்து வந்த சப்ஏஜென்ட் என்னிடம் தவறாக நடந்து கொள்ள முயற்சி செய்தார். நான் அவரிடம் தப்பி அழுது கொண்டே அதே அறையில் நித்திரையின்றி இருந்தேன். அங்கிருந்து வேறு ஒரு வீட்டில் மருதானையில் என்னை தங்க வைத்திருந்த போது அங்கே பொலிசாரால் கைது செய்யப்பட்டு பொலிஸில் இருந்தேன். பொலிஸில் என்னுடைய உண்மையான வயதைக் கேட்டும் அடையாள அட்டையைக் கேட்டும் அடித்தனர். அப்பொழுது சப்ஏஜென்ட் வந்து பொலிஸாருக்கு பணம் கொடுத்து என்னை விடுதலை செய்து கூட்டிச் சென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பின்னர் மாதம்பிட்டியவில் உள்ள ஒருவரின் வீட்டில் என்னை தங்க வைத்து இருந்தார். அங்கு நான் இருந்த சில நாட்களின் பின் என்னுடைய அம்மா வந்துள்ளார் என்று சப் ஏஜென்ட் வீட்டுக்காரர்களிடம் பொய் சொல்லி என்னை லொச் ஒன்றுக்கு அழைத்துச் சென்று என்னிடம் தவறாக நடக்க முயன்று அடித்து துன்புறுத்தினார்.

பின்னர் மாதம்பிட்டிக்கு கூட்டி வந்து என்னை விட்டு விட்டார். வெளிநாடு செல்பவர்களுக்கு கொடுக்கும் பயிற்சி எடுக்க வேண்டுமென்று என்னை இரத்தினபுரிக்கு 5 முறை கூட்டிச் சென்று இடமில்லை என்று சொல்லித் திருப்பி அழைத்து வருவார் என தன்னுடைய அம்மாவுக்கு எழுதிய கடிதம் விரிந்து செல்கிறது.

இவ்வாறு இன்னும் பல பெண்கள் ஏமாற்றப்பட்டு பாலியல் வன்முறை உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கொடுக்காமை, உரிய ஆவணம் பெண்களிடம் வழங்காது ஏமாற்றுதல், மற்றும் தடை செய்யப்பட்ட வீடுகளுக்கு பணிப் பெண்களை அனுப்புதல், போன்ற தவறான செயல்களில் சப் ஏஜென்டுகள் மேற்கொண்டு வருகின்றனர். எனவே, வெளிநாடு செல்லும் பெண்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தார் விழிப்புடன் நடந்து கொள்ள வேண்டும். தற்போது மூதூரில் இருந்து பணிப்பெண்ணாக சென்ற ரிசானா நபீக்கின் சிறைச் சேதத்திற்குப் பின்னர் இலங்கை அரசாங்கத்தால் புதிய நடைமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. ஆனால் அரசாங்கத்திற்கான அந்நியச் செலாவணியில் கனிசமான தொகையினை ஈட்டித்தரும் பணிப் பெண்களின் மூலம் கிடைக்கும் வருமானத்தை இழக்க அரசு தயாராக இல்லை.

எனவே, தற்போது 800 வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகங்களும் பல்லாயிரக் கணக்கான சப் ஏஜென்டுகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள நாட்டில் நல்லவர் யார்? கெட்டவர் யார்? என்று அறிந்து அவர் மூலம் செல்வதாயின் பெண்களும் அவர்களின் குடும்பத்தாரும் விழிப்புடன் இருக்க வேண்டும். இவ்விடயம் தொடர்பாக அரசாங்கம் பணிப் பெண்களின் தொழில் உரிமையையும் சமூகப் பாதுகாப்பையும் வழங்க நடவடிக்கை எடுக்குமா?

**ஞாயிறு தினக்குரல் 07 ஏப்ரல் 2013**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணம் கொடுத்து குடிநீர் வாங்கும் ஆயிலையடி கிராம மக்கள்

எமது கிராமத்தில் குடிப்பதற்கு கிணற்றுநீரை மட்டும் நாம் பாவித்து வந்தோம். கடந்த 05 வருடகாலமாக அந்தக் கிணற்று நீரில் இரசாயன நச்சுப்பொருள் கலந்துள்ளதால் அதனை குடிக்க வேண்டாம் என சுகாதார திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டது. நாங்கள் இப்போது வாரத்திற்கு 03 முறை பவுசர்களில் பிரதேச சபையினால் கொண்டு வந்து தரப்படும் குடிநீரை 40 லீற்றர் நீரை 25 ரூபா விலை கொடுத்து வாங்கியே எமது குடும்பங்களின் குடிநீர்த் தேவையை நிவர்த்தி செய்து வருகின்றோம் என்றார்.

திருகோணமலையில் முஸ்லிம்களும் அரசியல் பிரமுகர்களும் செறிந்து வாழும் கிண்ணியா பிரதேசத்தின் ஆயிலையடி கிராமத்தை சேர்ந்த அப்துல் ரசாக் என்பவர். ஆம், கிண்ணியாவில் உள்ள இலங்கையின் மிக நீளமான பாலத்தை தெரிந்த பலருக்கு இக்கிராமங்களில் உப்புக் காற்றில் கரைந்து போகும் பல இளம் தலைமுறைகளின் வாழ்க்கையினை அறிந்திருக்க வாய்ப்பில்லை. கடந்த சில மாதங்களுக்கு முன் கோமரங்கடவெலவில் வாழ்வோடும், சாவோடும் போராடும் மக்கள் எனும் தலைப்பில் என்னால் எழுதப்பட்ட ஒரு கட்டுரை அப்பகுதி மக்களின் மீது பலரின் கவனத்தை செலுத்தியது. பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அது போன்ற பிரச்சினையுடன் வாழும் இம் மக்களுக்கும் ஒரு தீர்வு கிட்டாதோ என்னும் ஏக்கத்துடன் இந்த கட்டுரையையும் எழுதுகின்றேன்.

கிண்ணியாவில் இரண்டு உள்ளூராட்சி மன்றங்கள் உள்ளன. இதிலே நாம் பேசப் போவது கிண்ணியா பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட ஆயிலையடி கிராம சேவகர்கள் பிரிவினை பற்றி. இக்கிராமத்தில் உள்ள மக்கள் பாவிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிநீரில் உள்ள இரசாயனக்கலவையால் சிறுநீரக நோய்க்கு உள்ளாகி பலர் இறந்தும் பலர் நிரந்தர நோயாளியாகவும் காணப்படுகின்றனர். பெரும்பாலும் விவசாயம், கூலித்தொழில், கால்நடை வளர்ப்பு, சிறுவியாபாரம் போன்ற தொழிலை நம்பி வாழும் இக்கிராம மக்கள் இந்த சிறுநீரக நோயில் இருந்து மீள, பெருமளவு நிதி செலவழித்தும் விடுபட முடியாமல், இறந்து மடியும் துர்ப்பாக்கிய நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

இக்கிராமத்திற்கு நேரடியாக சென்ற போது எனக்கு ஏற்பட்ட அனுபவங்களை இக்கட்டுரையில் பதிவு செய்ய விரும்புகின்றேன். மாரி காலத்தில் மட்டுமே குடியிருக்க உகந்த கிராமம். கோடையிலே நீர் நிலைகள் அனைத்தும் வற்றி கால்நடைகளுக்கே நீரில்லாமல் பரிதவிக்கும் காட்சிகளை காண முடிந்தது. எமது பயணம் அதிகமாக குளக்கட்டின் மேலே தான். ஆனால் குளம் தண்ணீர் இன்றி வரண்டு காணப்பட்டது. பெருமளவிலான நெற்செய்கை நிலங்கள் காய்ந்து வரண்டு காணப்பட்டன.

1962ஆம் ஆண்டளவில் இக்கிராமத்தில் குடியேறிய மக்கள் தற்போதைய கணக்கெடுப்பின் படி 860 குடும்பங்களை சேர்ந்து 3600 சனத்தொகையினரைக் கொண்டுள்ளது. ஆயிலையடி கிராம சேவகர் பிரிவு ஆயிலையடி, வட்டமடு, பொக்கிறான்வெட்டை, பனிச்சையடியாறு என 04 கிராமங்களை கொண்டுள்ளது.

இந்த நோயினால் பாதிக்கப்பட்டுள்ள முகமது சுல்தான் செய்லாப்தீன் (வயது 70) என்பவரை முதலில் நான் சந்தித்தேன். தனது நோயை பற்றி விபரிக்கும் போது, நாங்கள் குடிக்கும் கிணற்று நீரில் இரசாயனப்பொருள் ஒன்று கலந்துள்ளதாம். அதனை எமது ஊரார் காக்காப்பவுன் என்றும் சொல்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நீரை இங்கு குடியேறிய காலம் முதல் குடித்து வந்ததால் எனக்கு சிறுநீரக நோய் ஏற்பட்டது. இது என்ன நோய் என்று தெரியாமல் வைத்தியர்கள் முதலில் சிறுநீரகத்தில் கல்லு என்றார்கள். பின் சிறுநீரகத்தில் சவ்வு வளர்ந்துள்ளது என்றார்கள். பலமுறை சத்திரசிகிச்சைக்காக தியேட்டருக்கு கொண்டு சென்று திருப்பி அழைத்துவரப்பட்டேன். ஆயினும் தற்போது பெருமளவு பணச்செலவில் கண்டியில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்று குழாய் வைத்து இருக்கின்றேன் எனது மனைவிக்கும் மகனுக்கும் மருமகளுக்கும் இதே நோய் உள்ளது என மிகுந்த வேதனையுடன் தெரிவித்தார்.

கடந்த வருடத்தில் இந்த நோயினால் பாதிக்கப்பட்டு 05 பேருக்கு மேல் உயிரிழந்துள்ளதாகவும் கிராம மக்கள் தெரிவித்தனர். ஆயினும் இதற்கான சரியான பரிசோதனைகள் எதுவும் மேற்கொள்ளப்படாமலும் பாதிக்கப்பட்டவர்களுக்கான விசேட நடவடிக்கைகள் எதுவும் யாராலும் மேற் கொள்ளப்படவில்லை எனவும் பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த கிராமத்தில் இரண்டு சிறுநீரகங்களும் பழுதடைந்து நோயினால் பாதிக்கப்பட்டு மிகவும் மோசமான நிலையில் உள்ள 16 வயது பாடசாலை மாணவன் நவாஸ் இர்கான் பற்றி தெரிவித்தார். அப்போது அவரைத் தேடி அவருடைய வீட்டுக்கு சென்றேன். நான் சென்ற நேரம் மதிய உணவு நேரம் என்பதனால் அங்கே பெரியவர் ஒருவர் சிறுவர்கள் நான்கு பேரும் தென்னை ஓலையில் மேயப்பட்ட மால் ஒன்றில் இருந்து உணவு அருந்திக் கொண்டு இருந்தனர். அப்போது நான் என்னை அறிமுகம் செய்து கொண்டு நவாஸ்இர்கான் பற்றி விசாரிக்க ஆரம்பித்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது அவர் வீட்டினுள் நித்திரையாக இருக்கின்றார் சற்றுப் பொறுங்கள் கூட்டி வருகின்றேன் என சொல்லி நவாஸ் இர்கானை என்னிடம் அழைத்து வந்தார். அவரை பார்த்த போது ஒரு கனம் நான் பெரும் கவலை அடைந்தேன். இந்தச் சிறுவனுக்கா இப்படியான பெரும் வியாதி என்று, மிகவும் வாடிய தோற்றம், கண்களிலே வெள்ளைப்புள்ளி, மெலிந்த தோற்றத்துடன் வந்து என்னுடன் பேச ஆரம்பித்தார்.

அவர் தன்னை பற்றி கூறியதை இங்கு வாசகர்களுக்கு தருகின்றேன். 1998ஆம் ஆண்டில் பிறந்தவர் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரத்தில் கிண்ணியா புகாரி மகா வித்தியாலயத்தில் கல்வி கற்று வருவதாக தெரிவித்தார். கடந்த இரண்டு மாதங்களாக தான் பாடசாலைக்கு செல்லவில்லை. காரணம் தனது கண்களில் வெண்புள்ளி விழுந்ததால் எழுத்துக்களை பார்ப்பதற்கு தன்னால் முடியாமல் உள்ளதாகவும் தெரிவித்தார்.

இவருடைய தாயார் மத்திய கிழக்கு நாடொன்றிற்கு பணிப் பெண்ணாக சென்று ஒன்றரை வருடங்களாகின்றது. நவாஸ்சின் நிலையை எடுத்துக் கூறியும் பல கடிதங்கள், தந்திகள் மூலம் தொடர்பு கொண்டும் தாயார் பணியாற்றும் வீட்டின் எஜமானர், அவரை இலங்கைக்கு திருப்பி அனுப்ப மறுப்பதாக அவருடைய உம்மம்மா தெரிவித்தார். மேலும் நவாஸ்சின் தந்தையோ வெளி நாட்டில் இருந்து வந்து வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்து கொண்டு மாத்தளை பகுதியில் வாழ்ந்து வருகின்றார். நவாஸ் மற்றும் அவருடைய இரண்டு தங்கைகள் ஆகியோரை அவருடைய வயதான பாட்டியும் தாத்தாவுமே பராமரித்து வருகின்றார்கள்.

இந்த நோயானது 2006ஆம் ஆண்டளவில் நவாசை தொற்றிக்கொண்டது. அப்போது கடுமையான காய்ச்சல், உடம்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீக்கம் முதலான அறிகுறிகளை கண்டு சிறுநீரக பரிசோதனை செய்து பார்த்த போது அவருடைய நோய் அடையாளம் காணப்பட்டுள்ளது. ஆயினும் சரியான பராமரிப்பு, சிகிச்சை முறை மேற்கொள்வதற்கான போதிய பொருளாதார வசதிகள் இல்லாமையினால் இன்று நவாஸ்இர்கானுடைய நிலைமை மோசமடைந்து காணப்படுகிறது. ஒரு மாதத்தில் குறைந்தது இரண்டு தடவைக்கு மேல் உடல் வீக்கமடைந்து மிகவும் கடுமையாக காணப்படுவார் நவாஸ். அப்போது அவரை திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அழைத்து சென்று இரத்த சுத்திகரிப்பு மேற்கொள்ள சிறிது சுகம் கிடைக்கும். இவ்வாறு அவருக்கு ஒரு தடவை திருகோணமலை வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதனாலேயே போக்குவரத்து மட்டும் ரூபா. 3000 செலவு ஏற்படுகிறது என அவருடைய குடும்பத்தார் கவலையடைகின்றனர்.

இவ்வாறான அவல நிலையில் ஆயிலையடி கிராமத்தில் பல குடும்பங்கள் சோகக் கதைகளை தாங்கி நிற்கின்றன. உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் மற்றும் கிழக்கு மாகாணசபையின் அரசியல் தலைவர்கள் மற்றும் பல பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்டுள்ள கிண்ணியாவில் இவ்வாறு தமது வாழ்வோடும் சாவோடும் போராடும் மக்களும் உள்ளார்கள். அவர்களின் வாழ்வில் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

ஞாயிறு தினக்குரல் 17 ஆகஸ்ட் 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வுக்கும் சாவுக்கும் இடையே போராடும் கோமரங் கடவெல மக்கள்

எனக்கு 55 வயதாகிவிட்டது. இந்த நோயினால் பாதிக்கப்பட்டு நான் இறந்தால் பரவாயில்லை. இக்கிராமத்தில் வாழும் சிறுபிள்ளைகளும் இந்நோய் தாக்கத்திற்கு உள்ளாகி பாதிக்கப்படுவார்களே? என்ற கவலைதான் என்னை தினமும் வாட்டுகிறது என்றார் திருகோணமலை மாவட்ட கோமரன்கடவெல பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள, கல் கடவெல கிராமத்தில் வசித்துவரும், சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டு மரணத்தை எதிர்கொண்டு காத்திருக்கும் 55 வயதான பிரேமரத்ன என்பவர்.

கோமரன் கடவெல பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மக்களில் 04 குடும்பத்திற்கு ஒருவர் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு கடந்த ஒன்றரை வருடங்களில் 15 இற்கும் மேற்பட்டவர்கள் இறந்துள்ளதாக அங்குள்ள பிரதேச வைத்தியசாலையின் புள்ளிவிபரம் தெரிவிக்கின்றது.

திருகோணமலை மாவட்டத்தின் ஒதுக்குப்புறமான பகுதியில் அநுராதபுரம், வவுனியா போன்ற மாவட்டங்களுக்கு அண்மையிலேயே இந்த கோமரங் கடவெல பிரதேசம் புவியியல் ரீதியாக அமைந்துள்ளது.

இப்பிரதேசத்தில் 15,425 பேர் மொத்தசனத் தொகையாக காணப்படுவதுடன், கல்வியறிவை பொறுத்தவரை இம்மாவட்டம் மிகவும் பின்தங்கிய பிரதேசமாகவும் காணப்படுகிறது. இப்பிரதேசத்தின் பிரதான தொழிலாக விவசாயமும், அரசின் ஊர்காவல்படை சேவையில் அதிகமானவர்கள் பணியாற்றுவதையும் காணமுடிகிறது. கடந்த கால யுத்த சூழலின் போது நகரப் பகுதியுடனான தொடர்புகள் குறைந்தமையால் தமக்குள் ஓர் குறுகிய வட்டத்திற்குள் வாழும் சமூகமாக இவர்கள் காணப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பிரதேசத்தின் பல கிராமங்களில் உள்ள மக்களுக்கு சிறுநீரகம் தொடர்பான நோய் ஏற்படுவதாக கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியாக இனங்காணப்பட்டு இதற்கான சிகிச்சையினை மக்கள் பெற்று வருகின்றனர். ஆரம்ப காலத்தில் சிறுநீரக நோயாளிகளில் சிலர் நாட்டு வைத்திய முறைகளை நாடி இதற்காக தம்புள்ளையில் உள்ள கண்டளமை எனும் இடத்தில் 20 நாட்களுக்கு ஒரு முறை 9000 ரூபா செலவு செய்து சிகிச்சை பெற்று வந்துள்ளனர். தமது வறுமை காரணமாக அவற்றை எல்லாம் கைவிட்டு தற்போது அரச வைத்தியசாலைகளில் இலவசமாக வழங்கப்படும் ஆங்கில வைத்தியத்திற்கு தம்மை உட்படுத்தி சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் இங்கு அதிகமாக உள்ளனர் என்பது எவராலும் மறக்க முடியாத உண்மையாக இருந்தபோதும், இந்நோய் உருவாவதற்கு சரியான காரணத்தை எவராலும் உறுதியாகவும் அத்தாட்சிகளுடனும் நிரூபிக்க முடிவதில்லை என்பது எம்மை வியப்பில் ஆழ்த்தியது. இருந்தும் இதற்கான காரணம் என்னவென்று அறியும் நோக்குடன் கோமரங் கடவெல பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியை சந்திக்க நாம் சென்றிருந்த போது சுகாதார வைத்திய அதிகாரி கோமரங் கடவெல கிராமிய மருந்தகத்தில் நோயாளிகளை பரிசீலித்து மருந்து வழங்கும் கடமையில் ஈடுபட்டிருந்தார். ஆம் இவரே சுகாதார வைத்திய அதிகாரியாகவும் வைத்தியசாலை வைத்தியராகவும் கடமையாற்றி வருகின்றார். இளம் வயதுடைய டாக்டர் சமில நிரோசனவிமலசேனவிடம் இப்பகுதியில் உள்ள மக்களுடைய சிறுநீரக நோய்க்கான காரணம் தொடர்பாக வினவியபோது அவர் இவ்வாறு தெரிவிக்கிறார்.

இந்நோய்க்கான காரணமாக குடிநீர்ப்பிரச்சினை இருக்கலாம் என நம்பப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணம் அநுராதபும், பதவிய போன்ற பிரதேசங்களில் நிலத்தடி நீரில் நச்சுத் தன்மை காணப்படுவதாலும் அப்பகுதியுடன் தொடர்புடையதாக கோமரங் கடவெலவும் உள்ளமையாலும் இப்பிரச்சினை தோன்றி இருக்கலாம் என தெரிவித்தார்.

ஆயினும், எம்மிடம் சிகிச்சைக்காக வரும் நோயாளிகள் இரண்டு சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்ட பின்னர் தான் வருவதனால் இவர்களுக்கான சிகிச்சை முறையை நாம் மேற்கொண்டு வருகின்றோம் என்றார். மேலும் குடிநீரில் நச்சுக் கலவை உள்ளது தான் இதற்கு காரணம் என்று உறுதியாக தம்மால் கூற முடியாது. ஏனெனில், கடந்த 10 வருடங்களுக்கு மேல் இந்நோய் கண்டறியப்பட்டும் குடிநீர் தொடர்பான பூரணமான ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை என்றார். தமது தனிப்பட்ட கருத்தொன்றினை அவர் தெரிவிக்கையில்:

இந்நோய் குறிப்பிட்ட ஒரு குடும்ப உறவினர்கள் மத்தியில் அதிகமாக காணப்படுவதனால் இந்த உறவுகளுக்குள் திருமணம் செய்வது இது உருவாவதற்கான காரணமாகவும் இருக்கலாம் என தெரிவித்தார்.

தொடர்ந்து, சுகாதார வசதிகள் தொடர்பாக இப்பிரதேசத்தில் ஏனைய பல்வேறு பிரச்சினைகளை எம்மால் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. 10,000 பேருக்கு ஒரு பொது சுகாதார பரிசோதகர் இருக்க வேண்டிய நிலையில் 15 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் வாழ்வதுடன் பாரிய சுகாதார நோய்களுக்கு உள்ளாகியுள்ள இப்பிரதேசத்தில் ஒரே ஒரு சுகாதார பரிசோதகர் மட்டுமே கடமையில் அமர்த்தப்பட்டுள்ளார். மேலும், வைத்தியசாலை வைத்தியரும் சுகாதார வைத்திய அதிகாரியும் ஒருவராக இங்கு கடமையாற்றுவதுடன், இதனால் தொற்று நோய்களான டெங்கு போன்ற நோய்களை கட்டுப்படுத்துவதும் கடிமையாகவுள்ளது. மேலும் சயரோகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற நோய்கள் பக்மிகம, அடம்பன் போன்ற கிராமங்களில் இனங்காணப்பட்டும் அவை தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ள போதுமான ஆளணி குறைபாடு காணப்படுவதையும் அவதானிக்க முடிகிறது.

இவ்வாறான சிறுநீரக நோய்க்கான காரணம் குடிநீர்தானா? என்பதை ஆய்வு மூலம் கண்டறிய எவரேனும் முன் வருவார்களேயானால், அவர்களுக்கான உணவு, சுத்தமான குடிநீர், தங்குமிடம் போன்ற வசதிகளை ஏற்படுத்தி தரமுடியுமென சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பொதுமக்கள் சிலரும் தெரிவிக்கின்றனர்.

எவ்வாறாயினும், இந்நோய்க்கான சரியான காரணத்தை அறியவேண்டுமென்ற எமது ஆர்வம் எம்மைவிட்டு அகலாமையினால் மக்கள் பிரதிநிதியாக கோமரங்கடவெல பிரதேசத்திற்கான பல்வேறு அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்து வரும் பிரதேச சபைத்தலைவர் சந்தன விஜிதகுமாரவை அணுகி இவ்விடயம் தொடர்பாக வினவியபோது அவர் தெரிவித்தார். கோமரங் கடவெல பிரதேச மக்களில் பெரும்பாலானவர்களின் நீண்டகால ஜீவனோபாயமாக காணப்படுவது விவசாயமே. எனவே, கூடிய விளைச்சலை பெறவேண்டும் என்பதனால் தொடர்ச்சியாக இவர்கள் பயன்படுத்தி வந்த இரசாயன உரம் மற்றும் பூச்சி கொல்லி பாவனையின் காரணத்தால் நீர் நிலைகள் மாசடைந்த காரணத்தினாலேயே இந்த நீரை குடிநீராக பயன்படுத்தும் மக்களுக்கு சிறுநீரகம் தொடர்பான நோய்கள் ஏற்படுவதாக தெரிவித்தார்.

கோமரங் கடவெல பிரதேச மக்கள் பெரும்பாலும் கிராமிய தொழில் முறைமையினையும் வாழ்க்கை முறைமையினையும் கடைப்பிடித்து வருவதனால் இவர்களிடம் வெற்றிலை போடுதல், புகைத்தல், மதுபழக்கம் போன்றவையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரித்து காணப்படுவதனால் இவ்வாறான தவறான பழக்கவழக்கங்களும் சிறுநீரக நோய்களுக்கு காரணங்களாக அமையக்கூடும் என்பதை எமது அவதானிப்பாகக் கருதலாம்.

எவ்வாறாயினும், குடிநீர் மாசடைந்து காணப்படுவது தான் இச்சிறுநீரகநோய் ஏற்படுகிறது என்ற பலரது ஊகங்களுக்கு அமைய சுத்தமான குடிநீரை வழங்கவும் அரசமட்டத்தில் சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையையும் அறிய முடிகிறது.

கோமரங் கடவெல பிரதேசத்திலேயே சுத்தமான குடிநீர் கிடைக்கும் பிரதேசமாக கருதப்படுவது ரன்கிரிஉள்பொத்த எனும் விகாரையுடன் கூடிய மலைப்பிரதேசமாகும். இங்கு இயற்கையான வெந்நீர்க்கிணறு ஒன்றும் காணப்படுகிறது. இதன் அடிவாரத்தில் குழாய்க்கிணறு ஒன்றினை அமைத்து அங்கிருந்து நீரை பெற்று கந்தமலாவ எனும் இடத்தில் புறநெகும திட்டத்தின் ஊடாக 10,99,2265 ரூபா பெறுமதியான நீர்த்தாங்கி ஒன்றை அமைத்து சுத்திகரிக்கப்பட்ட சமூகநீர் வழங்கல் திட்டம் ஒன்றுக்கான ஆரம்பப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. மேலும், தேசியநீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையினால் 8000 லீற்றர் கொள்வனவுடைய குடிநீர் பவுசர் ஒன்றும் 1000 லீட்டர் பிளாஸ்டிக் தாங்கிகள் 25உம் 25 லீட்டர் பிளாஸ்டிக் பாத்திரங்கள் 800உம் கோமரங்கடவெல பிரதேச சபையினூடாக வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் கோமரங் கடவெல, பதவிஸ்ரீபுர, மொறவெவ, குச்செவெளி போன்ற பகுதிகளுக்கான குழாய் மூலம் குடிநீர் வழங்கும் பாரிய திட்டம் ஒன்றும் தேசிய நீர் வழங்கல் திட்டமிடல் அமைச்சினூடாக திட்டமிட்டு நடைமுறைக்கு வரவுள்ளது. இது எதிர்வரும் 03 வருடங்களுக்குள் நிறைவடையும் என எதிர்பார்ப்பதாக கிழக்கு மாகாண தேசிய நீர் வழங்கல் அதிகார சபையின் கிழக்கு மாகாண பிரதி பொது முகாமையாளர் கே. ஜே. வீ. ஏ. பெரேரா தெரிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பினும், திருகோணமலை மாவட்டத்தில் குழாய் மூலம் சுத்தமான குடிநீர் கிடைப்பது 05 பிரதேச செயலக பிரிவுகளிலேயே உள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் மேலும் 04 பிரதேச செயலக பிரிவுகளுக்கு குழாய் மூலமான சுத்தமான குடிநீர் கிடைக்கவுள்ளமை மகிழ்ச்சியை அளித்த போதும், கோமரங் கடவெல மக்களின் சிறுநீரகப் பிரச்சினைக்கு குடிநீர்தான் முக்கிய காரணமா? என்ற கேள்வி எம் மனதில் மீண்டும் தலைதூக்கியது.

யுத்தம் முடிவடைந்து பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் இடம்பெற்றுவரும் நமது நாட்டில் நாட்டை ஆளும் அதே இனத்தினை சேர்ந்த ஒரு பிரிவு மக்கள் மட்டும் இவ்வாறு அன்றாடம் தமது வாழ்வுரிமைக்காக போராடி வரும் நிலை ஒரு வகையில் சுகாதாரம் தொடர்பான உரிமை இக் கோமரங் கடவெல மக்களுக்கு மறுக்கப்படுகின்றது எனும் கருத்தையே உணர்த்தி நிற்கின்றது.

பசித்த வயிற்றுக்கு உணவில்லாத போதும் பச்சைத் தண்ணீரையாவது குடித்து உயிர்வாழலாம் என்பார்கள். ஆனால், இந்தத் தண்ணீரே விஷமாக இருந்தால் இம்மக்களின் நிலை எவ்வளவு பரிதாபமானது. இப்பிரதேசத்திலுள்ள பிஞ்சுக் குழந்தைகள் முதல் கர்ப்பிணிப் பெண்கள், வயோதிபர்கள் ஆகியோரை பார்க்கும் போது அவர்களின் முகங்களில் ஒரு வித பயம் கலந்த தோற்றத்தையே அவதானிக்க முடியும்.

இந்த மக்களின் மரணத்திற்கான காரணமாக அமையும் நோயின் காரணத்தை கண்டறிவது எமது அரசாங்கத்தினதும் சுகாதார அமைச்சினதும் கடமையாகும். நோய்க்கான காரணத்தை கண்டறியும் நடவடிக்கையை மேற்கொள்வதன் மூலம் கோமரங் கடவெல பிரதேசத்தில் உள்ள எதிர்கால சந்ததியையாவது நாம் காப்பாற்ற முடியுமல்லவா?

ஞாயிறு தினக்குரல் 23 செப்டெம்பர் 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரை நூற்றாண்டுக்கு மேல் வாழும் விளாங்குளம் கிராம மக்களின் காணி உறுதி சாத்தியமாகுமா?

**265 மக்கள் தொகையை கொண்டுள்ள இக்கிராமத்தில் உள்ளவர்களின் வாழ்வாதாரம் கூலித்தொழில் மற்றும் வீட்டுத் தோட்ட விவசாயம் அத்துடன், நன்னீர் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் சில குடும்பங்களும் இக்கிராமத்தில் உள்ளன.**

வந்தாரை வாழவைக்கும் திருகோணமலையில் பூர்வீகமாக வாழும் பலர், வாழ்வதற்கும் உரிமைகளை அனுபவிப்பதற்கும் வாய்ப்புகள் இல்லாமல் பல்வேறு இடையூறுகளை தாங்கி வாழ்கின்றனர். அதேவேளை, பல பூர்வீக தமிழ்க் கிராமங்கள் தம் அடையாளத்தை இழந்து வருகின்றன. அந்த வரிசையில் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட நீண்டகால தமிழர் வரலாற்றுடன் பின்னிப் பிணைந்த கிராமம் விளாங்குளம் கிராமம் ஆகும்.

விளாங்குளம் என்றாலே பலருக்கு ஞாபகம் வருவது பால், தயிர், நெற்செய்கை, குளத்து மீன் என்பன. இயற்கையோடு பின்னிப் பிணைந்து நகரத்துக்கு அருகில் உள்ள கிராமமாக இவ்விளாங்குளம் கிராமம் காணப்படுகிறது. இக்கிராமம் திருகோணமலை, கண்டி நெடுஞ்சாலையில் நகரத்தில் இருந்து 12 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது. அங்கிருந்து இடது புறமாக 1 கிலோ மீற்றர் தூரம் பயணம் செய்தால் இக்கிராமத்தை அடையலாம்.

விளாங்குளம் கிராமத்திற்கென 50 வருடகால நீண்ட வரலாறு இருப்பதாக கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் சுப்பிரமணியம் தட்சனன் தெரிவிக்கின்றார். எனது அறிவுக்கு எட்டிய வகையில் 1964ஆம் ஆண்டு அரசின் குடியேற்றத் திட்டத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் இக்கிராமம் குடியேற்றப்பட்டது. அன்று ஒரு குடும்பத்துக்கு 2 ஏக்கர் வீதம் காணி வழங்கப்பட்டதுடன், 1970களில் 17 தமிழ்க்குடும்பங்கள் இக்கிராமத்தில் வாழ்ந்து வந்தன.

எல்லா வளங்களுடனும் சிறப்பாக இக்கிராமத்தில் நாம் வாழ்ந்து வந்தபோது, 1983ஆம் ஆண்டு இக்கிராமம் முதல் முறையாக வன்செயலுக்குள்ளாகியது. அப்போது எவ்வித உயிர்ச்சேதமும் இன்றி எமது உடமைகளை மட்டுமே வன்செயலில் ஈடுபட்டவர்கள் அழித்தனர்.

அதன் பின்னரும் நாம் எமது சொந்த இடங்களிலேயே மிஞ்சிய உடைமைகளை வைத்து வாழ்க்கையைத் தொடங்கினோம். ஆயினும், அதுவும் நிலைக்கவில்லை, 1986ஆம் ஆண்டில் இயக்கங்களுக்கு எமது கிராமம் உதவுவதாகக் கூறி கிராமத்திலிருந்து அனைவரையும் வெளியேற்றினார்கள்.

அதற்குப் பின்னர் 1987ஆம் ஆண்டு மீண்டும் எம்மை மீளக்குடியேற்றிய போது எமது குடும்பங்கள் அதிகரித்து காணப்பட்டமையால் 50 குடும்பங்கள் மாத்திரம் மீளக் குடியேற்றப்பட்டோம்.

ஆயினும் இந்த மீள்குடியேற்றமும் கூட 03 வருடங்களுக்கு மேல் நிலைக்கவில்லை. 1990ஆம் ஆண்டில் ஏற்பட்ட மிக மோசமான வன்செயலினால் நாம் குடியிருந்த வீட்டின் அத்திபாரக்கல் இருந்த இடமும் தெரியாத அளவுக்கு எமது கிராமமானது முற்றாக அழிக்கப்பட்டது.

அப்போது நாம் சீனக்குடாவில் உள்ள இராணுவ முகாமான "கிளப்பன் பேக்" முகாமில் இருந்து அதன் பின் பல அகதிமுகாம்களில் இடையிடையே தங்கியிருந்து இறுதியில் திருகோணமலை நிலாவெளி வீதியில் உள்ள ஆனந்தபுரியில் அகதிகளாக வாழ்ந்து வந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பல துயரங்களை சுமந்து 15 வருடங்கள் அகதி வாழ்க்கை வாழ்ந்து வந்த நாம் 2005ஆம் ஆண்டிலிருந்து எமது கிராமத்தில் மீண்டும் குடியிருந்து வருகின்றோம். இவ்வாறு நாம் குடியேறுவதற்கு ரொட்டரி கழகம் எனும் நிறுவனத்தினர் 95,000 ரூபா பெறுமதியான 84 வீடுகளை அமைத்தார்கள். அவ்வாறு இரண்டு அறைகளும், ஒரு வரவேற்பு அறை அடங்கலான 22-20 பரப்பளவுள்ள வீடொன்றை அமைத்து தந்தனர். இதில் ஒரு அறைக்கு மட்டுமே கதவு, யன்னல் என்பன அமைக்கப்பட்டன.

நாம் இன்றுவரை குடியிருந்து வரும் வீடுகளும் அவர்கள் அமைத்துத் தந்ததே ஆயினும், இந்த வீடுகளில் பெரும்பாலான வீடுகள் குடியிருக்க ஏற்றதாக இல்லை. எல்லா வீடுகளிலும் வெடிப்பும், சுவர்கள் விழுந்தும், கூரைகள் காற்றில் பறந்தும் காணப்படுகின்றன. மேலும் அரை நூற்றாண்டுக்கு மேல் விளாங்குளம் கிராமத்தில் பிறந்து வளர்ந்து வாழ்ந்துவரும் மக்களுக்கு அவர்கள் வாழும் நிலத்துக்கு எவ்வித உறுதிப் பத்திரங்களும் அரசாங்கத்தால் வழங்கப்படவில்லை.

சில மாதங்களாகவே திருகோணமலை பட்டிணமும் சூழலும் பிரதேச செயலகத்தால் 29 குடும்பங்களுக்கான காணிக்கச்சேரி இடம் பெற ஏற்பாடுகள் இடம்பெற்று வருவதாக தெரிவித்தார். மேலும், அவர் தெரிவிக்கும் போது எமது கிராமத்துக்கு அரசின் அபிவிருத்தி நடவடிக்கைகள் என்கிறபோது 69 இலட்சம் செலவில் மின்சார வசதிகள், 840 மீற்றர் கொங்கிரீட் வீதி மற்றும் ஒரு கோடி ரூபா செலவில் குளம் புனரமைப்பு, 8 இலட்சம் ரூபா செலவில் இரண்டு கிணறுகள் என்பன அமைத்து தரப்பட்டுள்ளது என கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் சு. தட்சனன் தெரிவித்தார்.

தற்போது இக்கிராமத்தில் 65 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றபோதும், 45 குடும்பங்கள் மாத்திரமே தமிழர் குடும்பங்களாக காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய 20 குடும்பங்களும் இஸ்லாமியர்களாகவும், சிங்களவர்களாகவும் காணப்படுகின்றனர். இதில் இன்னுமொரு சம்பவம், 2009 யுத்தம் முடிந்ததன் பின்னர் 09 சிங்களக் குடும்பங்கள் அத்துமீறி அங்கு கட்டப்பட்ட நிலையில் உள்ள வீடுகளில் வாழ்ந்து வருகின்றமையை அவதானிக்க முடிகிறது. இந்த நிலை தொடருமானால் இக்கிராமம் பூர்வீக தமிழ்க் கிராமம் என்பது இல்லாமல் போவதற்கு குறைந்த காலம் போதுமானது. ஏற்கனவே 2 ஏக்கர் காணி வழங்கப்பட்டிருந்த மக்களுக்கு தற்போது குடியிருப்புக் காணியாக 80 பேர்ச் காணியே வழங்கப்பட்டுள்ளது.

285 மக்கள் தொகையை கொண்டுள்ள இக்கிராமத்தில் உள்ளவர்களின் வாழ்வாதாரம் கூலித்தொழில் மற்றும் வீட்டுத்தோட்ட விவசாயத்தையே நம்பியுள்ளது. அத்துடன், நன்னீர் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் சில குடும்பங்களும் இக்கிராமத்தில் உள்ளன. தற்போது மாவட்டத்தில் வரட்சியான காலநிலை நிலவுவதனால் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடுவோரின் வாழ்வாதாரமும் கேள்விக் குறியாகவுள்ளது. பொருளாதாரத்தை ஈட்டும் வழிமுறைகள் இக்கிராமத்து மக்களுக்கு எட்டாக் கனியாகவே உள்ளது.

இக்கிராமத்திற்கென ஒரு பாடசாலை இல்லாத காரணத்தால் இக்கிராமத்தில் கல்வி கற்கும் மாணவர்களான 25 பேர் 3 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள கப்பல் துறை பாடசாலைக்கு சென்று வருகின்றனர். அரசியல் இலாபம் கருதி முன்னெடுத்து வரும் அபிவிருத்தித் திட்டங்களுடன் மட்டும் இக்கிராம அபிவிருத்தி நின்றுவிடாது. அவர்களின் நிலஉரிமை மற்றும் மாணவர்களின் கல்வி தொடர்பான விடயத்திலும் அக்கறை செலுத்துவதே விளாங்குளம் கிராமத்தின் முழுமையான அபிவிருத்தியாகும்.

**ஞாயிறு தினக்குரல் - 2015**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் உருவாக்கிய விதவைகள்

விதவைகள் என்றாலே நம் கண்ணுக்கு முன் வரும் தோற்றம் வாடிய முகமும், வெற்று நெற்றியும், வெள்ளைப் புடைவையுமாக சோகத்தின் மொத்த உருவமாக காட்சியளிக்கும் பெண்களே. இவர்களை நமது கிராமங்களிலும் அயல் வீடுகளின் உறவினர் மத்தியிலும் குடும்பங்களுக்குள்ளும் நாம் அன்றாடம் கண்டு வருகின்றோம். இவ்வாறு விதவைகளான ஒவ்வொருவரும் தன்னகத்தே பல கதைகளை வைத்துக் கொண்டும் பல கேள்விகளை சுமந்து கொண்டும் உலாவுகின்றனர்.

நமது நாட்டைப் பொறுத்தவரை விதவைகளான பல பெண்கள் யுத்தமென்ற கோர அரக்கனிடம் சிக்குண்டே தமது துணைகளை இழந்துள்ளனர். இவர்களிடையேயும் காணாமல் போனோர், கடத்தப்பட்டோர், இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டோர், யுத்த முனைகளில் இறந்தவர்கள், குண்டு வெடிப்புக்களில் அகப்பட்டவர்கள் எனப் பல கோணங்களில் காணப்படுகின்றனர்.

அடுத்தது விபத்து, இயற்கை அனர்த்தங்களான சுனாமி, வெள்ளம், மண்சரிவு போன்றவற்றாலும் உயிர்கள் காவு கொள்ளப்பட்டதோடு, சிலர் நோய்வாய்ப்பட்டும் இறந்துள்ளனர். இவ்வாறான சம்பவங்களின் போது கணவனை இழந்த பெண்களிடம் நேரடியாகவே மறுகணம் குடும்பப் பொறுப்பு சுமத்தப்படுகின்றது.

கணவன் இருக்கின்ற காலத்தில் குடும்ப வருமானத்திற்கேற்ப குடும்பத்தை நிர்வகித்துக் கொண்டு சென்ற பெண்களிடம் வருமானத்தைத் தேடும் பணியும் சுமத்தப்படுகின்றது. இன்று விண்ணைத்தொடும் விலைவாசி உயர்வில் அன்றாட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவுத்தேவை, உடை, வீட்டுப்பராமரிப்பு, நீர், மின்சாரக்கட்டணம், குழந்தைகளின் கல்விச் செலவு இவற்றிற்கு ஒரு பெண் சாதாரண வேலை ஒன்றுக்கு சென்று சமாளிக்க முடியுமா? என்றால் இது சாத்தியமாகாது. எமது நாட்டில் பெண்களுக்கு சம்பளம் ஆண்களை விட குறைவாகவே தனியார் துறைகளில் வழங்கப்படுகிறது. சாதாரண கூலித்தொழிலில் கூட சம கூலி வழங்கப்படுவது இல்லை. இவ்வாறு இவ்விதவைப் பெண்கள் பொருளாதார சமூக, அரசியல் ரீதியான பல்வேறு பிரச்சினைகளுக்கு அன்றாடம் முகம் கொடுத்து வருகின்றனர்.

அடுத்து சமூக ரீதியாகவும் கலாசார ரீதியாகவும் இப்பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை நோக்குவோமானால், கணவனை இழந்து தனிமையில் வாழும் இளம் பெண்களை சமூகம் வித்தியாசமான கோணத்திலேயே நோக்குகின்றது. இவர்களின் வீட்டுக்கு நெருங்கிய உறவினரோ, தூரத்து உறவினரோ, நண்பர்களோ வந்து சென்றால் சமூகம் அவர்கள் இருவருக்கும் முடிச்சுப் போட்டு பேச ஆரம்பித்து விடும்.

ஒரு ஆணிடம் கடன் வாங்கினாலும் சரி, நன்கொடை பெற்றாலும் தவறாகவே நோக்குவார்கள், வழமைக்கு மேலாக கொஞ்சம் வசதியாக இருந்தாலும் இந்த வருமானம் என்ன வழியில் வந்தது என ஆராய ஆரம்பித்து விடுவார்கள். இவ்வாறு பாலியல் ரீதியான கண்ணோட்டங்களுக்கும் வார்த்தைகளுக்கும் அஞ்சி இளம் பராயத்தில், அவர்கள் வாழ்ந்ததற்கும், தமது கணவன் உயிருடன் இருந்தபோது வாழ்ந்ததற்கும், கணவன் இறந்த பிறகு வாழ்வதற்கும் பாரிய வேறுபாட்டினை காண முடியும். தமது இயல்பான உணர்வுகள், ஆசைகள், திறமைகள் என்று எல்லாவற்றிற்கும் முற்றுப்புள்ளி வைத்து விட்டு சமூகத்தின் பார்வையில் இருந்து ஒதுங்கி வாழவே விரும்புகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாச்சார ரீதியான ஒடுக்குமுறை அநேகமாக கிராமங்களில்தான் இடம்பெறுகின்றது. என்றிருந்த காலம் மருவி இன்று நகரத்தில் உள்ளவர்களே இதனை நடைமுறைப்படுத்தி வருகின்றனர். இதற்கு காரணம் நகரத்தில் தற்போது குடியமர்வர்கள் அநேகர் கிராமத்தவர்களாக உள்ளதால் தமது உடைமைகளுடன் இப்பண்புகளையும் நகரத்திற்கு எடுத்து வருகின்றனர். மங்கள காரியங்களில் பெண்கள் கலந்து கொள்வதில் உள்ள உத்தியோகபூர்வமற்ற தடை இதன் உச்சமாக விளங்குகிறது.

எங்கள் தமிழ் பாரம்பரிய சடங்குகள் யாவற்றையும் அவதானியுங்கள்: அவற்றை முன்னின்று செய்வதற்கு திருமணம் செய்த அதுவும் குழந்தைப் பாக்கியம் கிடைத்தவர்களே "சுமங்கலி"கள் என அழைக்கப்படுகின்றனர். கோயில் சடங்குகளில் சிலவேளை கன்னிப் பெண்கள் ஏதோ ஒரு சில இடங்களில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். ஆனால் கணவனில்லாமல் வாழும் பெண்களுக்கு ஒரு இடமும் கிடையாது. அவர்களை ஒதுக்கி வைப்பதன் மூலம் அவர்களின் சுயமரியாதையை முற்றாக அழிப்பதற்கு சமூகம் எத்தனிக்கின்றது.

அரசியல் ரீதியாக இப்பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளாக கணவன்மார் கடத்தப்பட்டோர் அல்லது காணாமல் போனோர். ஆனால் அவர்களின் நிலை என்னவென்று தெரியாமல் தாம் சுமங்கலியா? அமங்கலியா? என்பது தெரியாமலேயே வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் இறந்துவிட்டார்கள் என்று மரணச் சான்றிதழ் கிடைத்தால் கூட, அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களால் கிடைக்கும் சலுகைகளை பெறமுடியும். அதுவும் இன்றி கணவன் இருக்கின்றாரா? இல்லையா? என்று பிள்ளைகளின் கேள்விக்குக் கூட பதில் கூறத்தடுமாறும் அபலைப் பெண்களாக இவர்கள் காணப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று தசாப்தங்களுக்கும் மேலாகத் தொடர்ந்த போரின் காரணமாக இலங்கையின் கிழக்கில் மாத்திரம் 49,000 விதவைகள் உள்ளனர். வாழ்க்கையின் வசந்தத்தை தொலைத்துவிட்டு தவிக்கும் இந்த விதவைகளில் 25,000இற்கும் அதிகமானோர் 35 வயதுக்கு குறைந்தவர்களே. அதிலும் குறிப்பாக 15,000 விதவைகளுக்கு மூன்று அல்லது அதற்கு அதிகமான பிள்ளைகள் இருக்கின்றார்கள்.

போர் முடிந்து இயல்பு வாழ்க்கை திரும்புவதாகவும் அபிவிருத்தி திட்டங்கள் நடைபெறுவதாகவும் அரசாங்க மட்டத்தில் தெரிவித்த போதும், இதுவரை விதவைகளுக்கான பிரத்தியேக திட்டங்கள் எதுவும் அரசினால் முன் வைக்கப்படவில்லை. ஆங்காங்கே இடம்பெறுகின்ற திட்டங்களில் ஒரு சில விதவைகள் உள்வாங்கப்படுகிறார்களே தவிர, தனித்துவமான திட்டம் எதுவும் அறிமுகப்படுத்தப் படவில்லை.

சில வருடங்களுக்கு முன்னர் வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியின் போது ஏதோ விதவைகள் முன்னுரிமைப்படுத்தப்பட்ட போதிலும், அவற்றில் கனிசமான நிறுவனங்கள் நாட்டை விட்டு வெளியேறியதன் காரணமாக அதுவும் இப்போது கிடையாது.

இவ்வாறு பல்வேறு துன்பங்களுக்கு முகம் கொடுத்து வருகின்ற பல பெண்கள் கிராமங்களில் உள்ள போதும்! "ஒரு பானை சோற்றிற்கு ஒரு சோறு பதம்" என்பது போல திருகோணமலை மாவட்டத்தில் உள்ள மூதூர் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள பாரதிபுரம் கிராமத்தில் விதவைகள் சங்கத்தின் செயலாளர் தமது பிரச்சினைகளை இவ்வாறு தெரிவிக்கிறார்.

தமது கிராமத்தைச் சுற்றி சிங்களம் மற்றும் முஸ்லிம்கள் காணப்படுவதனால் கடந்த கால யுத்தத்தின்போது ஏற்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசின் ஒவ்வொரு தோல்விகளின் பிரதிபலிப்பு எமது கிராமத்திலேயே எதிரொலிக்கும். இது இனக்கலவரமாக மாறும். இவ்வாறு கடந்த 2006ஆம் ஆண்டு யுத்தத்தின் இறுதிக்கட்டத்தின் போது சில பின்னடைவுகளையும், உயிரிழப்புகளையும் சந்தித்த அயற்கிராம சிங்கள ஊர்காவல் படையினரதும், நாசகார சக்திகளினதும் செயலால் எனது கண் முன்னே எனது கணவர் சுட்டுக்கொல்லப்பட்டார். இரண்டு பிள்ளைகளுடன் நிர்க்கதியாக்கப்பட்ட நான் எந்தவொரு உதவியும் இன்றி தவிக்கின்றேன். எனது தாய், தந்தையும் 1985ஆம் ஆண்டு இவ்வாறான ஒரு இனக்கலவரம் இடம்பெற்ற போதே நான் எனது கிராமத்திலேயே வைத்து இழந்தேன். இவ்வாறு நிர்க்கதியாக விடப்பட்ட எனது இரண்டு குழந்தைகளையும் வைத்துக் கொண்டு எதிர்காலம் என்னவென்று தெரியாமல் தவிக்கின்றேன் என்று தெரிவித்தார்.

கிராமத்தில் செயற்படுத்தி வரும் வீட்டுத்திட்டம், மலசலகூடத்திட்டம், சமுர்த்தித் திட்டம், இவை எதுவும் எமக்கு வழங்கப்படவில்லை. குறிப்பாக சமூக சேவை திணைக்களத்தால் வழங்கப்படுகின்ற விதவைகளுக்கான பிச்சைச் சம்பளம் கூட எனக்கு வழங்கப்படுவதில்லை. இவ்வாறான நிலையிலேதான் 492 குடும்பங்கள் வாழும் இச்சிறிய கிராமத்தில் 132 விதவைகள் வாழ்ந்து வருகின்றோம் என 41வயது நிரம்பிய விதவைப் பெண் தெரிவிக்கிறார்.

இப்பெண்களின் பிரச்சினையான சமூக, பொருளாதார ரீதியான பிரச்சனைக்கு சரியான தீர்வு கிட்டாத வரை எதிர்கால சந்ததிகளின் போசாக்கு, கல்வி, கலாச்சாரம், பண்பாடு போன்றவற்றில் பாரிய குறைபாடுகளை நாடு எதிர்கொள்ள வேண்டிவரும் என்பது சமூக ஆய்வாளர்கள் சிலரின் கருத்தாகவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளும் அரசியல் தலைவர்களும் இவ்விடயம் தொடர்பாக தமது பார்வையை குவிக்க வேண்டிய நேரம் இது என்பதை உணரவேண்டும். இவ்விதவைகளின் பிரச்சினையை தீர்ப்பதன் மூலம் தேசிய அபிவிருத்திக்கும் ஆரோக்கியமான எதிர்காலத்திற்கும் வித்திடலாம்.

ஞாயிறு தினக்குரல் 2014





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல தலைமுறைகளாக சீரற்ற வாழ்வில் சிக்குண்ட மூதூர்–பாட்டாளிபுரம் கிராமம்

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் கிழக்கு திசையில் உள்ள தமிழ் கிராமங்களில் எல்லோரும் அறிந்த ஒரு கிராமமாக பாட்டாளிபுரம் கிராமம் விளங்குகிறது. ஏனெனில் அரசாங்க அதிகாரிகள் முதல் அரச சார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் அனைவரும் யுத்தம் மற்றும் சுனாமி என எல்லாக் காலங்களிலும் இங்கு பல இலட்சம் ரூபா நிதியை செலவு செய்து வாழ்வாதாரம் மற்றும் அடிப்படை வசதிகளுக்கான செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

ஆயினும் இக்கிராமத்தில் உள்ள பெண்களில் 45 வயதுக்கு மேற்பட்ட பெண் தலைமையிலான குடும்பப் பெண்கள் பலர் தமது ஜீவனோபாயத்தின் பிரதான தொழிலாக பிச்சை எடுப்பதையே கொண்டிருக்கின்றனர்.

பாட்டாளிபுரம் கிராமசேவகர் பிரிவில் 05 முக்கிய கிராமங்கள் உள்ளடங்குகின்றன. இவை பாட்டாளிபுரம், இளக்கந்தை, மலைமுந்தல், நீலாக்கேனி, வீரமாநகர் என்பவைகள் இக்கிராம மக்கள் கடந்த காலங்களில் பூர்வீகமாக காட்டுடன் நெருங்கிய தொடர்பை வைத்தே விறகு வெட்டுதல் மற்றும் தேன் எடுத்தல் போன்ற ஆதிக்குடிகளின் தொழிலையே நம்பி வாழ்ந்திருந்தார்கள் ஆயினும் யுத்தத்தின் போது இவர்களுடைய அபிவிருத்தியானது மேலும் நசுக்கப்பட்டது. காரணம் மண்ணெண்ணெய் முதல் சீமெந்து, தீப்பெட்டி வரை மட்டுப்படுத்தப்பட்டதாகவே இவர்களுடைய கிராமத்திற்கு எடுத்துச் செல்லக்கூடிய கட்டுப்பாட்டின் கீழ் இருந்த கிராமமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பின்னர் இறுதிக் கட்ட யுத்தத்தின் போது ஆரம்பப்புள்ளியாக இருந்த மூதூர் யுத்தத்தின் போது முழுமையாக தமது இருப்பிடத்தை விட்டு வெளியேறிய இம்மக்களின் காணி 30ஏக்கர் இன்னும் இலங்கைக் கடற்படைமுகாமிற்கென சுவீகரிக்கப்பட்டுள்ளது.

2008ஆம் ஆண்டு 7ஆம் மாதம் 11ஆம் திகதியளவில் மீண்டும் தமது கிராமத்திற்கு குடியேறிய இம்மக்கள் பூர்வீகமாக வாழ்ந்த இடத்தை விட்டு அதற்கு அருகாமையில் உள்ள வேறு ஓர் இடத்தில் தற்காலிகமாக குடியேற்றப் பட்டுள்ளனர். இன்று இந்த இடமே அவர்களின் நிரந்தர இடமாக மாறியது. இதில் 25 பேர்ச் காணி வீதம் வழங்கி 350 குடும்பங்கள் வாழும் பாட்டாளிபுரம் கிராமத்திற்கு இன்று 82 நிரந்தர வீடுகள் மட்டுமே கட்டப்பட்டு குடியேற்றப்பட்டு வாழ்ந்து வருகின்றனர். ஆயினும் தமது பூர்வீக நிலமான தற்போது கடற்படை முகாம் உள்ள இடத்தில் உலக வங்கியின் நிதியில் கட்டப்பட்ட 49 வீடுகள் சிதைந்த நிலையில் காணப்படுவதுடன் அம்மக்களுக்கு அக்காணிகளுக்கான உறுதி ஒப்பம் போன்ற ஆவணங்களும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

சர்வதேசத்தையே ஈர்த்த சம்பூர் அனல் மின்சார நிலையத்திற்காக அரசாங்கம் சவீகரித்த காணியைப்பற்றி பேசிக்கொண்டிருந்த நமக்கு அதன் அருகே இந்த பாட்டாளிபுரம் மக்களின் காணிப்பிரச்சினை கண்களில் படவில்லை போலும். இவ்வாறு பல்வேறு அடிப்படை பிரச்சினைகள் உள்ள இக்கிராமத்தின் பிரச்சினைகளை சற்று விரிவாகப் பார்ப்போம்.

## இளவயது திருமணம்

இக்கிராமத்தில் வருடத்திற்கு சராசரியாக 25இற்கு மேற்பட்ட இளவயது திருமணங்கள் இடம் பெறுகின்றதாக இக்கிராமத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவ மாது தெரிவிக்கின்றார். இவ்விடயம் தொடர்பாக சுகாதாரத் திணைக்களம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் பல இணைந்து பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகளை நடத்தினாலும் அவை அனைத்தையும் அந்த நிமிடத்துடன் மறந்து விட்டு மீண்டும் அதே பிழைகளை செய்கின்றார்கள். பெற்றோர் பலரும் இதற்கு உடந்தை என்பது கவலைக்குரியது. மேலும் இவ்வாறு சட்டத்திற்கு புறம்பாக இளவயது திருமணத்தில் ஈடுபடுவோரை பிரிப்பதோ அல்லது ஆணுக்கு சட்டப்படி தண்டனை வழங்குவதோ இக்கிராமத்தில் அரிதாக காணப்படுகின்றது.

கடந்த காலத்துடன் ஒப்பிடும் போது இந்த எண்ணிக்கை சற்றுக் குறைந்துள்ளது என்ற போதும் இது எதிர்கால சந்ததிகளின் வாழ்விற்கு பாரிய பின்னடைவை கொண்டுவரும் செயலாகும். மேலும் சாதாரணமாக 13-14 வயதுகளில் இளவயது திருமணம் பெண்கள் முடித்திருந்தால் 18 வயதை அடைந்தால் தான் இவர்கள் பதிவுத் திருமணம் செய்துகொள்ள முடியும். இதற்குள் இரண்டு மூன்று குழந்தைகளை பெற்றெடுக்கும் அப் பெண்ணை கைவிட்டு வேறு ஒரு இளவயது பெண்ணை திருமணம் செய்யும் பழக்கம் இங்குள்ள சில ஆண்களிடம் உள்ளது. இவ்வாறான இரண்டாவது திருமணத்திற்கு பல பெற்றோர்களும் உடந்தையாக செயற்பட்டு வருகின்றனர். இதனால் அந்த கைவிடப்பட்ட பெண்களும் அவர்களின் குழந்தைகளும் அநாதரவாக விடப்பட்டு பிள்ளைகளின் கல்வி, போஷாக்கு மற்றும் வாழ்வாதாரம் போன்ற அடிப்படைத் தேவைகள் கேள்விக்குறியாகின்றன. இதுவே இம்மக்களை மீண்டும் மீண்டும் சீரற்ற வாழ்க்கை முறைக்கு இட்டுச் செல்வதற்கு ஒரு காரணியாக அமைகிறது.

## பாடசாலை இடைவிலகல்

பாட்டாளிபுரம் அ.த.க. பாடசாலை அங்குள்ளது அந்தப் பாடசாலையில் மாணவர்களின் வருகை குறைவு. பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்களில் குளங்களில் மீன்பிடித்தல், மரங்களில் ஏறி விளையாடுதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடும் மாணவர்கள் பாடசாலைக்கு செல்வதில்லை. இதனால் இக்கிராமம் தோன்றிய காலம் முதல் கல்விப் பொதுத்தராதர சாதாரணதரம் வரை கல்வி கற்ற மாணவர்கள் 20 பேரைத் தாண்டியதில்லை. தற்போதுதான் ஒரு மாணவர் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகி கற்று வருகின்றார். இந்த மாணவர்களை பாடசாலைக்கு அனுப்ப பல அமைப்புக்கள் மற்றும் கிராமத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர்கள், பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள் தற்போது ஈடுபட்டு வருகின்றனர். இதற்கும் பெற்றோர்களின் ஒத்துழைப்பு இல்லை என கவலையடைகின்றனர்.

ஏன் பாடசாலைக்கு பிள்ளைகள் செல்வதில்லை என பெற்றோரை வினவினால் பாடசாலை சீருடை தைக்கவில்லை, அப்பியாசக் கொப்பிகள் வாங்கவில்லை, மற்றும் காலை உணவு கொடுக்கக் காசு இல்லை என்பதை மட்டும் கூறும் பெற்றோர் கல்வியின் தேவை தொடர்பான எதுவித விழிப்புணர்வின்றிக் காணப்படுகின்றார்கள். அத்துடன் பாடசாலை மாணவர்களை பராமரிக்க வேண்டிய தாய்மார் மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிப் பெண்களாக சென்றுள்ளமையும் இதற்கான காரணமாகும்.

## போக்குவரத்து பிரச்சினை

பாட்டாளிபுரத்தில் இருந்து மூதூருக்கான 15 கிலோமீற்றர் தூரத்தில் பெரும்பாலும் காடுகளும் இராணுவ முகாம்களுமே காணப்படுகின்றன. இங்கு செல்வதானால் மோட்டார் சைக்கிள், துவிச்சக்கர வண்டி, முச்சக்கரவண்டி போன்றவற்றில் செல்வதுதான் உசிதம். வீதியின் நிலை சீராக இல்லை. தற்போது மழைகாலம் என்பதால் மிகவும் கஷ்டப்பட்டு தமது பயணங்களை மக்கள் மேற்கொண்டு வருகின்றனர். மேலும் அவசரமாக நோயாளி ஒருவரை மூதூர் வைத்தியசாலைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு செல்வதானால் 1000 ரூபா பணம் இல்லாமல் முச்சக்கர வண்டியில் கொண்டு செல்ல முடியாது. இரவு வேளையென்றால் அதுவும் முடியாது யானைகள் வீதிகளை கடப்பதால் அவை அவர்களை தாக்கும் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

மேலும் வழிப்பறித் திருடர்கள் நடமாட்டமும் இப்பகுதியில் உண்டு. இவ்வாறு இரண்டு வருடங்களுக்கு முன்னர் கட்டைபறிச்சான் கிராமத்தை சேர்ந்த ஆசிரியையிடம் வழிப்பறியில் ஈடுபட்ட ஒருவனால் நகைகள் திருடப்பட்டு கொலை செய்யப்பட்டு சடலம் புதரில் எறியப்பட்டிருந்த சம்பவமும் இந்த வீதியிலே இடம்பெற்றது. தற்போது ஒரு வருடமாக பஸ் ஒன்று சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றது. இதுவும் காலை 7.30இற்கு புறப்பட்டால் காலை 9.00 மணிக்கு மூதுரை வந்தடையும். பின்னர் 11 மணிக்கு மூதூரில் இருந்து புறப்பட்டு 1 மணிக்கு பாட்டாளிபுரத்தை வந்தடைகிறது. இந்த பஸ் பழுதடைவதும் பஞ்சராவதும் அதிகம். காரணம் வீதி சீராக இல்லாமை என கிராம மக்கள் தெரிவித்தனர்.

## குடிநீர்ப் பிரச்சினை

இக்கிராமத்தில் குடிநீராக நிலத்தடி நீரையே பாவிக்கின்றனர் அதற்காக இங்கு அமைக்கப்பட்ட குழாய் கிணறுகள் நீண்டநாள் பாவனையின் பின் சரியான பராமரிப்பின்மை மற்றும் தேய்மானம் காரணமாக சில பழுதடைந்து காணப்படுகின்றன. அத்துடன் நாட்டில் சமீபகாலமாக ஏற்பட்ட வரட்சியின் போது இந்தக் குழாய்க் கிணறுகளின் நீர்மட்டமும் குறைந்தமையால் குடிநீர்த் தட்டுப்பாடு நிலவியது. அவ்வேளை மூதூர் பிரதேச செயலகத்தால் பவுசர் மூலம் நீர் விநியோகிக்கப்பட்டது. ஆயினும் தற்போது சில தினங்களாக பெய்துவரும் மழை வீழ்ச்சி அவர்களுடைய குடிநீர்ப் பிரச்சினையை தீர்க்கக்கூடும். எவ்வாறாயினும் இக்கிராமத்தில் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகமாக காணப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த மாதமும் கூட சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டு ஒருவர் உயிரிழந்துள்ளார். அத்துடன் மேலும் இவ்வாறு பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் ரா. கிருஷ்ணபிள்ளை என்பவரை சந்திக்கக் கூடியதாக இருந்தது. இவர் வேறு ஒரு நோய்க்கு சிகிச்சை பெறும் நோக்கில் வைத்தியரை அணுகிய சந்தர்ப்பத்திலேயே இவருடைய நோய் கண்டறியப்பட்டுள்ளது. இவர் தொடர்ந்து தற்போது சிகிச்சை பெற்று வருகின்றார். இவ்வாறு இனங்காணப்படாது எத்தனை பேருக்கு இந்நோய் ஏற்பட்டுள்ளது என தெரியவில்லை. இது தொடர்பாக சுகாதாரத் திணைக்களம் கவனம் செலுத்த வேண்டும்.

## இயங்காத வைத்தியசாலை

இக்கிராமத்தில் சகல வசதிகளுடனும் கூடிய வைத்தியசாலை ஒன்று உள்ளது. இந்த வைத்தியசாலையானது. 2011ஆம் ஆண்டில் யுனிசெப் நிதிஉதவியுடன் எகேட் கரிட்டாஸ் நிறுவனத்தால் அமைத்து கொடுக்கப்பட்டது. இந்த வைத்தியசாலையானது வெளிநோயாளர் பிரிவு மற்றும் நோயாளர் விடுதி மகப்பேற்று அறை போன்ற சகல சேவைகளையும் வழங்கக் கூடிய கட்டிட வசதிகளை கொண்டுள்ளது அத்துடன் வைத்தியர் ஒருவர் அங்கு தங்கியிருந்து பணியாற்ற தேவையான வைத்தியர் விடுதி வசதியும் காணப்படுகின்றது. எனினும் இந்த வைத்தியசாலையில் 03 வருடங்களுக்கு மேலாக ஒரு வைத்திய சேவையும் நிரந்தரமாக இடம் பெறவில்லை.

அவ்வப்போது ஓரிரு வைத்திய முகாம்கள் மட்டுமே நடைபெற்றுள்ளது. அதுவும் மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளாக காணப்படுகின்றது. சாதாரண காய்ச்சல் முதல் பாரிய நோய்கள், விபத்து, பாம்புக்கடி, மகப்பேறு மற்றும் தொற்றா நோய்களுக்கான கிளினிக் வரைகூட இக்கிராம மக்கள் 15 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள மூதூர் வைத்தியசாலையையே நாட வேண்டிய மிகவும் கஷ்டமான நிலை காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விடயம் தொடர்பாக திருகோணமலையில் அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றின் ஒழுங்குபடுத்தலில் செயற்பட்டுவரும் பல கிராம முன்னோடிகளைக் கொண்ட அழுத்தக் குழுவொன்று கிழக்கு மாகாண சுகாதார அமைச்சரை சந்தித்து நிலைமையை விபரித்ததும் அமைச்சர் உடனடியாக ஓர் வைத்தியரை நியமிப்பதாக அக்குழுவினரிடம் வாக்குறுதி வழங்கியுள்ளார். இச் செய்தி அனைத்து பத்திரிகைகளிலும் வெளியாகியது. ஆயினும் அக்கிராமத்திற்கு நேராக சென்று பார்வையிட்ட பின்னர் தான் தெரிந்தது. இதுவரை அந்த வைத்தியசாலையில் அப்படி எந்த நல்ல விடயமும் நடைபெறவில்லை என்று. இவ்வாறு வாக்குறுதி அளித்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னரும் அம்மக்கள் வைத்தியரை எதிர்பார்த்து வாராந்தம் வைத்தியர் விடுதியையும் வைத்தியசாலை வளாகத்தையும் சிரமதானம் செய்து காத்திருக்கின்றனர்.

இவ்வாறு அடிப்படை வசதிகள் இன்றி பலதலை முறைகளாக வாழ்ந்து வரும் இக்கிராம மக்களின் வாழ்வியலிலும் இங்கு மேற்கொள்ளும் உட்கட்டுமானப் பணிகளிலும் முன்னேற்றம் ஏற்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். ஒருபுறம் மனித இனம் அசுர வேகத்தில் முன்னேறிவரும் உலகில் இவ்வாறு அடிப்படை வசதிகள் இன்றியும் நாட்டின் பிரஜைகள் அனுபவிக்க வேண்டிய உரிமைகளை இழந்தும் நாடோடி வாழ்க்கையினை மேற்கொள்ளும் இந்தப் பாட்டாளிபுரம் கிராம மக்களின் வாழ்வு வளம்பெற இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரச்சினைகளுடன் சம்பந்தப்பட்ட சகல அமைச்சுக்களும் திணைக்களங்களும் செயற்பட வேண்டிய தேவையுள்ளது.

ஞாயிறு தினக்குரல் 07 டிசம்பர் 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூதூர் கிழக்கு கூனித்தீவு நவரெட்ணபுரத்தின் மீள்குடியேற்றமும் அடிப்படைப் பிரச்சினைகளும்

மூதூர் கிழக்கு சம்பூர் கூனித்தீவு கிராமம் குடியேற்றப்பட்டு அவசரமாக மேற் கொண்ட கூனித்தீவு நாவலர் வித்தியாலயத்தின் குடிநீர்த்திட்டம் திறந்து வைக்கப்பட்ட அன்றைய ஒரு நாள் தவிர, இன்று வரை குடிநீர் கிடைக்கப்படவில்லை என பாடசாலையின் ஆசிரியர் ஒருவர் தெரிவித்தார். 2006ஆம் ஆண்டு 04ஆம் மாதம் 26ஆம் திகதி எறிகணைத் தாக்குதல் மூலம் தமது சொந்த நிலத்தை விட்டு விரட்டப்பட்ட சம்பூர் நவரெட்ணபுர மக்கள் அம் மக்களின் விடா முயற்சி மற்றும் தமிழ் அரசியல் பிரதிநிதிகளின் தொடர்ச்சியான அழுத்தமும் சர்வதேசத்தின் அழுத்தங்களும் சேர்ந்து மூதூர் பிரதேச செயலகத்தின் மேற்பார்வையில் சம்பூர் அனல் மின்சார நிலையத்தை சூழவுள்ள சில இடங்களிலும் மற்றும் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் சில கிராமங்களிலும் உள்ள குடியிருப்புக் காணிகளில் மக்கள் குடியேற்றப்பட்டனர்.

இந்த அடிப்படையில் அவசர அவசரமாக எவ்வித அடிப்படை வசதியும் பூர்த்தி செய்யப்படாத நவரெட்ணபுரம் கிராமம் 2013 பெப்ரவரி மாதம் 04ஆம் திகதி குடியேற்றப்பட்டது. இப் பகுதி மக்களின் அடிப்படை தேவைகளில் மிக முக்கியமானதாக காணப்படும் தி/மூ/ கூனித்தீவு நாவலர் வித்தியாலயம் எனும் 09ஆம் ஆண்டு வரையான வகுப்புக்கள் உள்ள பாடசாலை ஒன்றையும் திறந்து வைத்தனர்.

இந்தப் பாடசாலையானது யுத்தத்திற்கு முன்னர் மூன்று பெரிய கட்டடங்களையும் ஆசிரியர் விடுதிகளையும் கொண்ட பாடசாலையாக காணப்பட்டது. தற்போது ஒரே கட்டடத்தில் மட்டுமே இயங்கி வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும் 2014ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் அளவில் 5 மில்லியன் ரூபா செலவில் 4.5 கிலோமீற்றர் தூரம் குடிநீர் குழாய் பதித்து கொண்டுவரப்பட்ட குடிநீர்த் திட்டத்தில் திறப்புவிழாவன்று மட்டுமே குடிநீர் விநியோகிக்கப்பட்டது. அதிலிருந்து 04 மாத காலமாக குடிநீர் இல்லாது பாடசாலை மாணவர்கள் சிரமப்பட்டு வருகின்றனர்.

இதற்கான காரணத்தை ஆராய்ந்த போது சம்பூர் கடற்படை பயிற்சி முகாம் அமைக்கப்பட்டுள்ள சம்பூர் மக்களின் பூர்வீக காணி இடத்திலேயே இப்பகுதிகளுக்கான நீரை பம் செய்து அனுப்பும் மோட்டர் உள்ளது. இதற்கான மின்சாரத்தை கடற்படையினரே தற்போது வழங்க வேண்டும்.

எனினும், நீண்டகாலமாக அதனை பயன்படுத்தும் கடற்படையினர் மின்சார சபையினருக்கு பல மில்லியன் பணம் செலுத்த வேண்டியுள்ளது. ஆகவே, பாடசாலைக்கான குடிநீரை தாங்கிக்கு ஏற்றி விநியோகிக்க மின்சாரம் வழங்க கடற்படை அதிகாரிகள் மறுத்து வருகின்றனர் என பாடசாலை சமூகத்தினர் தெரிவிக்கின்றனர். எனவே 5 மில்லியன் செலவில் நிர்மானிக்கப்பட்ட குடிநீர்த்திட்டம் தற்போது பயனின்றி காணப்படுகின்றது.

யுத்தத்திற்கு முன்னர் போதிய குடிநீர்வசதியை கொண்டிருந்த நவரெட்ணபுர கிராமத்தின் குடிநீர் நிலையங்கள் தற்போது இல்லை. மேலும், இக்கிராமத்தில் 09 வருடங்களுக்கு முன் மக்கள் இடம் பெயர்வதற்கு முன்பே 16 வீடுகளில் தேசிய நீர் வழங்கல் அதிகாரசபையின் குடிநீர் குழாய் இருந்ததாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது 143 குடும்பங்கள் வாழும் இக்கிராமத்தில் 02 குடிநீர்க் கிணறுகள் மட்டுமே காணப்படுகின்றன. அதுவும் தனியார் காணிகளில் அவர்களின் சொந்தச் செலவில் அமைத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிணறுகளிலேயே பொது மக்கள் குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்து வருகின்றனர். சிலர் குறிப்பிடும் போது மழை காலம் என்றால் மழை நீரைப் பிடித்து சுடவைத்து அதனை நாம் எமது குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்து வந்தோம் எனவும் தெரிவித்தனர்.

இந்நிலையில் மூதூர் பிரதேச செயலகத்தால் கடந்த ஆண்டு ஏற்பட்ட வரட்சியின் போது பவுசர்களில் கொண்டு சென்று விநியோகித்த குடிநீர்த் திட்டமும் தற்போது 06 மாதங்களுக்கு மேல் நிறுத்தப்பட்டுள்ளமை மேலும் குடிநீர் தொடர்பான பிரச்சினையை இம் மக்களிடையே அதிகரிக்க வைத்துள்ளது.

போக்குவரத்து தொடர்பாக நாம் பார்ப்போமானால் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் சேவை இடம் பெறுகிறது. இது காலை 10 மணிக்கும் இரண்டாவது தடவையாக மாலை 2 மணிக்கும் இடம் பெறுகிறது. மாலையில் போக்குவரத்து சேவை பொரும்பாலும் நிச்சயமாக எதிர்பார்க்க முடியாது. என்பதுடன், இந்த போக்குவரத்து பிரச்சினையால் 09ஆம் ஆண்டுக்கு மேல் கல்வி கற்கும் மாணவர்கள் தான் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். சாதாரணமாக நவரெட்ணபுரத்தில் இருந்து மூதூருக்கு சென்று வர முச்சக்கரவண்டிக்கான செலவு 800 ரூபா அளவில் செலவாகும். இந்த செலவை ஈடுசெய்யும் அளவிற்கு தமக்கான வருமானம் இங்கு கிடைப்பதில்லை எனவும் கிராம மக்கள் கவலையடைகின்றனர்.

முன்னொரு காலத்தில் கூனித்தீவு நவரெட்ணபுரம் என்றால் தங்க நகை ஆபரணங்கள் செய்வதற்கு பெயர் பெற்ற கிராமமாகும். மாவட்டத்தில் மட்டுமல்லாமல் இலங்கை முழுவதும் உள்ள பலர் இங்குள்ள நகைத்தொழில் செய்யும் ஆசாரிகளின் பழுதில்லாத வேலைகளின் நுட்பத்திற்காக இங்கு வந்து தமது நகைகளை செய்துகொண்டு செல்வார்கள். எனவே அவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வச் செழிப்போடு இருந்த இக்கிராமம், தற்போது தொழில் இல்லாமல் திண்டாடுகிறது.

இங்கு இடம் பெறும் இந்திய வீட்டுத்திட்டத்தில் கூலியாட்களாக வேலை செய்து தமது வாழ்வாதாரத்தை நடத்திச் செல்லும் இக்கிராம ஆண்கள் இத்திட்டம் முடிவடைந்த பின்னர் தமது வாழ்வாதார தொழில் என்ன என்ற கேள்விக்கு விடை இல்லாது காணப்படுகின்றனர். இக்கிராம மக்களை குடியேற்றிய அரசு அவர்களுக்கு சொந்தமான நூற்றுக் கணக்கான விவசாய நிலங்களை உயர்பாதுகாப்பு வலயம் மற்றும் அனல் மின்சார நிலையம் என்ற போர்வையில் முடக்கி வைத்துள்ளது.

இவ்வாறான அடிப்படைப் பிரச்சினைகள் பலவற்றுடன் மூதூர் கிழக்கு குடியேற்றங்கள் அவசர அவசரமாக சர்வதேசத்தை திருப்திப்படுத்துவதற்காகவும் தமது அரசியல் ஆதாயத்திற்காகவும் நடைபெற்று வருகின்றதே தவிர, இதனால் அப்பகுதி மக்களின் உண்மையான தேவைகள் தீர்க்கப்படுவது கிடையாது.

பல்வேறு உயிர்ச்சேதம் உடமைகள் இழப்பு மற்றும் 08 வருட அகதி முகாம் வாழ்வு ஆகிய பாதிப்புக்களுக்கு முகம் கொடுத்து வந்த நவரெட்ணபுரம் மக்களின் உண்மையான நிலையை உணர்ந்து புதிய அரசு செயற்பட வேண்டும். அத்துடன், அவர்களுடைய வாழ்வாதாரத்திற்கு அடிப்படையாக காணப்படும் விவசாய நிலங்களையும் முழுமையாக விடுவிப்பதன் மூலமே தமது எதிர்கால வாழ்வை ஏனைய இலங்கைப் பிரஜைகள் போல இம்மக்களால் கட்டியெழுப்ப முடியும் என்பதே மறுக்க முடியாத உண்மையாகும்.

ஞாயிறு தினக்குரல் 22 மார்ச் 2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெருகல் இலங்கைத்துறை முகத்துவார மீனவர்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு கிட்டுமா?

கடல் உணவுகளில் மிகவும் சுவையானதும் அநேகரால் விரும்பப்படும் உணவில் ஒன்று இறால். இதை பிடித்து விற்று தமது வாழ்வாதாரத்தை இட்டுச் செல்பவர்கள் ஒருபுறம், இதனை உள்ளூர் சந்தைகள் முதல் வெளிநாட்டு சந்தைகள்வரை ஏற்றுமதி செய்து தமது வாழ்வை செல்வச் செழிப்பாக வைத்திருப்பவர்கள் மறு புறம். இந்த இறாலை தமது பாரம்பரிய முறையில் பிடித்து அதனை விற்று தமது அன்றாட தேவையை பூர்த்தி செய்துவரும் ஏழை மீனவர்கள் படும் பாடோ ஏராளம்.

திருகோணமலை மாவட்டத்தில் முகத்துவாரங்களிலும், களப்புக்களிலும் இந்த இறால் உற்பத்தி இயற்கையாகவே பல ஆண்டுகளாக இடம்பெற்று வருகின்றது. கடல் நீரும் நன்னீரும் கலக்கும் இடங்களில் முட்டையிட்டு இறால் குஞ்சுகள் உற்பத்தியாகும். இவ்வாறு திருகோணமலை மாவட்டத்தில் கொக்குளாய், இறக்கக்கண்டி, சாம்பல்தீவு, கட்டைபறிச்சான், உப்பாறு, இலங்கைத்துறை முகத்துவாரம் போன்ற இடங்களில் மீனவர்கள் தமது பாரம்பரிய மீன்பிடி முறைகளை பயன்படுத்தி இந்த இறால் பிடிக்கும் தொழிலை பல வருடங்களாக மேற்கொண்டு தமது ஜீவனோபாயத்தை நகர்த்தி வருகின்றனர்.

இவ்வாறு பல இடங்கள் திருகோணமலை மாவட்டத்தில் இருந்தாலும் "ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்" எனும் பழமொழிக்கு இணங்க கடந்த ஆட்சிக் காலத்தில் வரலாற்றை திரிபடைய வைத்து வந்த அரசின் கழுகுக் கண்ணில் சிக்கி (லங்காபட்டுண) என்ற பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ள இலங்கைத்துறை முகத்துவாரத்தில் இந்த இறால் பிடித்தலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள 4000 ஏழை மீனவர்களின் பிரச்சினையை நாம் நோக்குவோம்.

இந்த மீனவர்கள் இறால் பிடிப்பதற்காக பாரம்பரிய முறையில் பயன்படுத்தி வந்த தொட்டாணி முறை எனப்படும் முறையை தடை செய்யப்பட்ட மீன்பிடி முறை என அறிவித்து இந்த முறையை நிறுத்துமாறு கடற்தொழில் திணைக்கள அதிகாரிகளின் அறிவுறுத்தலுக்கு அமைய கடற்படையினர் தடை செய்து வருகின்றனர். இந்த தொட்டாணி முறை எனப்படுவது களப்பிலே தடிகளை ஊன்றி இவற்றை சுற்றி நீருக்குள் சிறிய கண் உள்ள வலைகளை விடுவது இதன்போது ஆற்று நீர் கடலுடன் சேரும் போது ஆற்றில் உள்ள இறால் கடலுக்கு செல்வதை இந்த தொட்டானி வலைகளில் பிடிக்கப்படும் முறையே இது. இந்த முறையை விட்டால் வேறு எந்த முறையிலும் எமக்கு இறால் பிடிப்பதில் ஈடுபட தெரியாது என மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆனால், இலங்கை மீன்பிடி தொடர்பான சட்டத்தின் 99ஆம் பிரிவில் 03ஆம் இலக்கத்தில் உள்நாட்டு நீர்நிலைகளில் 3.5 இஞ்சி அளவு மற்றும் 85 மில்லிமீற்றர் கண் உள்ள வலைகளை பயன்படுத்தி தொழிலில் ஈடுபடுவது தடை செய்யப்பட்டுள்ளது என அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப் படுகின்றது. ஆயினும், மிக நீண்ட காலமாக இந்த சட்டம் அமுலில் இருந்தும் இந்த பாரம்பரிய தொழில் முறையையே மேற்கொண்டு வந்தும் தமது தொழிலில் வீழ்ச்சியோ அல்லது கடல் வளத்திற்கு பாதிப்பு எதுவுமே ஏற்படவில்லை. வருடாந்தம் ஒவ்வொரு சீசனுக்கும் எமது தொழிலும் வருமானமும் அதிகரிக்கவே செய்கின்றது என மீனவர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

திருகோணமலை மாவட்ட ஈச்சிலம்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள இலங்கைத்துறை முகத்துவாரம் களப்பில் இறால் பிடிக்கும் தொழிலை நம்பி ஒவ்வொரு சீசனுக்கும் 10 கிராமங்கள் வாழ்கிறது. இவை உப்புறல், சீனன்வெளி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறுக்காமுனை, புன்னையடி, இலங்கைத்துறை மற்றும் இலங்கைத்துறை முகத்துவாரம், கல்லடி போன்ற கிராமங்களாகும்.

50 வயதுடைய இந்த இறால் பிடிக்கும் தொழிலை மேற்கொள்ளும் மீனவர் ஒருவர் தெரிவிக்கும் போது எனது தந்தை இந்த தொழிலை எனக்கு கற்றுத் தந்தார். நானும் இதே தொழிலை மேற்கொள்கின்றேன் எனது பிள்ளைகளும் இந்த தொழிலை மேற்கொண்டு வருகின்றனர். இதனை தடை செய்தால் எமக்கு எந்த வருமானமும் ஈட்ட முடியாது. இந்த நிலத்தில் விவசாயமும் மேற்கொள்ள முடியாது. இது உப்பு நிலம். ஆழ்கடலுக்கு சென்று மீன் பிடிக்க போதிய உபகரணங்கள் மற்றும் பொருளாதார வசதிகள் எம்மிடம் இல்லை. எனவே நாம் பல தலைமுறைகளாக இந்த களப்பு தொழிலை நம்பி வாழ்கின்றோம்.

ஒவ்வொரு சீசனுக்கும் நாம் உழைக்கும் வருமானத்தில் எமது அன்றாட செலவு போக மேலதிகமான பணத்தை சேமித்து அதை தங்க நகைகளாக செய்து வைத்துக் கொள்வோம். அடுத்து வரும் சீசன் இல்லாத காலத்தில் இந்த நகைகளை விற்று அல்லது அடகு வைத்து எமது அன்றாட தேவைகளை பூர்த்தி செய்து கொள்வோம் என தெரிவித்தார்.

பாம் பவுண்டேசன் எனும் அரசசார்பற்ற நிறுவனம் ஒன்று களப்புக்களை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கையில் பாரிய நிதியுடன் கூடிய திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தவுள்ளது. அதன் நிமித்தம் அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட தடை செய்யப்பட்ட தொழில் முறைகளை நிறுத்த கடல் தொழில் திணைக்களம் முயற்சிப்பதாகவும் மீனவர் சங்க பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர். திட்டங்களை அரச சார்பற்ற நிறுவனங்களோ அல்லது அரசாங்கமோ எமது பகுதிகளில் நடைமுறைபடுத்தும் முன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பகுதி மக்களுடன் அல்லது சமூக அமைப்புகளுடன் தொடர்பு கொண்டு உண்மை நிலையை அறிய வேண்டும் எனவும் தெரிவித்தனர்.

எனினும் மீனவர் சங்கங்கள் மற்றும் உள்ளூர் அரசியல் பிரதிநிதிகள் மற்றும் கிழக்கு மாகாண மீன்பிடி அமைச்சு ஆகியோரின் முயற்சியால் கடற்தொழில் திணைக்களத்திடம் இந்த சீசன் வரை இவர்களுக்கு தமது பாரம்பரிய முறைப்படி இறால் பிடிக்க அனுமதிக்கப் பட்டுள்ளது. ஆயினும் இது ஒரு தற்காலிக தீர்வு மட்டுமே.

கடந்த கால யுத்தம் மற்றும் சுனாமி ஆகிய இரண்டு பாரிய பாதிப்புக்களுக்கும் முகம் கொடுத்த இம் மக்கள் தற்போது மெல்ல தமது தலையை தூக்க ஆரம்பிக்கும் போது இவ்வாறான நடவடிக்கைகள் அவர்களின் வாழ்வாதாரத்தில் மீண்டும் ஒரு பின்னடைவாகவே அமையும் பல தலைமுறைகளாக இத்தொழிலை மேற்கொண்டு வரும் மீனவர்களின் பிரச்சினைக்கு நியாயமான ஒரு தீர்வு அவசியம். இந்த முறைமை தடை செய்யப்பட்டால் இதற்கு ஒப்பான வேறு முறை ஒன்றை அறிமுகம் செய்து அதற்கான உபகரணங்களையும் பயிற்சிகளையும் இம் மீனவர்களுக்கு வழங்க வேண்டியது சம்பந்தப்பட்டவர்களின் கடமை. இல்லாவிடில் 4000 இற்கும் மேற்பட்ட இந்த களப்பு தொழிலை நம்பி வாழும் ஏழை மீனவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதே உண்மை.

ஞாயிறு தினக்குரல் 19 ஏப்ரல் 2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலையை ஆக்கிரமிக்கும் வெளிமாவட்ட மீனவர்கள்

திருகோணமலையில் எல்லாப் பருவ காலத்திலும் மீன் பிடித் தொழிலையே நம்பி வாழும் உள்ளூர் வாசிகளான மீனவர்களுக்கு, வெளி மாவட்டத்தில் இருந்து தமது பருவ காலத் தொழிலை முடித்து விட்டு மேலதிக வருமானம் ஈட்டும் நோக்கோடு வருகை தரும் வெளி மாவட்ட மீனவர்களின் வருகையால் பல்வேறு பாதிப்புக்களை அனுபவித்து வரும் உள்ளூர் மீனவர்கள் தமது எதிர்ப்புக்களை கடந்த அரசாங்கத்தின் ஆட்சியின் போது பகிரங்கமாக காட்ட முடியாமல் இருந்து, தற்போது ஏற்பட்டுள்ள நல்லாட்சி என்றழைக்கப்படும் ஆட்சியில் வெளிப்படுத்திய போதும், தமக்கான நியாயமான தீர்வு ஏற்படாமல் இப் போராட்டத்தில் ஈடுபட்ட 12 மீனவர் பிரதிநிதிகள் சிறை வாசம் அனுபவித்து வருகின்றனர்.

குறிப்பிட்ட வட்டத்தினர் மத்தியில் மட்டுமே தகவலாக தெரிந்த இந்த சம்பவத்தை வாசகர்களின் கவனத்திற்கு கொண்டுவருகின்றேன். திருகோணமலை மாவட்டத்திற்கு 1983ஆம் ஆண்டு நீர்கொழும்பு பகுதியில் உள்ள அன்னை மீனவர் சங்கத்தை சேர்ந்த 08 மீனவப்படகுகளுக்கு அப்போதைய மீன்பிடி அமைச்சு அனுமதி வழங்கியது. அந்நிலை தற்போது ஆண்டுக்கு சுமார் 750 படகுகளும் 2000இற்கு மேற்பட்ட மீனவர்களும் தொழில் நடவடிக்கையில் மேற்கொள்ளும் அளவிற்கு அதிகரித்துள்ளது. இவர்கள் நீர்கொழும்பு, புத்தளம், அலாவத்தை, கருக்குபனை போன்ற மீனவர்கள் வசிக்கும் பிரதேசத்தில் இருந்து தமது பருவகால மீன்பிடியானது முடிவடைந்த பின்னர், முதலாளிகளிடம் கடனாக பணம் பெற்று அந்த கடனுக்கு பதிலாக தாம் பிடிக்கும் மீன்களை கடன் பெற்ற முதலாளிகளிடமே கொடுத்து அவர்கள் நிர்ணயிக்கும் விலையிலே பணத்தை பெறுவது என்ற ஒப்பந்தத்தின் அடிப்படையில் வருகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரும் மீனவர்கள் திருமலையின் பல்வேறு கடற்கரையை அண்டிய இடங்களான குச்சவெளி, புல்மோட்டை, சலப்பையாறு, வெருகல் போன்ற பகுதிகளில் தற்காலிக கொட்டில்கள் அமைத்து தமது குடும்பத்தின் சிலரை அழைத்து வந்து தங்கி நின்று மீன்பிடியில் ஈடுபட்டு வருவது வழக்கம்.

ஆனால், உள்ளூர் மீனவர்களோ தாம் ஓர் ஆண்டு காலம் காத்திருந்து தமக்குரிய பருவ காலத்துக்கென தயாராகும் போது, வெளி மாவட்ட மீனவர்கள் அவர்களுடைய மாவட்டத்தில் தமது பருவகால தொழிலை நிறைவு செய்து உழைத்து அங்கு பருவ காலம் முடிவடைந்த பின்னர் தாம் பிடிக்கவுள்ள மீன்களை பிடிக்க வருவதால் தமது வருமானத்தில் சரிவு ஏற்படுகின்றது. மேலும், இவ்வாறு பலர் சேர்ந்து ஒரே பருவகாலத்தில் அதிகமான மீன்களைப் பிடிப்பதனால் மீன்வளம் குறைவடைந்து எதிர்காலத்தில் திருகோணமலை பகுதியில் மீன்கள் குறைவாகவே பிடிக்க முடியும். மேலும் வெளிமாவட்ட மீனவர்களின் மீன்பிடி முறையானது திருமலை மீனவர்களின் மீன்பிடி முறையில் இருந்து வித்தியாசப்படுகிறது அவர்கள் தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்துகின்றனர். இது கடல் வாழ் ஏனைய உயிரினங்களையும் அழிக்கக் கூடியது என உள்ளூர் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் தற்காலிகமாக மீன்பிடியில் இவர்கள் ஈடுபடுவதனால் அவர்கள் நமக்கிடையே ஒழுக்கமான கலாசார முறைகளை பின்பற்றுவது அரிதாக காணப்படுகின்றது. மேலும் போதைவஸ்து பாவனைகள் அவர்களுக்கு இருப்பதுடன் அது தாம் குடியேறும் பகுதிகளுக்கும் பரவக்கூடிய சூழல் காணப்படுவதுடன் உள்ளூர் மக்களிடையே தவறான பழக்க வழக்கங்களும் ஏற்படுகின்றது போன்ற குற்றச் சாட்டுக்களை மீனவர் சங்க பிரதிநிதிகள் முன் வைக்கின்றனர்.

இதன் காரணமாக இவ்வாறு தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடும் வெளி மாவட்ட மீனவர்கள் வருகையை முற்றாக தடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யுமாறு பல அதிகாரிகள் மட்டத்தில் எழுத்து மூலமாக கடந்த ஆண்டுகளில் கோரிக்கை விடுத்துள்ள நிலையிலும் அந்த நடவடிக்கைகள் தோல்வியடைந்ததால் தமது போராட்டத்தின் பரினாமத்தை மாற்றிய மூவினங்களையும் சேர்ந்த வெவ்வேறு கடற்றொழிலாளர் சங்கங்கள் அனைத்தும் இணைந்து தமது எதிர்ப்பினை கவனயீர்ப்பு நிகழ்வுகளாக நடத்தி வந்தன.

அதனிடையே புத்தளம் மாவட்ட கருக்குபனை பிரதேசத்தில் இருந்து வந்த 13 படகுகளும் 50இற்கு மேற்பட்ட மீனவர்களும் மார்ச் 04ஆம் திகதி நிலாவெளி இக்பால் நகர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டதுடன் இவ்விடயம் தொடர்பாக அனைத்து தரப்புடன் மார்ச் 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கலந்துரையாடி தீர்வு எட்டும் வரை வெளி மாவட்ட மீனவர்கள் எவரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என மாவட்ட அரசாங்க அதிபரின் அறிவித்தலுக்கு அமைய நிலைமை சுமூகமாக இருந்தது.

எனினும் மார்ச் 05ஆம் திகதி மாலை 6 மணியளவில் 200 படகுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டு நிலாவெளி பொலிஸ் நிலையத்தில் இருந்த படகுகள் கும்புறுப்பிட்டி பகுதிகளுக்கு எடுத்துச் செல்ல முயற்சித்ததை கேள்வியுற்று அப்பகுதி மீனவர்களிடையே அமைதியின்மை நிலவிய போது அப்பகுதியில் இருந்த படகு ஒன்று தீக்கிரையாக்கப்பட்டது. இச்சம்பவ இடத்துக்கு வருகை தந்த குச்சவெளி பொலிஸார் அங்கிருந்த முச்சக்கர வண்டி ஒன்றை சந்தேகத்தின் பேரில் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர். எனவே, அதற்கு எதிர்ப்புத் தெரிவித்த நாவற்சோலை கிராம மக்கள் நிலாவெளி பிரதான வீதியில் வீதியை மறித்து வீதி மறியல் போராட்டம் ஒன்றினை நடத்தினார்கள். இந்தப் போராட்டத்துடன் சம்பந்தப்பட்டதாக சந்தேகத்தின் பேரில் 5 மீனவர் பிரதிநிதிகள் கைது செய்யப்பட்டு விளக்க மறியல் சிறையில் உள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைத் தொடர்ந்து மார்ச் 11ஆம் திகதி புதன் கிழமை குச்சவெளி பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற பேச்சுவார்தையின் போது இதில் கலந்து கொண்ட கிழக்கு மாகாண முதலமைச்சர் நசீர் அகமட், பிரதி போக்குவரத்து அமைச்சர் எம். எஸ். தௌபிக், மாவட்ட அரசாங்க அதிபர் ஏ. ஏ. புஸ்பகுமார, குச்சவெளி பிரதேச செயலாளர் தயாபரன் ஆகியோருடன் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜெ. ஜெனார்த்தனன், மற்றும் மீனவர் சங்கத் தலைவர்கள் மற்றும் மீன் வியாபார முதலாளிமார்கள் உடன் நடைபெற்ற கலந்துரையாடல்களின் முடிவாக பின்வரும் தீர்மானம் எட்டப்பட்டது.

தற்போது வெளி மாவட்ட மீனவர்களால் தரித்து வைக்கப்பட்டுள்ள 38 மீன்பிடிப் படகுகளுடன் திருகோணமலை பொலிசில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 10 மீன்பிடிப் படகுகளும் சேர்த்து மொத்தமாக வெளி மாவட்டங்களுக்கான 48 மீன்பிடிப் படகுகள் இவ்வாண்டு இறுதிவரை மட்டும் மீன் பிடிப்பதற்கு அனுமதிக்கப்படும். இதன் பின்னர் எந்தவொரு வெளி மாவட்ட மீன்பிடிப் படகுகளும் இம்மாவட்டத்தில் மீன் பிடிப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டாது. என்பதை உங்களுக்கு உறுதிப்படுத்துகிறேன். என கிழக்கு மாகாண முதலமைச்சர் நசீர் அகமட், பிரதி போக்குவரத்து அமைச்சர் எம். எஸ். தௌபிக், மாவட்ட அரசாங்க அதிபர் ஏ. ஏ. புஸ்பகுமார மற்றும் குச்சவெளி பிரதேச செயலாளர் தயாபரன் ஆகியோர் தனித்தனியாக எழுத்துமூலமான கடிதங்களை மீனவர் சங்க பிரதிநிதிகளிடம் கையளித்து இந்த நிலமையை சுமுகமாக தீர்த்து வைத்தனர்.

ஆயினும் இப்பிரச்சினை தீர்வு பெறவில்லை. மார்ச் 16ஆம் திகதி அளவில் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட 48 படகுகளை விட மேலதிகமாக 20 படகுகள் குச்சவெளி மற்றும் வெருகல் பகுதிகளில் வெளி மாவட்ட மீனவர்களால் கொண்டுவரப்பட்டபோது இதனைக் கண்டு கொள்ளாமல் இருந்த அதிகாரிகளின் நடவடிக்கையால் மீண்டும் ஏற்பட்ட அசாதாரண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழலின் போது இன்னுமொரு படகு தீ வைக்கப்பட்ட சம்பவத்தில் சந்தேகத்தின் பேரில் குச்சவெளி பிரதேச சபை உறுப்பினர் உட்பட ஜாயா நகரைச் சேர்ந்த மீனவர் பிரதிநிதிகள் 7 பேர் கைது செய்யப்பட்டு குச்சவெளி சுற்றுலா நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டு மார்ச் 25ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டனர். இவ்வாறு தொடரும் இப்பிரச்சினையில் சில அரசியல் தலையீடுகளும் அதிகாரிகளின் அதிகார துஸ்பிரயோகங்களும் இருப்பதாக மீனவர் சங்க பிரதிநிதிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மீன்பிடி அமைச்சர் எம். ஜோசப் மைக்கல் பெரேராவும் புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்தவர். மீன்பிடி திணைக்கள உதவிப் பணிப்பாளரும் புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்தவர். இங்கு வரும் வெளி மாவட்ட மீனவர்களும் புத்தளம் மாவட்டம் என்பதனால் இப்பிரச்சினை நீடித்த வண்ணமே செல்கிறது. தற்போதைய சூழலில் அனுமதிக்கப்பட்ட 48 மீனவ படகுகளை விட 100க்கும் அதிகமான படகுகள் திருகோணமலைக்கு வந்தவண்ணமே உள்ளன.

இந்த மீனவர்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் அனைத்தும் காற்றோடு கரைந்து விட்டது. இவர்களுடைய பிரச்சினையில் பெரும்பாலான அரசியல் பிரதிநிதிகளும் அதிகாரிகளும் முன்னுக்கு பின் முரணாகவும் பராமுகமாகவும் இருப்பது இந்த மீனவர்கள் மத்தியில் பெரும் ஏமாற்றத்தையும் அதிருப்தியையும் அளித்துள்ளது. எனினும் உள்ளூர் மீனவர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு சம்பந்தப்பட்ட அமைச்சும் அதிகாரிகளும் தகுந்த நடவடிக்கை எடுப்பதே இந்த நாட்டில் மலர்ந்துள்ளது நல்லாட்சி என்பதை உறுதி செய்யும்.

**ஞாயிறு தினக்குரல் 29 மார்ச் 2015**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடன் வழங்கும் நிறுவனங்களின் வருகையும்: திருகோணமலை பெண்களின் வறுமையும்

திருகோணமலை மாவட்டமானது இலங்கையில் யுத்தம் நடைபெற்று ஏ-9 வீதி மூடப்பட்டிருந்த காலத்தில், வடக்கு மக்களில் அதிகமானவர்கள் தொழில் நிமித்தம் பல தேவைகளுக்காகவும் தலைநகருக்கு செல்வதற்காகவும் யாழ்ப்பாண கப்பலுக்காகவும் திருகோணமலையில் தரித்து நின்று பல்வேறு தேவைகளை பூர்த்தி செய்து வந்ததாலும், அவர்கள் அதிகமான பணம் கொடுத்து தமது அவ்வாறான தேவைகளை தீர்த்ததாலும் இவை இம் மாவட்டத்தில் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பதற்கு அன்று ஓர் காரணமாக அமைந்தன.

வீட்டு வாடகை, விற்பனை நிலையங்களின் வாடகை மற்றும் உணவுப் பொருட்களின் விலை, தங்குமிட விடுதிகளின் வாடகை என்பவற்றில் அதிக பணம் கொடுத்தும் இவர்கள் தேவையை பூர்த்தி செய்தனர். இங்கு பூர்வீகமாக வாழ்ந்து வந்த மக்கள் இவ்விலை வாசி ஏற்றத்தால் பாதிக்கப்பட்டனர். திருகோணமலை நகரசபை எல்லைக்குள் பெரும்பான்மையாக தமிழ் மக்கள் காணப்பட்ட போதும் இங்கு வர்த்தகத்தில் ஈடுபடுபவர்கள் மட்டக்களப்பு மற்றும் காத்தான்குடி பிரதேசங்களைச் சேர்ந்த முஸ்லிம் சகோதரர்கள் ஆவர். இவர்கள் ஏற்கனவே இருந்த அந்த விலை உயர்வை சாதகமாக பயன்படுத்தினார்கள். இதனால் தான் திருகோணமலை வந்தாரை வாழவைக்கும் பூமியாக எல்லோராலும் கூறப்படுகின்றது.

இவ்வாறு முழு இலங்கையிலும் வாழ்க்கைச் செலவு கூடிய ஒரு மாவட்டமாகக் காணப்படுகிறது திருகோணமலை. தற்போது யுத்தத்திற்கு பின்னரான இந்தத் தேக்கநிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார சூழலில் மீண்டும் ஒரு பிரச்சினை தலை தூக்கி உள்ளதை அவதானிக்க முடிகிறது.

அப்பிரச்சினை இன்று பலரும் சிக்கித் தவிக்கும் கடன் சுமையாகும்.

திருகோணமலை மாவட்டத்தில் செலின்கோ, எல்ஓஎல்சீ, பெரன்டினா, சீசீஎப், கிராமிய அபிவிருத்தி வங்கி, கொமர்ஷல் கிரடிட், கென்றிச்ட், நேசன் லங்கா, பிரேக், சேவாலங்கா, சமுர்த்தி வங்கி, நெக்டப் கடன் திட்டம் என பத்துக்கும் அதிகமான கடன் வழங்கும் நிறுவனங்கள் கடன் வழங்கி வருகின்றன.

இவர்கள் ஒவ்வொரு கிராமங்களுக்கும் சென்று வாராந்த, மாதாந்த முறையில் அறவிடும் கடன்களைக் கொடுத்து வருகின்றனர். சாதாரணமாக வாரத்தில் 7 நாட்களில் 5 நாட்கள் கடன்களை மீள செலுத்த வேண்டிய நிலையில் 100க்கு 80 வீதமான கிராமங்களில் மக்கள் சிக்கி உள்ளார்கள். மேலும் மாதம் முழுவதும் வேலை செய்து நாளுக்கு 1000 ரூபா வீதம் சம்பாதித்தாலும் மாதம் 30 ஆயிரம் ரூபா வருமானம் பெறும் குடும்பமானாலும் கூட 38 ஆயிரம் ரூபாவை கடனாக செலுத்தும் குடும்பங்களை நான் இக்கட்டுரைக்காக தரவு சேகரிக்கும் போது கண்கூடாகக் காணக்கூடியதாக இருந்தது. இவ்வாறு நாளுக்கு நாள் கிராமிய பொருளாதாரம் வடித்து எடுக்கப்பட்டு வட்டி எனும் புதிய பெயருடன் தலைநகருக்கு செல்கிறது. இதனால் மக்கள் போஷாக்கான உணவினை உட்கொள்ளவே யோசிக்க வேண்டியநிலை பல கிராமங்களில் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான கடனை பெறுபவர்களில் அநேகர் அன்றாடக் கூலிகளாகவே இருக்கிறார்கள். இவர்கள் தங்களுடைய நாளாந்த வருமானத்தை வாரத்தின் ஐந்து தினங்களும் இவ்வாறான கடன்களுக்காக செலுத்தினால் இக்குடும்பத்தின் உணவு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகளின் கல்வி மற்றும் ஏனைய செவுகளுக்கு என்ன செய்வார்கள் என நீங்களே சற்று சிந்தித்துப் பாருங்கள்.

இக்கடனைப் பெறுபவர்கள் அனைவரும் சுய தொழில் ஒன்றை மேற்கொள்வதாக கடன் வழங்கும் நிறுவனத்துக்கு தெரிவித்துத்தான் அதனை பெறுகின்றார்கள். ஆனால் கடன் பெறுபவர்களில் 90 வீதமானவர்கள் இதை செவ்வனே மேற்கொள்வதில்லை என்பது கடன் வழங்கும் நிறுவனங்களுக்கும் நன்கு தெரியும். இவர்கள் கடன் வழங்கும் முறையில் பெரிதாக எவ்வித ஆவணங்களும் கோரப்படுவது கிடையாது என்பதனால் ஆடம்பரச் செலவுக்கு பணத் தேவை உள்ளவர்களும் சரி, வறுமை காரணமாக கடன் பெறுபவர்களும் சரி இந்தப் படுகுழிக்குள் விழுகின்றனர்.

இவ்வாறு கடன் வழங்கும் நிறுவனங்களில் இருந்து கடனை பெறுபவர்கள் யாரென பாரத்தால் அநேகர் எவ்வித தொழிலுக்கும் செல்லாது திருமணமான குடும்பப் பெண்களாக இருக்கின்றனர். இவர்களை நான்கு, ஐந்து பேர் கொண்ட குழுவாக கட்டமைத்து ஒருவருக்கு பிணையாளராக மற்றவரின் கையொப்பத்தை பெற்று, ஆறு ஏழு பக்கங்களுடைய ஒப்பந்த பத்திரம் ஒன்றில் கையொப்பத்தை வாங்குவதுடன் நிறுத்தி விடாது, இக்குடும்பத்தை சேர்ந்த யாராவது ஒரு ஆணின் கையொப்பம் மற்றும் கைவிரல் அடையாளம் என்பனவும் பெறப்பட்டு, பல நிபந்தனைகளுக்கு மத்தியில் இக்கடன் தொகை இருபத்தைந்தாயிரத்தில் இருந்து ஆரம்பித்து மூன்று இலட்சம் வரை வழங்கப்படுகிறது.

இவ்வாறு கடனைப் பெற்ற திருகோணமலையின் புறநகர் பகுதியில் ஒரு கிராமத்தைச் சேர்ந்த 43 வயதுடைய பெண் ஒருவர் கருத்து தெரிவிக்கும் போது, நான் கிழமை லோன் 3உம், மாத லோன் 3உம் என மொத்தம் 6 லோன்களை எடுத்திருந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு இந்த லோனை எடுத்தும் பெரிதாக பொருளாதாரப் பிரச்சினையை தீர்க்க முடியவில்லை. கடனை மீள செலுத்த ஆரம்பித்த காலத்தில் மிகவும் கஷ்டப்பட்டேன். எனது கணவரின் வருமானத்தை மட்டும் வைத்து இந்தக் கடனை செலுத்த முடியாமல் இருந்தது. இதனால் நானும் ஒரு பாடசாலையில் சத்துணவு சமையல் வேலைக்கு சென்று வருகிறேன். அதில் கிடைக்கும் நாள் கூலியின் மூலம் எனது கிழமை லோன் மூன்றையும் தற்போது கட்டி முடித்து விட்டேன்.

இப்போது மாத லோன் 3 மட்டுமே உள்ளது. இதில் சில கடன் நிறுவனங்களில் வட்டி குறைவு. அவர்களின் அணுகுமுறையும் நன்று. அதனால் அவர்களிடம் லோன் பெறவும் விரும்புகின்றேன். ஆயினும், கிழமை லோனை எடுத்து சிக்கிக் கொள்ள வேண்டாம் என என் போன்ற சகோதரிகளுக்கு கூற விரும்புகின்றேன். இதன் மூலம் எந்த முன்னேற்றத்தையும் அடைய முடியாது. ஒரு கடை போட்டால் கூட வியாபாரம் செய்து கடனை கட்டலாம் என நினைத்தாலும் இரண்டு மாதத்தில் கடையில் எந்தப் பொருளையும் மீண்டும் கொள்வனவு செய்ய பணம் இருக்காது. இறுதியில் கடையையும் மூடிவிட்டு கடனையும் கட்ட முடியாமல் கஷ்டப்பட வேண்டிய நிலை உருவாகும். முன்பெல்லாம் எமது கிராமத்தில் லோன் எடுத்தவர்கள் உடுப்புக் கடைக்கும் நகைக்கடைக்கும் ஐஸ்கிரீம் கடைக்கும் சென்று வருவார்கள். ஆனால் இப்போது ஒரு கடனை எடுத்து இன்னுமொரு கடனை கட்ட வேண்டிய நிலையில் உள்ளனர். இதனால் மீண்டும் கடனில் மூழ்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை உருவாகின்றது என தமது கருத்தை தெரிவித்தார்.

தொடர்ந்து இப்பிரச்சினையை நோக்குவோமானால் கடனை பெற்றவர்கள் இக்கடனை செலுத்தும் போது வாராந்தம் இடம்பெறும் கடன் கொடுத்த நிறுவனங்கள் நடத்தும் கூட்டங்களுக்கு தவறாது சமூகம் தந்து பணத்தை செலுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். தவிர்க்க முடியாத காரணங்களான வைத்தியசாலைக்கோ, மரண வீட்டுக்கோ, பிள்ளையின் கல்வி தொடர்பான செயற்பாட்டுக்கோ செல்வதானால் கூட கட்டுப்பணத்தை வேறு ஒருவரிடம் கொடுத்து விட்டு கடிதம் மூலம் சம்பந்தப்பட்ட நிதி நிறுவன முகாமையாளருக்கு தெரியப்படுத்த வேண்டும்.

இவற்றுக்கெல்லாம் மேலாக இந்த கடன் சுமைக்குள் சிக்கியுள்ள மக்களின் நிலையை சாதகமாக பயன்படுத்தும் கிராமங்களில் உள்ள சிலர், நாள் வட்டிக்கு பணம் கொடுத்து வருகின்றனர். காலை 1000 ரூபா கொடுத்தால் மாலை 1200 ரூபா அறவிடப்படும். இந்த நிலைமையும் பல கிராமங்களில் இடம்பெற்று வருகின்றன.

இந்த கடன் சுமைக்குள் சிக்கியவர்கள் ஏதாவது ஒரு வழியில் இக்கடன் சுமைக்குள் இருந்து வெளியில் வந்து விடுவோம் என ஏதோ ஒரு வழியில் பணத்தை புரட்டி முழுத் தொகையையும் செலுத்தி இக் கடனில் இருந்து மீள்வோம் என்று முயற்சித்தாலும் கூட முடியாது. ஏற்கனவே அவர்கள் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி குழுவின் அனைவருமே ஒருமித்து முழுப்பணத்தையும் (ஐவரின் பணமும்) செலுத்தினாலே அது சாத்தியம், எனவே இதில் இருந்து மீளவும் முடியாது பலா் தவிக்கிறார்கள்.

இன்று வடக்கு - கிழக்கு கிராமியப் பெண்களின் முன்னேற்றம் முழு இலங்கையுடன் ஒப்பிடும் பொழுது மிகக் குறைவானதாகவே காணப்படுகின்றது. அதனை மேலும், முடக்கும் நோக்குடனும் வடக்கு கிழக்கு சமூகத்தினர் கடன் சுமையிலே சிக்கித் தவிக்கும் போது ஏனைய முன்னேற்றம் தரும் புதிய விடயங்கள் மற்றும் தமது உரிமை, கல்வி, தொழில்சார் முன்னேற்றம் என்பனவற்றை சிந்திக்காது முடங்கி விடுவார்கள் என்பதற்கான திட்டமிட்ட சதியாகக் கூட இந்தக் கடன் வழங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனங்களின் வருகை இருக்கக் கூடும் என சமூக ஆய்வாளர்கள் எதிர்வு கூறுகின்றனர்.

பெண்ணொருவர் வாரத்தில் 5 தினங்களும் இக்கடனை செலுத்துவதற்காக பணம் தேடுவதிலேயே தனது நேரத்தை செலவிடுவதனால், இப்பணத்தை ஏற்பாடு செய்ய பலரிடமும் மீண்டும் கடனினைப் பெறுகின்றாள். இவ்வாறு பணத்துக்காக அலைந்து திரியும் இந்தப் பெண்ணினால் குழந்தைகளின் கல்வி, உணவு மற்றும் பழக்கவழக்கம் என்பவற்றில் கவனத்தை செலுத்த முடியாமல் போகும். தினமும் உழைத்து உழைத்து அப்பணத்தை கடன் வழங்கும் நிறுவனத்துக்கே செலுத்துவதனால் அந்த வீட்டு ஆணுக்கும் வாழ்வில் ஒரு விரக்தி ஏற்படுகின்றது. இதனால் குடும்பப் பிரச்சினை ஏற்படுவதுடன் சில குடும்பங்கள் பிரிந்தும் வாழ்வதை காண முடிகின்றது.

ஒரு கடன் வழங்கும் நிறுவனத்தின் அறவிடும் உத்தியோகத்தர் தன்னை பலருக்கு முன் வைத்து கடும் சொற்களால் திட்டி விட்டார் என்பதற்காக திருகோணமலை தேவாநகர் பகுதியில் ஒரு பெண் தனது இரண்டு குழந்தைகளுக்கும் விஷம் கொடுத்துவிட்டு தானும் விஷம் அருந்தி தற்கொலைக்கு முயன்ற விடயம் சில மாதங்களுக்கு முன் இடம்பெற்றது. மேலும், உவர்மலைப் பகுதியில் கடன் சுமை காரணமாக தனது மூன்று பிள்ளைகளையும் வீட்டில் வைத்து பூட்டிவிட்டு கணவன், மனைவி ஆகிய இருவரும் 3 தினங்கள் தலைமறைவில் இருந்ததும் பசியினால் அழுத குழந்தைகளின் அழுகுரல்களைக் கேட்ட அயலவர்கள் குழந்தைகளை மீட்ட சம்பவம் மற்றும் குச்சவெளிப் பகுதியில் பெண் ஒருவர் தூக்கிட்டு தற்கொலை செய்தமை இவ்வாறான சம்பவங்கள் அன்றாடம் இடம்பெற்று வருகின்றன.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் கடந்த காலங்களில் இயங்கி வந்த பல அரச சார்பற்ற நிறுவனங்கள் பல பொருளாதார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரீதியான தேவைகளை பூர்த்தி செய்து வந்தன. அப்போது மக்களுக்கும் இந்தளவுக்கு கடன் சுமை இருக்கவில்லை. ஆயினும், அந் நிறுவனங்களால் நாட்டு மக்களுக்கும் நாட்டின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் என வெளியேற்றிய அரசு தற்போது வரையறையற்ற விதத்தில் பல பினான்ஸ் மற்றும் லீசிங் கம்பனிகளுக்கும் அனுமதி வழங்கி மக்களை கடன் சுமைக்கு தள்ளுவது எந்த வகையில் நியாயமாகும்?

குறிப்பாக போருக்கு பின் இந்தக் கடனின் தாக்கம் இரு வேறுபட்ட கோணங்களில் ஆராயப்படுகின்றது. ஒரு புறம் பேரினால் பாதிக்கப்பட்ட உழைப்பாளிகளை இழந்த பெண்களின், சிறார்களின் நிலைமை அவர்களை வறுமை நிலைக்கு தள்ளியுள்ளது. மற்றையது தம் வருமான மூலங்களான நெற்செய்கை நிலங்கள், கால்நடைகள், சொத்துக்கள் என்பவற்றை இழந்தவர்கள் தமது நிலைமையை மீளவும் கட்டி எழுப்பும் போது பல சவால்களுக்கு முகம் கொடுத்து இவ்வாறான கடன் சுமைக்குள் சிக்குகின்றார்கள்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட குடும்பகளுக்கு விசேட அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் அவர்களின் வாழ்வில் முன்னேற்றத்தைக் கொண்டுவருவது அரசின் தலையாயக் கடமையாகும். அதை விடுத்து இவ்வாறு கடன் வழங்கும் நிறுவனங்களை வடக்குக் கிழக்குக்கு அனுமதிப்பதன் மூலம் அவர்களை மேலும், நெருக்கடிக்குள் கொண்டுவருவது மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதிப்பதற்கு ஒப்பான செயலாகும்.

அண்மையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் மாவட்ட செயலகம் அரசாங்க அதிபரின் மேற்பார்வையில் இவ்வாறு கடன் வழங்கும் நிறுவனங்கள் தொடர்பான சிறந்த தீர்மானங்கள் மேற்கொண்டு செயற்படுத்தியும் வருகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைந்த பட்சம் அத்தீர்மானங்களையாவது திருகோணமலையிலும் நடைமுறைப்படுத்தலாம் அல்லவா? தீர்மானங்கள் சிலவற்றை இங்கு பார்ப்போமானால் மக்களுக்கு வழங்கப்படும் கடனில் 5% -12% வரையான வருடாந்த வட்டி அறவிடப்பட வேண்டும். வாராந்த வட்டி அறவிட முடியாது. மத்திய வங்கியின் ஒழுங்கு விதிகளுக்கு ஏற்பவே கடன் வழங்க வேண்டும்.

வெறுமனே கம்பனிப் பதிவுகளை வைத்து கடன் வழங்க முடியாது. கடன் வழங்குதலை பிரதேச செயலகம், கிராம சேவகர், அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். மாதாந்தம் பிரதேச செயலகங்களில் இடம்பெறும் ஒருங்கிணைப்புக் குழு கலந்துரையாடலில் நிதி வழங்கும் நிறுவனங்களை நிர்வகிப்பவர்கள் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும் என்பனவே அத் தீர்மானங்களின் சிலவாகும்.

எனவே, இக்கடன் சுமையில் இருந்து மக்களை மீட்க சம்பந்தப்பட்ட அரச தரப்பினர் ஒழுங்குபடுத்தப்பட்ட முறைமை ஒன்றினை தோற்றுவிப்பதன் மூலமும் தொடர்ச்சியான கண்காணிப்பின் மூலமுமே இப்பிரச்சினைக்கான தீர்வுகளை மேற்கொள்ள முடியும்.

ஞாயிறு தினக்குரல் 22 ஜீன் 2014





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்ட விரோத மணல் அகழ்வால் மூதூர் இறால்குழி கிராமம் பாதிப்பு

ஒவ்வொரு வருடமும் ஏற்படும் சிறிய மழையாலும் கூட வெள்ளம் ஏற்பட்டு கிராமம் முழுவதும் தமது பாடசாலையை அகதி முகாமாக செயற்படுத்தி எவ்வித சுயதொழில் முயற்சிகளையும் மேற்கொள்ள முடியாமல் நிவாரணம் வழங்கும் அரச சார்பற்ற நிறுவனம் மற்றும் அரசாங்கத்தின் அனர்த்த முகாமைத்துவ பிரிவில் சமைத்த உணவை எதிர்பார்த்து காத்திருக்கும் நிலை முன்னொருபோதும் இல்லாத அளவிற்கு திருகோணமலை மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள இறால்குழி கிராமத்திற்கு ஏற்பட்ட காரணம் என்ன?

தமது கிராமத்தில் உள்ள நன்னீரோடையில் இடம் பெறும் சட்டவிரோத மணல் அகழ்வால் இந்த அவலம் ஏற்பட்டு இக்கிராமமே பாதிக்கப்படுவதாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர். இலங்கையை வளமான நாடாக வைப்பதற்கு உயிர் நாடியாக இருக்கும் மகாவலி கங்கையானது திருமலையில் தான் கடலோடு சங்கமிக்கின்றது என்பது அனைவரும் அறிந்தது. ஆனால் அவ்வாறு சங்கமிக்கும் ஆறுகளில் என்ன நடக்கின்றது என்பதை அறிந்திருக்க வாய்ப்பில்லை.

அட்டன் பீட பூமியில் உற்பத்தியாகும் மகாவலி கங்கையானது திருகோணமலையில் பல இடங்களில் சங்கமிக்கின்றது.

இவ்வாறு கடலுடன் சங்கமிக்கும் இறால்குழியின் கிளையாற்றில் ஒன்றே இந்த நன்னீரோடை எனப்படுவது. இதில் வழங்கப்பட்ட அனுமதியை விட நூறு மடங்கு அதிகமான அளவிற்கு சட்டவிரோத மணல் அகழ்வு இடம் பெறுவதனால் ஒவ்வொரு முறையும் வெள்ளத்தால் பாதிக்கப்படும் முதலாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமமாகவும் இது காணப்படுவதுடன் இறால்குழி ஆற்றினால் இன்னும் சிறிது காலத்தில் தமது கிராமம் அரிக்கப்பட்டு, இறால்குழி கிராமத்தில் நாம் வாழ முடியாது என கிராமத்தின் பூர்வீக குடிமக்கள் கவலையடைகின்றனர்.

2009ஆம் ஆண்டிலிருந்து இந்த மணல் அகழ்வானது இடம் பெற்று வருகிறது. மணல் அகழ்விற்கு மூதூர் பிரதேச செயலகமானது மூவருக்கு மட்டுமே அனுமதி வழங்கியுள்ளது. இதில் இரண்டு முஸ்லிம்கள் ஒரு சிங்களவர், அவர்களுக்கு மொத்தமாக 235கியூப் மணல் மட்டுமே மாதம் ஒன்றிற்கு அகழ முடியும் என்ற அனுமதியே அது. இதையும் நன்னீரோடையில் 35 கியூப், பரவிப்பாய்ந்தான் ஆற்றில் 100 கியூப், முள்ளியோடையில் 100 கியூப் என்பதே அனுமதியாகும். இந்த மணலை ஆற்றில் இருந்து அள்ளிவர அனுமதிக்கப்பட்ட படகுகள் மூலம் ஒரே நாளில் 100 கியூப் மணலை அகழ்வதாக பொது மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். கொடுக்கப்பட்ட அனுமதிக்கு மாறாக சட்ட விரோதமாக நடவடிக்கைகள் இங்கு இடம்பெற்று வருவதாக கிராம அபிவிருத்தி சங்க பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர்.

எனினும் கொடுக்கப்பட்ட அனுமதியினை விட அளவிற்கு அதிகமான மணல் அகழ்வு நன்னீரோடையில் இடம் பெற்றமையால் அவ் ஆற்றுப்பகுதி ஆழமாகியமையால் மீன்கள் இனப்பெருக்கம் செய்யக் கூடிய சூழல் இல்லாது போனதால் அதிகமான மீன் வளம் அற்றுப் போய் காணப்படுகிறது. எனவே, அப்பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டு வந்த நூற்றுக்கும் அதிகமான ஏழை மீனவர்களின் தொழில் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

மேலும் விவசாயம் செய்யப்படும் ஆற்றுப் பகுதிகள் சுமார் 10 அடி ஆழமாக மாற்றமடைந்துள்ளமையால் கடல் மட்டம் உயர்வடைந்து ஆற்றுப் பகுதிகள் தாழ்ந்து போனதால் கடல் நீர் உட்புகும் நிலை உருவாகியுள்ளது. எனவே விவசாய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடவடிக்கையும் பாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இக்கிராமத்தின் நில அமைப்பு மிகவும் தாழ் இறங்கியதால் சாதாரண சிறு மழைக்கு கூட தமது கிராமத்தில் வெள்ளம் ஏற்படுகின்றது. என கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் பல முறை மூதூர் பிரதேச செயலாளர் மற்றும் பல அதிகாரிகளுக்கு கிராம அபிவிருத்தி சங்கத்தால் கடிதங்கள் மூலம் தெரியப்படுத்தியும் எவ்வித தீர்வும் எட்டப்படாத நிலையில் சென்றமாதம் இவ்விடயத்தை கிழக்கு மாகாகண சபை உறுப்பினர் ஜெ. ஜெனார்த்தனன், கு. நாகேஸ்வரன் மற்றும் மூதூர் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் நாகேஸ்வரன் ஆகியோரை அழைத்து கிராம மக்கள் கலந்துரையாடல் ஒன்றை நடாத்தி பிரச்சினையை தெரியப்படுத்தினார்கள்.

எனவே, உடனடியாக இவ்விடயமானது கிழக்கு மகாணசபை உறுப்பினர் ஜெ. ஜெனார்த்தனனால் மாவட்ட அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதை அடுத்து இப்பகுதியில் மணல் அகழ்விற்கு ஏப்ரல் 02ஆம் திகதி முதல் தற்காலிகமான தடை விதிக்கப்பட்டுள்ளதுடன் இப் பிரச்சினையை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு அரசாங்க அதிபரினால் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வழங்கப்பட்ட அனுமதியை மீறி அளவுக்கு அதிகமான மணல் அகழ்வில் ஈடுபடும் வரை எவ்வித மேற்பார்வையும் இல்லாது இருந்த மூதூர் பிரதேச செயலகம் மற்றும் பொலிசார் தொடர்பில் பொது மக்கள் அதிருப்தி நிலையிலேயே உள்ளனர்.

எனினும் வழங்கப்பட்ட அனுமதியை விட சட்ட விரோதமாக செயற்பட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதுடன் 13 படகுகள் மட்டுமே




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் மேலதிகமாக இருந்த 40க்கும் அதிகமான படகுகள் மற்றும் அதன் உரிமையாளர்களின் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டியது சம்பந்தப்பட்டவர்களின் கடமை அல்லவா?

அத்துடன் இந்த மணல் அகழ்வுக்கு எதிராக செயற்பட்ட கிராமத்தின் சமூகமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் கிராம முன்னோடிகளுக்கும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட நிலையில் இவ்விடயத்துடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயத்தில் அக்கறை செலுத்தி உரிய நடவடிக்கையை துரிதமாக எடுப்பது சாலச்சிறந்தது.

ஞாயிறு தினக்குரல் 12 ஏப்ரல் 2015





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடியல் காணும் சம்பூர்

இறுதிப் போரின் ஆரம்பப் புள்ளியாக விளங்கிய மாவிலாறு யுத்தத்தின் போது தமது சொந்த இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து அகதி வாழ்வு வாழ்ந்து வந்த சம்பூர் மக்கள், தங்களது சொந்த மண்ணில் குடியேறுவதற்காக கடந்த அரசாங்கத்தால் ஏமாற்றி அழைத்துவரப்பட்ட நிலையில், தங்களது ஊருக்கு அருகாமையிலே பத்து ஆண்டுகள் இலவு காத்த கிளி போல வாழ்ந்த வாழ்க்கைக்கு இன்று விடிவு கிட்டியுள்ளது.

சம்பூர் மக்களுக்குச் சொந்தமான 1,600 ஏக்கர் காணியை முதலீட்டு ஊக்குவிப்பு வலயம், உயர் பாதுகாப்பு வலயம், சம்பூர் அனல்மின் நிலையம் மற்றும் இராணுவ முகாம்கள் என்ற போர்வையில் சுவீகரித்துக் கொண்ட மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கடந்த அரசாங்கம், அக்காணிகளை சுவீகரித்ததற்கான வர்த்தமானி அறிவித்தலையும் விடுத்திருந்தது.

இந்நிலையில், புதிதாக ஆட்சிக்கு வந்துள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்தின் 100 நாட்கள் வேலைத்திட்டம் முடிவடைந்த பின்னர், சம்பூர் காணியை அம்மக்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கும் வகையில், முன்னாள் ஜனாதிபதியின் வர்த்தமானி அறிவித்தலை இரத்து செய்து, அக்காணியை சம்பூர் மக்களுக்கு வழங்கும் நோக்கிலான வர்த்தமானி பிரகடனத்தையும் வெளியிட்டார்.

இதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு காரணமாக, ஜனாதிபதி சிறிசேனவின் வர்த்தமானி அறிவித்தலுக்கு கடந்த 15ஆம் திகதி, உயர் நீதிமன்றத்தினால் வழங்கிய இடைக்காலத் தடைக்கு எதிர்ப்பு தெரிவித்து சம்பூர் மக்கள், சாகும்வரை உண்ணாவிரதப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டமொன்றை நடத்தியதுடன் அந்த போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து மாவட்டம் தழுவியதான ஆர்ப்பாட்டங்கள் பலவும் நடத்தப்பட்டன.

இந்நிலையில், கடந்த 21ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு வரவிருந்த சம்பூர் விவகார வழக்கு, 20ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்பட்டு இடைக்காலத் தடையும் நீக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, சம்பூர் மக்கள் 21ஆம் திகதியன்றே தமது சொந்த நிலங்களை பார்வையிட சம்பூர் நோக்கிப் புறப்பட்டனர். தங்களது காணிகளைப் பார்வையிட்ட அவர்கள், காணிகளின் எல்லைகளையும் குறித்துக் கொண்டனர். சிலர் அன்று முதலே தங்களது காணிகளைத் துப்பரவு செய்யவும் ஆரம்பித்தனர்.

1,600 ஏக்கரில் 818 ஏக்கர் காணிகளையே அரசாங்கம் விடுவித்துள்ள நிலையில், அனல்மின் நிலையம் மற்றும் கடற்படை முகாம்கள் உள்ள காணிகள் அம்மக்களிடம் கையளிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எவ்வாறாயினும், விடுவிக்கப்பட்டுள்ள பகுதியில் சம்பூர் மக்களை முழுமையாக குடியேற்ற மீள்குடியேற்ற அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

இந்நிலையில், கிழக்கு மாகாண சபையின் கல்வி மற்றும் மீள்குடியேற்ற அமைச்சும் அம்மக்களை குடியேற்றி அடிப்படைத் தேவைகளை செய்வதற்கான திணைக்களங்களின் தலைவர்களை உள்ளடக்கிய சம்பூர் அபிவிருத்தி குழு ஒன்றையும் கடந்த 22ஆம் திகதியன்று அமைத்து செயற்படுத்தி வருகின்றது.

ஏற்கனவே தேர்தல் காலங்களிலும் ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகளின் வருகையின் போதும் அவசர அவசரமாக குடியேற்றப்பட்ட கூனித்தீவு, சூடைக்குடா போன்ற




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமங்களுக்கே இன்னும் முழுமையான அடிப்படை வசதிகள் செய்யப்படாமல் உள்ளன.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த கிழக்கு மகாணசபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் கு. நாகேஸ்வரன், "சம்பூர் மக்களை அவர்களின் சொந்த நிலங்களில் குடியேற்றுவதற்காக புதிய அரசாங்கம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்ட போதும் சில தனியார் நிறுவனங்களும் இனவாத அரசியல் நடத்தும் கட்சிகளும் இம்முயற்சிக்கு குந்தகம் விளைவிக்கும் நோக்குடனேயே செயற்பட்டுவருகின்றன" என்றார்.

**தமிழ் மிரர் - 2015**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்ட விரோத மீன்பிடி முறையால் பாதிக்கப்படும் திருகோணமலை வாழ் மீனவர்கள்

கடலில் உள்ள சிறிய மீன்களையும் இரைகள் வளரக் கூடிய இடங்களையும் அழித்துவிட்டு எதிர்காலத்தில் கடற்றொழில் மேற்கொள்ளும் சந்ததியினர் தமது ஜீவனோபாய தொழிலுக்கு என்ன செய்வார்கள்? இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கையில் கடல் வளத்தை நாசம் செய்யும் விசமிகளை கைது செய்து இந்த கடல் வளத்தை பாதுகாக்குமாறு பல்வேறு மக்கள் மயப்பட்ட போராட்டங்களை முன்னெடுத்தும் அது திருகோணமலை மாவட்டத்தை பொறுத்தவரை கைகூடவில்லை என தெரிவிக்கிறார் திருகோணமலை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தின் தலைவர் பியால் கேமசிறி.

திருகோணமலை மாவட்டமானது கரையோர மாவட்டம் என்பது அனைவரும் அறிந்ததே. இங்குள்ள மக்களின் பிரதான தொழிலாக காணப்படுவது கடற்றொழிலும் விவசாயமும் ஆகும். பல்லாயிரம் ஆண்டுகளாக பிரதான வருமானம் தரும் தொழிலாகவும் மாவட்டத்தின் பொருளாதார அடித்தளமுமாக காணப்படுவது இந்த கடற்றொழில். திருகோணமலையில் மூவினங்களைச் சேர்ந்த 64 கடற்றொழிலாளர் சங்கங்களின் 12,802 மீனவர்கள் இந்த கடலை நம்பி வாழ்கின்றனர்.

இந்த நிலையில் ஏனைய மாவட்ட மீன் பிடிமுறையில் இருந்து திருகோணமலை மீன் பிடி முறை சற்று வித்தியாசமானது அதாவது ஏனைய மாவட்டங்களில் நைலோன் வலை, தங்கூசு வலை என்பனவற்றினை பயன்படுத்தி மேற் கொள்ளப்படும் மீன் பிடி முறையால் மீன்கள் உடனடியாக இறந்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் இறந்த நிலையிலேயே அதிகமான மீன்கள் கடல் நீரில் இருக்கும். மேலும் இந்த முறையினால் பிடிக்கும் மீன்களை வட்டார மொழியில் இரத்தம் சுட்டுப் போன மீன்கள் என்பார்கள். எனவே அவ்வாறான மீன்கள் சமையலுக்கு சுவையாக இருக்காது.

ஆனால் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள மீனவர்களில் ஆதியில் தமிழர்களால் மேற் கொள்ளப்பட்டது தூண்டில் மூலமான மீன் பிடி முறை. சிறிய வகை மீன்களான அயலைமீன் , கீரிமீன், சூரைமீன் போன்றவற்றிற்கும் சுறா மற்றும் ஓங்கில், மஞ்சள் சூரை போன்ற பெரிய மீன் வகைகளுக்கும் தூண்டில் தொழிலையே பயன்படுத்தி வந்தனர். எனினும் அது தற்போது பரவி மூவினத்தவரும் இத்தூண்டில் தொழிலையே மேற் கொண்டு வருகின்றனர். இவ்வாறு தூண்டிலில் பிடிக்கும் மீன்கள் இயல்பாகவே சமையலுக்கு சுவை அதிகமாகவும், பிடிக்கும் போது உடலில் காயப்படாமல் இருப்பதனால் எளிதில் பழுதடையாமலும் இருக்கும். எனவே இம் மீன்களுக்கு சர்வதேச அளவில் கூட நல்ல சந்தை பெறுமதி உள்ளது.

திருகோணமலை மாவட்ட கடலில் அதிகமான கண்ட மேடைகளும் பாறைகளும் காணப்படுவதனால் மீன்கள் பெருகுவதற்கும் இவற்றுக்கு தேவையான இரைகளான கடல் தாவரங்கள் வளர்வதற்கும் இங்கு அதிகமான வாய்ப்புக்கள் உள்ளன. இவ்வாறு திருகோணமலையில் உள்ள பொருளாதார வளத்தின் மிக முக்கிய பங்கு வகிப்பது இந்த கடற்றொழில். இதனை கிராமங்களில் பேச்சுவழக்கில் சொல்வார்கள் “திருகோணமலையில் எந்த ஒரு ஆதரவும் இல்லாதவரை கொண்டு போய் விட்டாலும் அவன் வாழ்ந்து விடலாம்” அதே போல் “திருகோணமலையில் வாழத் தெரியாதவன் எங்கும் வாழமாட்டான்” என்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படிப்பட்ட வளம் பொருந்திய மாவட்டத்திற்கும் மீன்பிடி முறைக்கும் கடல் வளத்திற்கும் இன்று ஒரு பெரும் ஆபத்து வந்து விட்டது. அந்த ஆபத்து தான் சட்டவிரோத மீன் பிடி முறைகளான சுருக்கு வலை முறைகளில் மீன் பிடியை மேற் கொள்வதனால் கடலில் உள்ள சிறு மீன் குஞ்சுகள் கூட சுருக்கு வலையில் சிக்குவதனால் அது வளர்ந்து பெரிய மீன்களாக வராது எவருக்கும் பயனில்லாது அழிந்து போகும். இவ்வாறே டைனமோட் பாவிப்பதனால் சிறிய மீன்கள் அழிந்து போகும் இதனால் ஒவ்வொரு சீசனுக்கும் இந்த தொழிலை செய்யலாம் என எதிர்பார்த்து தொழில் செய்யும் மீனவர்களின் வீடுகளிலே அடுப்பில் பூனை படுக்கும் நிலையை ஏற்படுத்தும்.

கடலில் தொடர்ச்சியாக மீன் உருவாகி வளர்ந்து அது பெருகினால் தான் மீனவர்களின் வாழ்வாதாரம் சீராக செல்லும். ஆனால் இவ்வாறு இயற்கைக்கு மாறாக சட்ட விரோத மீன் பிடி முறைகளின் மூலம் மீன் குஞ்சுகள் இறப்பதுடன் இது எவருக்கும் பயனில்லாது போகும். மேலும் டைனமோட் பாவிப்பதனால் கடலினுள் உள்ள பவளப் பாறைகள் சிதைவடைந்து மீன்களின் வாழ்விடங்கள், இரை மற்றும் இனப்பெருக்க சூழல் என்பன அற்றுப் போகிறது. எனவே கடலில் உள்ள மீன் வளம் குறைவடைகிறது.

திருகோணமலை மீனவர்களின் பாரம்பரிய மீன் பிடி முறை தூண்டில் தொழில். அதில் ஒரு நாளைக்கு சராசரியாக 100 கிலோ மீன் பிடித்தால் அவர்களுக்கு சாதாரணமான வருமானம் வரும். ஆனால் 1000 கிலோ மீன் ஒரே நேரத்தில் சுருக்கு வலை டைனமோட்டின் மூலம் பிடிக்கப்பட்டால் மீன்களை கொள்வனவு செய்யும் விலை குறைந்து விடும். எனவே எவ்வளவு மீனை அங்கீகரிக்கப்பட்ட முறைகளில் பிடித்தாலும் பிடிக்கும் மீனவர்களின் நிலை இறுதியில் செலவு செய்த எரி பொருள் செலவும் இல்லாது வீடு திரும்பும் துர்ப்பாக்கிய நிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய திருகோணமலை மீனவர்கள் உள்ளனர். எனவே எப்பாடு பட்டாவது இந்த நிலையை மாற்ற வேண்டும் என பொலிசார் மீன்பிடி திணைக்களம் மற்றும் கடற்படையினரின் உதவி கொண்டு இந்த எல்லோருக்கும் பாதிப்பைத் தரும் சட்டவிரோத முறையிலான மீன்பிடி முறையை இல்லாமல் செய்து விட வேண்டும் என கிராம மட்டத்தில் உள்ள கடற்றொழிலாளர் சங்க உறுப்பினர்கள் முயற்சி செய்தாலும் அவையும் பாரதூரமான உயிரிழப்புக்களைச் சந்தித்துள்ளது என்றார் திருக்கடலூர் மீனவர் சங்க பிரதிநிதி காளிராஜா கோகுல்ராஜ்.

அவர் தொடர்ந்து இவ்வாறு தனது கருத்தை முன் வைத்தார்.இதற்கு நல்ல உதாரணம் திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட சல்லி கிராமத்தில் இருந்து கடற்தொழிலுக்காக கடந்த 13.08.2015 இரவு கடலுக்கு மீன் பிடிக்க சென்ற அழகுராசா தங்கரூபன் (வயது-28) எனும் இளைஞன் இன்று வரை வீடு திரும்பவில்லை. அவர் கடலுக்கு சென்ற படகு, அவர் அணிந்திருந்த உடைகள் சில மற்றும் உடைக்கப்பட்ட தொலைபேசி சிம்காட் என்பவற்றை பொலிசார் மற்றும் கிராமத்து மக்கள் கடலில் அவர் சென்ற படகில் இருந்து கண்டெடுத்துள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை கடலுக்கு சென்றவர் திங்கட்கிழமை அதிகாலை 02 மணியளவில் தனக்கு சுருக்கு வலை தொழில் செய்பவர்களால் ஆபத்து என்னை அடித்து கொல்லப் போகிறார்கள் உடனடியாக வந்து காப்பாற்றுமாறு தனது நண்பர்களுக்கு கையடக்க தொலைபேசி மூலம் குறுஞ் செய்தி அனுப்பியுள்ளார். அதன் பின் அவருடைய தொடர்பு ரத்து செய்யப்பட்டு அவர் காணாமல் போயுள்ளார். அவரை கண்டு பிடித்து தருமாறு திருகோணமலை நிலாவெளி பிரதான வீதியை மறித்து ஆறாம் கட்டை எனும் இடத்தில் பொது மக்கள் மற்றும் மீனவர் சங்கங்கள் இணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26.08.2015 காலை 8.30 மணியளவில் ஆரம்பமான இந்த வீதி மறியல் போராட்டமானது 11 மணிவரை இடம்பெற்றது.போராட்டம் நடைபெற்ற நேரத்தில் அதனை நிறைவடைய வைக்க அவ்விடத்திற்கு வந்த பொலிஸ் உயரதிகாரிகளும் அரசியல்வாதிகளும் பல வாக்குறுதிகளை சொல்லி அந்த போராட்டத்தை நிறைவு செய்து வைத்தனர்.

ஆயினும் அந்த மீனவனுக்கு என்ன நேர்ந்தது என்று கூட அவர்கள் குடும்பத்தார் ஏற்றுக் கொள்ளக் கூடிய விசாரணை இடம் பெறவில்லை என மிகவும் விரக்தியான மன நிலையில் அவர் தெரிவித்தார்.

ஜமாலியா கிராமத்தைச் சேர்ந்த மீனவர் பீர்பானுஷா இர்ஷாத் அவர்கள் இந்த சட்ட விரோத மீன் பிடி முறையினை எவ்வாறாவது நிறுத்திவிட வேண்டும் என்ற எண்ணத்தில் பல்வேறு போராட்டங்களிலும் செயற்பாடுகளிலும் தன்னை இணைத்துக் கொண்டவர். இவர் இந்த சட்ட விரோத மீன் பிடி முறையால் ஏற்படும் பாதிப்புக்கள் சம்பந்தாக இவ்வாறு தெரிவிக்கிறார்.

சட்டவிரோத மீன்பிடி முறைகளில் ஒன்று லைட்கோஸ் சுருக்கு வலை. இது இரவில் மின் விளக்கு போட்டு சுருக்கு வலையிட்டு மீன் பிடிப்பது. இவ்வாறு இரவு நேரத்தில் வெளிச்சம் காட்டினால் சிறிய மீன்கள் மட்டுமல்லாது பூச்சிபுழுக்கள் கடலில் இருந்தாலும் இவையும் மேல் எழுந்து வரும். இதனை சுருக்கு வலை மூலம் பிடித்தால் சிறிய குஞ்சு முதல் அனைத்தும் அரித்து எடுக்கப்படும். இச் செயற்பாட்டால் எதிர் காலத்தில் மீன் இனங்களின் வடிவங்களை எமது சந்ததிகளுக்கு போட்டோவில் தான் காட்ட வேண்டும். இவ்வாறான மீன் பிடி மூலம் நேரடியாக பாதிக்கப்படுபவர்கள் சூல்லா தொழில் செய்யும் மீனவர்கள். நியாயமான முறையில் மீன்பிடிப்போரின் மீன்களின் விலை குறைவடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான மீன் பிடி முறையை திருகோணமலை மாவட்டத்தில் புல்மோட்டை, இறக்கக்கண்டி, நிலாவெளி மற்றும் ஜமாலிய போன்ற எமது பகுதி மீனவர்கள் சிலரும் மேற்கொண்டு வருகின்றனர் இதனை கட்டுப் படுத்த வேண்டிய சில அதிகாரிகள் தங்களுடைய சுயலாபத்திற்காக பராமுகமாக இருக்கின்றமை கவலையளிக்கின்றது என்றார்.

ஞாயிறு தினக்குரல் 01 நவம்பர் - 2015





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible]

[illegible]





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியரைப் பற்றி....



திருக்கோணமலை மாவட்டத்தின் நகர எல்லைக் கிராமமான காந்திநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவர் வடமலை ராஜ்குமார். இவரது இளமைக்காலத்தில் தனது சமூகத்தின் வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி பற்றி மிகுந்த அக்கறை கொண்ட இளைஞர்களில் இவரும் முன்னணி வகித்தார். அதனால் பாடசாலைக் கல்விக்குப் பின்னர் இந்து இளைஞர் மன்றத்தில் இணைந்து சமூகப்பணியில் காலடி வைத்தார்.

அக்காலத்தில் சமூக அபிவிருத்திசார் பல உயர்பயிற்சிகளை பெற்ற இவர் இளைஞர் அபிவிருத்தி அகத்தின் தோற்றத்தின் பங்காளியாகியிருந்தார்.

அகத்தில் இவரது திறமைக்கு வழங்கப்பட்ட களம் காரணமாக அகத்தின் திருக்கோணமலை மாவட்டக் கரையோர மீனவ சமூகத்தின் ஒருங்கிணைப்பாளராக செயற்பட்டு அவரது சமூக செயற்பாட்டையும் திறமையையும் வெளிப்படுத்தினார்.

அதன் பின்னர் காலப் போக்கில் விழுது அமைப்பின் திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்பு பணிக்கு மட்டுமல்லாது தனது கிராமம் சார்ந்த ஆலயம் உள்ளிட்ட பல கிராமியத் தலைமைத்துவத்தையும் தாங்கி சிறப்பாக செயற்பட்டார். இதனால் மாவட்டமறிந்தவரானார்.

இவ்வாறான சமூக அக்கறையும் விடா முயற்சியும் அவரை ஊடகத்துறைக்குள் தள்ளியது. இந்தத்துறையிலும் கூட தான் எடுத்த முயற்சியில் இடைவிடாது முன்னேறும் பாங்கினை அவர் நிருபித்தார். தினக்குரல். தினகரன். தமிழ்மிரர் எனப்பல ஊடகங்களுக்கு அறிமுகமான ஊடகராக மாறினார். இதன்பயனாக திருக்கோணமலை மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் இளம் தலைவராகவும் சில வருடாங்கள் பணியாற்றினார்.

ஒட்டு மொத்தத்தில் எடுத்துக் கொண்டபணியில் திறமை காட்டுமொருவர் என்பதனைச் சமூகப்பணியிலும் ஊடகப்பணியிலும் நிருபித்து இளம் சமூகத் தலைவராக மாறியுள்ளார்.

அதனடிப்படையில் தற்காலத்தில் திருக்கோணமலை மாவட்டத்தின் முக்கிய களங்களில் இவரும் தவிர்க்க முடியாதவராகிவிட்டார். இவ்வாறான அவரது வளர்சிக்கு இந்து இளைஞர் மன்றம். இளைஞர் அபிவிருத்தி அகம். மற்றும் விழுது அமைப்பு போன்ற அமைப்பு மற்றும் நபர்களும் களம் வழங்கியதன் பயனாக இன்றைய இந்த முன்னணி ஊடகவியலாளர் என்ற தரத்தை அவரது பிரத்தியேக திறமை காரணமாகவும் இவர் அடைந்துள்ளார்.

ISBN 978-955-43938-0-6

9 789554 393806

அன்புடன்
**பொ. சற்சிவானந்தம்**
சிரேஸ்ட ஊடகவியலாளரும்,
மனித உரிமைகள் செயற்பாட்டாளரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org